# புதுமலர்

புதுமலர் பதிப்பகம்
ஈரோடு

**புதுமலர் - 3** சூலை - செப்டம்பர் 2023
திருவள்ளுவர் ஆண்டு 2054

ஆசிரியர் : **கண.குறிஞ்சி**
இதழ் முகவரி : : 6, முதல் வீதி, சக்தி நகர் மேற்கு,
திண்டல் (அஞ்சல்)
ஈரோடு 638012.
இதழ் தொடர்பு எண் : **94433 07681**
மின்னஞ்சல் : gana.kurinji@gmail.com
வடிவமைப்பு : புதுமலர்
தனி இதழ் : ரூ. 100
ஆண்டுக் கட்டணம் : ரூ. 400
மூன்றாண்டுக் கட்டணம் : ரூ. 1000

இதழுக்கான கட்டணம்
அனுப்பியவர்கள் உரிய தொகை
அனுப்பிய பிறகு, மறவாமல்
கீழ்க்காணும் தொடர்பு எண் மூலம்
அதன் விவரத்தைத் தெரிவிக்குமாறு
கனிவுடன் வேண்டுகிறோம்
இல்லாவிடின், இதழை
அனுப்புவதில் சிரமம் ஏற்படும்.

**புலனம் (வாட்ஸ்அப்) மூலம்**
**தகவல் தெரிவிப்பதை**
**உறுதியாகத் தவிர்க்கவும்**

ஆண்டுக்கட்டணம்
குறித்துத்தகவல் தெரிவிக்க
வேண்டிய தொடர்பு எண்:
94433 07681

**இதழின் பின்னட்டை உள்ளிட்ட பெரும்பான்மையான ஓவியங்களை வரைந்து உதவிய ஓவியர் சுந்தரன் அவர்களுக்கு நன்றி**

புதுமலர் இதழுக்கு ஆண்டுக் கட்டணம்
செலுத்த வேண்டிய வங்கிக் கணக்கு விவரம்

G. SHANMUGA SUNDARAM

INDIAN BANK, THINDAL BRANCH, ERODE

S/B A/C no. 7390 144 253 IFSC NO. IDIB000T202

**G Pay – 94433 07681 – G. Shanmuga Sundaram**

# உள்ளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| (1) இதழின் குரல் | 04 |
| (2) வழக்கறிஞர் ஹென்றி திபேன் பேட்டி | 12 |
| (3) சோசலிச அனுபவங்கள் : மார்க்ஸ் முதல் அம்பேத்கர் வரை **- யமுனா ராஜேந்திரன்** | 42 |
| (4) அம்பேத்கரிய விடுதலைக் கருத்தியல், அரசியலும்; அண்ணலின் பன்முகப் பரிமாணங்களும் **- வே.மு.பொதியவெற்பன்** | 57 |
| (5) ஒடுக்கப்பட்ட மக்களின் ஒப்பற்ற தலைவர் இரட்டைமலை சீனிவாசன் **- வாலாசா வல்லவன்** | 67 |
| (6) ஆவணங்களில் அடித்தளமக்கள் **- முனைவர் செ. இராசு** | 77 |
| (7) புதிய வரலாற்றைப் படைக்கச் சாதி என்னும் பழைய கழிவுகளை அழிப்போம்! **- பொழிலன்** | 89 |
| (8) கவிதைகள். **- கவிஞர். அழகன் கருப்பண்ணன், ரவி குமாரசாமி பொதிகைச் சித்தர்** | 99 |
| (9) பொதியவெற்பனின் மெய்யியல் சார்ந்த உரையாடல்கள் **- ஜமாலன்** | 101 |
| (10) ஆர் எஸ் எஸ் அமைப்பின் ஒருங்கிணைந்த பொய்ப்பரப்புரை **- காஞ்சா ஜலாயா செப்பர்டு, (தமிழில்) கலைவேலு** | 107 |
| (11) புதுமலர் பதிப்பகம் சார்பாக நூல் வெளியீட்டு விழா | 114 |
| (12) உங்கள் மனஓசை | 122 |
| (13) புதுமலர் இதழுக்கு ஆதரவு நல்கியோர் | 128 |



# இதழின் குரல்

கடந்த இரண்டு புதுமலர் இதழ்களும் அறிவுத்தளத்தில் பேசுபொருளாக மாறியது குறித்து மிக்க மகிழ்ச்சி.

வள்ளலாரின் முற்போக்குச் சிந்தனைகளைத் தாங்கி வந்த சனவரி-மார்ச்சு 2023 இதழ்களை வேண்டி இன்னும் கூட அழைப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு ஆளுநர் வள்ளலாரை “சனாதனத்தின் உச்ச நட்சத்திரம்“ என இழிவுபடுத்தியதன் வெளிப்பாடாகத்தான் இதைக் காண முடிகிறது. அதே போல் ஏப்ரல்-சூன் இதழில் தாய்மொழிகளைக் காக்கும் மொழிப் போராளி பஞ்சாப் பேராசிரியர் ஜோகா சிங் அவர்களின் விரிவான பேட்டியும் பலரின் கருத்தை ஈர்த்துள்ளது.

அதே போல் இந்த இதழில் சாதியொழிப்புப் போராளிகளான அம்பேத்கர், இரட்டைமலை சீனிவாசன் போன்ற ஆளுமைகள் குறித்த கட்டுரைகள் வெளியாகி உள்ளன. சாதி ஒழிப்புப் போரில் தங்களைக் கரைத்துக் கொண்டு களமாடிய இன்னும் பல சாதி ஒழிப்புப் போராளிகள் குறித்து விரிவாக எழுதப்பட வேண்டும். தொடர்ந்து வரும் இதழ்களில் அப்படிப்பட்ட கட்டுரைகள் இடம்பெறும்.

இந்தியச் சமூகத்தில் மிக மிக முக்கியமான எதிர்மறைச் சக்தியான சாதி அமைப்பு நம்மைச் சவாலுக்கு இழுக்கிறது. இந்தப் போரை, நாம் தொடங்கவில்லை அதேபோல் இந்த போர் நம்மோடு முடிவடையப் போவதும் இல்லை. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நம் சமூகத்தைச் சீரழித்து வரும் கொடும் நோய் இது. இருப்பினும் கால மாற்றங்களுக்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொண்டு நம் மண்ணில் ஊன்றி வளர்ந்து நிற்கிறது இந்தப் பிசாசு.

சாதியைத் தூக்கி நிறுத்த வர்ணாசிரம தர்மமும், சனாதனமும், வேதங்களும், புராணங்களும் வரிசை கட்டி நிற்கின்றன. அத்தோடு இப்பொழுது அரசதிகாரமும் இணைந்து கொண்டு “இரட்டை

எஞ்சின்'' வேகத்தோடு இயங்கி வருகிறது.

சாதியின் கொடுங்கரங்களால் அநியாயமாகப் படுகொலை செய்யப் பட்டவர்கள் குறித்து வரலாறு தொடர்ந்து பதிவு செய்து வருகிறது. ஹைதராபாத் பல்கலைக் கழகத் தலித் மாணவன் ரோகித் வெமூலா தற்கொலை செய்து கொள்ளும் முன்பு எழுதிய கடிதம் அதற்கோர் இரத்த சாட்சியாகும். "எனது பிறப்பே ஒரு சபிக்கப்பட்ட விபத்தாகும். எனது வாழ்க்கையே ஒரு சாபமாகும். எனது மரணத்திற்காக யாரும் கண்ணீர் சிந்த வேண்டாம். உயிரோடு இருப்பதைக் காட்டிலும் சாவு எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது'' எனும் அந்த ஒடுக்கப்பட்ட மாணவனின் மரண சாசனம் சாதியின் கொடூரத்தை வெளிச்சமிட்டுக் காட்டி நம் மனசாட்சியை உலுக்குகிறது.

கொஞ்சமோ சாதிக் கொடுமைகள்? அது மனித மலத்தை மற்றொரு மனிதனைத் தின்ன வைக்கிறது. ஒடுக்கப்பட்டவன் மீது மனச்சாட்சியே இல்லாமல் சிறுநீரைப் பொழிகிறது. சேரிகளில் வாழ்பவர்களின் குடிநீரில் மனித மலத்தைக் கரைக்கிறது. தலித் என்ற காரணத்தாலேயே பழைய செருப்பை நக்க வைக்கும் கொடுந் தண்டனையைக் கொடுக்கிறது. ஒரு தலித்தின் நிழல் தன் மீது பட்டுவிட்டது எனக் குற்றம் சாட்டி அவனை அடித்தே கொல்கிறது.

ஒரே குவளையில் தேநீர் அருந்தக் கூடாது, காலில் செருப்பு அணியக்கூடாது, கோயிலில் நுழையக் கூடாது, சாமி வரும் தேரை இழுக்கக் கூடாது, சைகிளில் போகக் கூடாது, நல்ல துணிமணிகள் அணியக் கூடாது, வண்டி வாகனங்கள் வைத்திருக்கக் கூடாது, ஊர்க் குளத்தில் குளிக்கக் கூடாது, பொதுக் கோயில்களில் சாமி கும்பிடக் கூடாது, பதவியில் இருந்தாலும் சமமாக உட்கார முடியாது, அலுவலகங்களில் கொடியேற்ற முடியாது, ஒரே இடுகாட்டில் புதைக்க முடியாது என எண்ணற்ற தடைகள் இந்த இருபத்தியோராம் நூற்றாண்டிலும் தொடர்வது நம்ப முடியாமல்தான் இருக்கிறது.

இவைகள் எல்லாம் எங்கோ வட நாட்டில் நடப்பவை அல்ல. நம் கண்ணெதிரே தமிழகத்திலேயே நடக்கிறது. கால் மேல் கால் போட்டு உட்கார்ந்த காரணத்தால் கச்சநத்தம் கிராமத்தில் மூன்று தலித்துகள் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். பட்டியலினத்தவரை அர்ச்சகராக நியமித்தது செல்லாது என உயர்நீதி மன்றமே தீர்ப்பளிக்கும் அவலநிலையும் தொடர்கிறது.

2021 ஆம் ஆண்டில் பட்டியல் சாதி மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிராகப் பதிவு செய்யப் பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 50,900. அதே போல், நாடு முழுவதும் மலக்குழியில் மரணம் அடைந்தவர்கள் எண்ணிக்கை 989. அதில் தமிழகத்தில்

மட்டும் மரணம் அடைந்தவர்கள் 55 என்பது அதிர்ச்சிக்குரியதாகும்.

தவிரவும், தமிழகத்தில் 87 வகையான தீண்டாமைப் பாகுபாடுகளும், 28 வகையான தீண்டாமைக் கொடுமைகளும் நிலவுவதாகத் தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் கணக்கெடுப்புக் குறிப்பிடுகிறது. மேலும் சனவரி 2016 முதல் திசம்பர் 2020 வரை 350 பட்டியலின மற்றும் பட்டியலினப் பழங்குடி மக்கள் கொல்லப் பட்டுள்ளதாகவும், இதில் 13 பேர் மட்டும் தண்டிக்கப்பட்டு, 229 வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதாகவும் மதுரை எவிடன்ஸ் நிறுவனம் தெரிவிக்கிறது.

இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 4000 தலித் பஞ்சாயத்துத் தலைவர்களில் 1200 பேர் சாதிப்பாகுபாடுகளுக்கு உள்ளாகின்றனர். தமிழகத்தில் 19 மாவட்டங்களில் 114 பட்டியலின ஊராட்சித் தலைவர்களிடம் ஒரு தனியார் அமைப்பு நடத்திய ஆய்வில், தமிழ்நாடு முழுவதும் 11 தலித் பஞ்சாயத்துத் தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர் நாற்காலியில் அமர முடியவில்லை. 45 ஊராட்சி மன்றங்களில் தலைவர்கள் கோயிலுக்குள்ளே நுழைய முடியவில்லை. விடுதலை நாளில், குடியரசு நாளில் 12 ஊராட்சிகளில் தேசியக் கொடியை ஏற்றக்கூடிய உரிமை பட்டியலின ஊராட்சித் தலைவர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. பட்டியலின மற்றும் பட்டியலினப் பழங்குடி மக்கள் கண்காணிப்புக்குழு ஆண்டுக்கு இரண்டு முறை கூட வேண்டும் ஆனால் 1995 முதல் 2018 வரை தமிழகத்தில் இது மூன்று முறை மட்டுமே கூடி உள்ளது.

தீண்டாமையின் உச்சமாக வேலூர் மாவட்டம் வாணியம்பாடிக்கு அருகிலுள்ள நாராயணபுரம் கிராமத்தில் ஆகஸ்டு 22 / 2019 அன்று நடைபெற்ற நிகழ்வைக் குறிப்பிடலாம். குப்பன் எனும் தலித்தினுடைய சடலத்தைப் புதைப்பதற்காகப் பாலத்தின் மேலிருந்து 20 அடி ஆழத்திற்குப் பிணத்தைத் தொட்டில் கட்டி இறக்கிப் பிறகு அங்கே புதைக்கப்பட்ட காணொலி தமிழகத்தை மட்டுமல்ல, இந்தியாவையே உலுக்கியது. உயர்த்தப்பட்ட சாதிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்போர் அவர்களுக்குச் சொந்தமான நிலத்தின் வழியே ஒடுக்கப்பட்ட மக்களின் பிணத்தைக் கொண்டு செல்வதற்கு அனுமதி மறுத்து விட்ட காரணத்தினால் இத்தகைய கொடுமை நடைபெற்றுள்ளது. வாழ்வில் மட்டுமல்ல சாவிலும் தீண்டாமை தொடர்கிறது.

இந்த வழக்கைத் தானாக முன்வந்து விசாரித்த உயர் நீதி மன்றம், “இறந்தவர்களின் சவத்தைப் புதைப்பதற்கு அனுமதி மறுப்பது ஏற்கத்தக்கதல்ல! அது அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது. கௌரவமாக வாழ்வதற்கு மட்டுமல்ல கௌரவமாக இறப்பதற்கும் கூட அனைவருக்கும் உரிமை உண்டு” எனச் சுட்டிக்

காட்டியுள்ளது. அதை விசாரித்த நீதிநாயகம் ஆர்.மகாதேவன் அவர்கள், பாகுபாடு இல்லாமல் அனைவரையும் ஒரே பகுதியில் புதைக்கத்தக்க இடுகாடுகளைத் தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கு உருவாக்க வேண்டும் எனப் பரிந்துரைத்தார். இதுதான் தமிழ்நாட்டின் இன்றைய நிலை.

சாதிக் கொடுமையில் மிகவும் பாதிக்கப்படுபவர்கள் பெண்கள்தான். அதிலும் இடைநிலைச் சாதியைச் சார்ந்த ஓர் ஆணைப் பட்டியலினப் பெண் காதலித்தாலோ / திருமணம் செய்து கொண்டாலோ, அல்லது இடைநிலைச் சாதியைச் சார்ந்த ஒரு பெண், பட்டியலின ஆணைக் காதலித்தாலோ / திருமணம் செய்து கொண்டாலோ இறுதியில் கொல்லப்படுவது என்னவோ பட்டியல் இனத்தைச் சார்ந்த பெண்ணாகவோ அல்லது ஆணாகவோதான் இருப்பார்கள். இதுதான் பொதுவான சாதி நீதியாக இருக்கிறது. தவிரவும், சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட கண்ணகி முருகேசன், நந்தீஸ் சுவாதி ஆகிய நான்கு பேரும் படுகொலை செய்யப் பட்ட அவலமும் நடந்தேறியுள்ளது. . சூரக்கோட்டை முத்து, உடுமலை சங்கர், தர்மபுரி இளவரசன் போன்ற சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்ட பட்டியலின இளைஞர்களும் படுகொலை செய்யப்பட்டனர். பட்டியலினப் பிரிவைச் சார்ந்த திருச்செங்கோடு கல்லூரி மாணவன் கோகுல்ராஜ் தன்னோடு பயிலும் உயர்சாதிப் பெண்ணோடு பழகிய ஒரே காரணத்திற்காகக் குரூரமாகக் கொல்லப் பட்டான். இந்த வழக்கை விசாரித்த நாமக்கல் மாவட்டக் காவல் துணைக்கண்காணிப்பாளரான பட்டியல் இனப் பிரிவைச் சார்ந்த விஷ்ணுபிரியா அவர்கள், பணித் தொல்லைகள் காரணமாகத் தற்கொலை செய்து கொண்டார் என்பது சாதிய இறுக்கம் எவ்வளவு கோலோச்சுகிறது என்பதைத் தெளிவாக்குகிறது.

தமிழகத்தில் காதல் தொடர்பான விஷயங்களில் ஆண்டுதோறும் 120 முதல் 150 வரை ஆணவப் படுகொலைகள் நடப்பதாக அறியப் படுகிறது. ஆனால் இவற்றில் சாதி ஆணவப் படுகொலைகளாகப் பதிவு செய்யப்படுவது மிகமிகக் குறைவாகும். ஆனால் ஓ.பன்னீர்செல்வம் அதிமுக முதலமைச்சராக இருந்த பொழுது ‘‘தமிழ்நாட்டில் ஆணவப் படுகொலைகளே நடக்கவில்லை’’ எனச் சட்டமன்றத்திலேயே கூசாமல் பொய் பேசினார்.

சாதி ஆணவப் படுகொலைகளைக் கண்டித்து நீதிமன்றங்கள் சிறந்த தீர்ப்புகளை வழங்கியுள்ளன. எடுத்துக்காட்டாக லதா சிங் (எதிர்) உ.பி.மாநில அரசு மற்றும் இன்னொருவர் (2006) 5 எஸ்.சி.சி.475 (ஏ.ஐ.ஆர். 2006 எஸ்.சி. 2522) வழக்கின் தீர்ப்பு இதில் மிகவும் முக்கியமானது.

‘‘சாதி அமைப்பு நாட்டைப் பீடித்துள்ள ஒரு சாபமாகும். அது

எவ்வளவு விரைவில் அழிக்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு நல்லது. உண்மையில் நமது நாட்டுக்கு முன்னாலுள்ள சவால்களை எதிர்த்து நாம் ஒன்றுபட்டுப் போராட வேண்டியிருக்கிற நேரத்தில், அது நாட்டைப் பிளவு படுத்திக் கொண்டிருக்கிறது. அதனால் சாதிகளுக்கு இடையிலான திருமணங்கள் உண்மையில் தேசிய நலனுக்கானவை. ஏனென்றால் அவற்றின் விளைவாகச் சாதி அமைப்பு அழியும். இருப்பினும் சாதிகளுக்கு இடையே திருமணம் செய்து கொள்ளும் இளம் ஆண்களும் பெண்களும் வன்முறை அச்சுறுத்தலுக்கு ஆளாகின்றனர் அல்லது உண்மையிலேயே அவர்களின் மீது வன்முறை செலுத்தப்படுகிறது என்று நாட்டின் பல பாகங்களிலிருந்து வருத்தத்திற்குரிய செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. எங்களுடைய கருத்துப்படி அத்தகைய வன்முறைச் செயல்கள் அல்லது அச்சுறுத்தல்கள் அல்லது துன்புறுத்தல் முற்றிலும் சட்டவிரோதமானவை. மேலும் அந்தச் செயல்களில் ஈடுபடுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். இது சுதந்திரமான சனநாயக நாடு. ஒரு நபர் ஆணோ பெண்ணோ வயது வந்தவர் ஆனதும், அவர்கள் விரும்புகிற பெண்ணையோ ஆணையோ திருமணம் செய்து கொள்ளலாம். அந்தப் பையன் அல்லது பெண்ணின் பெற்றோர் அத்தகைய சாதி கடந்த அல்லது மதம் கடந்த திருமணத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால், அதிகபட்சமாக அவர்கள் செய்யக் கூடியதெல்லாம் அந்த மகளுடனோ, மகனுடனோ சமூக உறவுகளைத் துண்டித்துக் கொள்ளலாம். ஆனால் அவர்கள் அச்சுறுத்துவதோ அல்லது வன்முறைச் செயல்களில் ஈடுபடுவதோ அல்லது வன்முறைச் செயல்களைத் தூண்டி விடுவதோ கூடாது. மேலும் அத்தகைய சாதி கடந்து அல்லது மதம் கடந்து திருமணம் செய்து கொள்வோரைத் துன்புறுத்த முடியாது. எனவே வயது வந்த ஒரு பையனோ பெண்ணோ, ஒரு வயது வந்த பெண்ணையோ ஆணையோ சாதி கடந்து அல்லது மதம் கடந்து திருமணம் செய்து கொள்வாரானால், அந்த இணையர் யாராலும் துன்புறுத்தப்படாமல் அல்லது வன்முறை அச்சுறுத்தலுக்கு அல்லது செயல்களுக்கு ஆளாகாதவாறு பார்த்துக் கொள்ளுமாறும், யாராவது தானாகவோ அல்லது பிறரைத் தூண்டி விட்டோ அத்தகைய அச்சுறுத்தல் அல்லது துன்புறுத்தலில் அல்லது வன்முறைச் செயலில் ஈடுபடுவாரானால், அத்தகைய நபர்கள் மீது குற்றவியல் நடைமுறைகளைத் தொடங்கி, சட்டத்தில் உள்ளவாறு கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் நாடு முழுவதும் உள்ள நிர்வாக / காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிடுகிறோம்‘‘ என்று உச்சநீதிமன்றம் திட்டவட்டமாக வழிகாட்டியுள்ளது.

மேலும் மற்றொரு ஆணவப் படுகொலை வழக்காகிய அசோக் குமார் தோடி (எதிர் ) கிஸ்வர் ஜகான் மற்றும் பிறர் குறித்த வழக்கில் சாதி கடந்து, மதம் கடந்து திருமணம் செய்து கொள்வோர் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி உள்ளது. மேலும் அத்தீர்ப்பில்

“ வயது வந்த ஒரு ஆணோ பெண்ணோ சாதி கடந்து அல்லது மதம் கடந்து திருமணம் செய்து கொண்டால், அவர்களுடைய திருமண வாழ்க்கை பாதிக்கப்படக்கூடாது அல்லது துன்புறுத்தப்படக்கூடாது. மேலும் யாராவது தானாகவோ அல்லது பிறரைத் தூண்டி விட்டோ அத்தகைய அச்சுறுத்தல் அல்லது துன்புறுத்தலில் அல்லது வன்முறைச் செயலில் ஈடுபடுவாரானால் அத்தகைய நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியது தொடர்புடைய அதிகாரிகளின் பொறுப்பாகும் ................................ ...........காவல் துறை அதிகாரிகளுக்கு அவர்களுடைய தாம்பத்திய விவகாரங்களில், எந்தப் பாத்திரமும் இல்லை. மேலும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளுக்கு, அவர்களுடைய திருமண வாழ்க்கையில் தலையிடுவதற்கு எந்த உரிமையும் இல்லை. மேலும் அவர்களுடைய திருமண வாழ்க்கையில் தலையிடும் பிறரைத் தடுக்கும் கடப்பாடு அவர்களுக்கு உண்டு” என மிகத் தெளிவான வழிகாட்டுதல்களை வழங்கி உள்ளது.

இவ்வழக்குத் தவிர, பகவன் தாஸ் (எதிர்) தில்லி அரசு வழக்கில், வன்முறையை நிகழ்த்துவதற்கோ அல்லது வன்முறை மிரட்டல் விடவோ எவருக்கும் உரிமை இல்லை என்பதை உச்சநீதிமன்றம் வலியுறுத்துகிறது.

விகாஸ் யாதவ் (எதிர்) உத்தரப் பிரதேசஅரசு (2016) வழக்கில், தங்களது துணைவரைத் தேர்ந்தெடுப்பது பெண்களது சுயமரியாதை தொடர்பானது. அவளது சகோதரர்களுக்கோ அல்லது அவளது தந்தைக்கோ அல்லது குடும்ப கௌரவத்திற்கோ அப்பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக அவளைக் கட்டாயப்படுத்துவது கடுமையான குற்றமாகும் என உச்சநீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

அதே போல் ஆஷா ரஞ்சா (எதிர்) பீகார் அரசு (2017) வழக்கில், தனது வாழ்நாள் துணைவரைத் தேர்ந்தெடுக்கும் பெண்ணின் உரிமை என்பது அரசமைப்புச் சட்டப் பிரிவு 19 வழங்கிய உரிமையாகும் எனச் சுட்டிக் காட்டி உள்ளது.

இது தவிர சக்தி வாகினி (எதிர்) இந்திய ஒன்றியம் (2018) எனும் புகழ்பெற்ற வழக்கில் சாதிமறுப்புத் திருமணம் செய்த இணையரைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை என வலியுறுத்துகிறது. மேலும் சாதி மறுப்புத் திருமணத்தை எதிர்க்கும் கட்டைப் பஞ்சாயத்துகளைத் தடுப்பது மாவட்டக் காவல்துறைக்

கண்காணிப்பாளர் மற்றும் மாவட்டத் துணைக் கண்காணிப்பாளரது கடமை எனவும், சாதி மறுப்பு இணையருக்குப் பாதுகாப்பான இருப்பிடம் மற்றும் காவல்துறை பாதுகாப்பு அளிப்பதும் அந்த இரு காவல் அதிகாரிகளின் பொறுப்பு எனவும், இணையர்கள் மீது வன்முறை ஏவப்பட்டால், அரசமைப்புச் சட்டப்பிரிவுகள் 141 மற்றும்143-ன்படி, காவல் கண்காணிப்பாளர் முதல் தகவல் அறிக்கை பதியலாம் எனப் பல பரிந்துரைகளை உச்சநீதி மன்றம் வழங்கியுள்ளது.

இவ்வளவு சட்டப் பாதுகாப்புகள் இருந்தும், ஆணவப் படுகொலைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பது சட்டத்தின் ஆட்சிக்கு மிகப்பெரும் சவாலாகும். எனவேதான் சாதி ஆணவப் படுகொலைக்கு எதிரான சிறப்புச் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல்வேறு சனநாயக அமைப்புகளால் நீண்ட காலமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. தவிரவும், இந்திய சட்ட ஆணையம் மற்றும் இந்திய மகளிர் ஆணையம் ஆகியனவும் சாதி ஆணவப் படுகொலைகளுக்கு எதிராகச் சிறப்புச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் பரிந்துரை வழங்கி உள்ளன.

சாதி மறுப்புத் திருமணம் தவிர, பல்வேறு சாதிப் பாகுபாடுகளும் கொடுமைகளும் சமூகத்தில் நிலவி வருவதை அனைவரும் அறிவர். குறிப்பாக ஒடுக்கப்பட்டவர்கள் வேலைவாய்ப்புகளில் மிகவும் புறக்கணிக்கப் படுகின்றனர். இந்தியாவின் ஒட்டுமொத்த மக்கள் தொகைப் பங்கில் உயர்த்தப்பட்ட சாதியினர் 14% மட்டுமே உள்ள போதிலும், அவர்கள் இந்தியாவில் 94% நிறுவனப் பதவிகளை ஆக்கிரமித்துள்ளனர். அதே போல் கல்வி நிறுவனங்களில் இருந்தும், நிலத்தில் இருந்தும் ஒடுக்கப்பட்டவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் 71% தலித்துகள் நிலமற்ற விவசாயக் கூலிகளாக உள்ளனர். நிலம் இல்லையேல், அவர்களிடம் அதிகாரம் இருக்காது. அவர்களுக்குக் கௌரவமான வாழ்க்கையும் இருக்காது.

“நிலமற்ற உழைப்பாளிகள் பற்றி நான் மிகவும் கவலைப்படுகிறேன். அவர்களுக்கு நிலம் இல்லை என்பது தான் அவர்களது துன்பங்களுக்கு மிக முக்கியமான காரணம் ஆகும். இதனால்தான் அவர்கள் அவமானங்களுக்கும், கொடுமையான அடக்குமுறைகளுக்கும் பலியாகிறார்கள்” என அண்ணல் அம்பேத்கர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

எனவே சாதி ஒழிப்பு என்பது நில உரிமை மற்றும் பண்பாடு தொடர்பானதாக இருக்கிறது. பல்லாயிரம் ஆண்டுகளாக ஊறிக் கிடக்கும் இக்களையை ஒழிக்கப் பல்வேறு படிநிலைகளையும் கடந்து செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. கல்வி, இடஒதுக்கீடு, அகமண முறை ஒழிப்பு போன்ற வழிகளில்

விடுதலைப் பயணத்தைத் தொடர வேண்டும். ‘‘வர்க்கம் என்பது மாறக்கூடிய சாதியாகவும், சாதி என்பது மாறாத வர்க்கமாகவும் உள்ளது’’ எனச் சோசலிசத் தலைவர் இராம் மனோகர் லோகியா அவர்கள் கூறியிருப்பதை இத்தருணத்தில் ஒப்பிட்டுப் பார்க்கலாம். (“Class is mobile Caste whereas Caste is immobile Class.”) எனவே பொருளாதாரப் புரட்சி, பண்பாட்டுப் புரட்சி ஆகிய இரண்டையும் ஒன்றாக முன்னெடுக்க வேண்டிய தேவை இன்று உருவாகியுள்ளது. இது தவிர, சாதி ஒடுக்குமுறையை ஒழிக்கக் குறுக்கு வழி ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

❖❖❖

**இலண்டன் வாழ் எழுத்தாளர் யமுனா ராஜேந்திரன் அவர்களது காத்திரமான கட்டுரை ஒன்றும் இவ்விதழில் வெளியாகியுள்ளது. இன்றைய சூழலுக்கு ஏற்ற மார்க்சியம் குறித்த கட்டுரையாக அது விரிவடைகிறது. இது குறித்த உரையாடலைத் தொடர வேண்டும் நண்பர்களே!**

❖❖❖

## சிறப்புப் பேட்டி



# வழக்கறிஞர் ஹென்றி திபேன்

### நிர்வாக இயக்குனர், மக்கள் கண்காணிப்பகம்

**புதுமலர் - உங்களது சொந்த ஊர் கல்வி மற்றும் தற்போது உங்களது குடும்பம் ஆகியவை பற்றிக்குறிப்பிடவும்.**

**ஹென்றி திபேன்** - எனது சொந்த ஊர் சேலம் மாவட்டம் அரிசிப்பாளையம். அதுவரை மட்டும்தான் எனது முகவரி தெரியும். என்னை பெற்றெடுத்த அம்மா யார் என்று எனக்குத் தெரியாது. ஏனென்றால் பிரசவத்தின் போது என்னைப் பெற்றெடுத்த தாய் இறந்து விட்டார் என்கிற செய்தியை நான் பின்புதான் தெரிந்து கொண்டேன். நான் பிறந்த இதே காலகட்டத்தில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மருத்துவர் டிஃபைன் என்பவர் சேலத்தில் தொழு நோயாளிகளுக்கு மருத்துவச்சேவை செய்து கொண்டிருந்தார். ஆரம்பத்தில் அம்மா கும்பகோணத்திற்குச் சென்று பணி செய்துள்ளார். அப்போதுதான் 1956ம் ஆண்டில் அண்ணனைக் கும்பகோணத்தில் வைத்துத்தத்தெடுத்தார். அதன் பின்பு சேலம் மாவட்டத்தில் தொழு நோயாளிகளுக்கு மருத்துவச் சேவை செய்ய அம்மா வந்த பின்புதான் என்னையும் மகனாகத் தத்தெடுத்து அன்பு காட்டி வளர்த்தார். இன்று நான் வளர்ந்து சமூகத்திற்காகச் செயல்படுவதற்குக் காரணம் அவர்தான். எனக்குப் பின்பு நான்கு சகோதரிகள். மொத்தம் ஆறு நபர்களை அம்மா தத்தெடுத்து வளர்த்தார்கள். நாங்கள் ஆறு நபர்களும் உடன் பிறந்த சகோதர சகோதரிகளாகவே வளர்ந்தோம். எங்கள் ஆறு பேருக்கும் ஒரு பெற்றதாய் கொடுக்கக்கூடிய அனைத்து அன்பும் அரவணைப்பும், அம்மா டிஃபைன் எங்களுக்கு கொடுத்து வளர்த்தார். அம்மாவிற்குச் சேலத்தில் சொந்த வீடு இருந்தது. அப்போது அவருக்கு மாத

வருமானம் ரூ.600/ மட்டுமே. அதை வைத்துதான் எங்களை வளர்த்தெடுத்தார். ஆடம்பரமான வாழ்க்கை இல்லை. ஒரு எளிமையான வாழ்க்கைதான் எங்களுக்கு அமைந்தது. வாரத்தில் மூன்று நாட்கள் திங்கள், புதன், வெள்ளி, சேலம் மற்றும் நாமக்கல் பகுதிகளில் இலவச மருத்துவ சேவை செய்து வந்தார். அதிகாலை 6.45 மணிக்கு கிளம்பி விடுவார். நோயாளிகளை அவர் சந்திக்கக்கூடிய இடம் சாலை ஓரங்களில் அமைந்துள்ள மரத்தடியில்தான். அதுதான் கிளினிக்காகச் செயல்படும். குறிப்பாக முன்னாள் முதல்வர் சொந்த ஊரான எடப்பாடியிலும் அம்மாவிடம் நோயாளிகள் சிகிச்சை பெற்று வந்தனர்.

எங்களுக்கு விடுமுறை நாள்களில் உதவிக்காக அம்மா, எங்களை அழைத்துச் செல்வார். எங்களது அம்மா மிகவும் கண்டிப்பானவர். தேவையான விஷயங்களுக்கு மட்டுமே அனுமதிப்பார். கல்வி சார்ந்த விஷயங்களில் கடினமாகவே நடந்து கொள்வார். அதற்காக நாங்கள் போதிய உணவு இல்லாமல் வாழவில்லை. போதிய உணவு, பாதுகாப்பான வாழ்க்கை மற்றும் நாங்கள் விரும்பிய கல்வியைக் கற்றுக் கொள்வதற்கும் எங்களுக்கு வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தார். என்னைப் பிரசவிக்கும் போதே என்னைப் பெற்ற தாய் இறந்து விட்டார். இந்தச் செய்தியினை பின்புதான் தெரிந்து கொண்டேன். அவர் சேலம் அரிசிபாளையத்தை சேர்ந்தவர். அது மட்டுமல்ல எனது தாயைப் பற்றியும், தாய் சார்ந்த உறவினர்கள் பற்றியும் தெரிந்து கொள்வதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. ஆனால், நான் அதனைத் தெரிந்து கொள்ள விரும்பவில்லை. இதனால் நான் என்ன சாதியில் பிறந்தேன் என்பது எனக்கு இன்றுவரை தெரியாது. என்னைப் பெற்ற தாய் வேறு, என்பது மட்டும் எனக்குத் தெரியும். ஆனால் அதற்கான தேவையும், தேடலும் எனக்கு சிறுவயதில் ஏற்படவில்லை. மேலும் எந்த அடையாளத்திற்குள்ளும் சிக்கிக் கொள்ளக்கூடாது என்பதில் நான் உறுதியாக இருந்தேன். ஏனென்றால் எனக்குத் தேவையான அல்லது ஒரு குழந்தைக்குத் தேவையான அனைத்தும் எனக்கு எனது அம்மா டிஃபைன் கொடுத்தார்கள். நான், தத்துப்பிள்ளை என்ற எண்ணம் எனக்கு இன்று வரையிலும் வந்ததில்லை. அதனால் என்னைப் பெற்றெடுத்த தாய் குறித்தும், அவர்களது உறவுகள் பின்னணி குறித்தும் அறிந்து கொள்வதற்கு எனக்கு அவசியமில்லாமல் போனது.

எனது மனைவி பெயர் **சிந்தியா**. நாங்கள் காதல் திருமணம் செய்தவர்கள். நான் மதுரையில் சட்டக் கல்லூரி படிக்கும் பொழுது, எங்களது திருமணம் திண்டுக்கல்லில் 1982 ஆம் ஆண்டு நடந்தது. எங்கள் இருவருக்கும் இரண்டு பெண் குழந்தைகள் உள்ளனர்.

ஒருவர் பெயர் **அனிதா**, தற்போது பேராசிரியராக பணியாற்றுகிறார். மற்றொருவர் பெயர் **எலினா**, பத்திரிக்கைத் துறையில் பணியாற்றி வருகிறார். நான் சட்டக் கல்லூரி முடித்த பின்பு மதுரையில்தான் முழுமையாகத் தங்கி உள்ளேன். மதுரையில் இருந்துதான் இந்தியா முழுவதும் எனது பணிகளைக் கொண்டு செல்கிறேன்.

● - **பள்ளி / கல்லூரிக் கல்வி ஆகிய உங்களது கல்வி குறித்து**

**ஹென்றி திபேன்** - என் சிறு வயது முதலே ஆங்கிலக் கல்வி கிடைப்பதற்கு எனது அம்மா வாய்ப்பு ஏற்படுத்திச் சேலம் (Holy Cross) பள்ளியில் எனது பள்ளிக்கல்வி தொடங்கியது. சிறுவயதில் கொஞ்சம் சேட்டை செய்பவனாக, நான் இருந்ததால் எனது அம்மா ஏழாம் வகுப்பிற்குப் பின்பு என்னைப் புதுச்சேரியில் படிக்க வைத்தார். ஆகவே, மீதமுள்ள பள்ளிக் கல்வியைப் புதுச்சேரியில் முடித்தேன். எனது கல்லூரி வாழ்க்கை என்பது திருச்சி, புனித வளனார் கலைக் கல்லூரியில் ஆரம்பித்தது. நான் மருத்துவர் ஆக வேண்டும் என்பது எனது கனவாக இருந்தது. ஆனால் மருத்துவராக முடியவில்லை. கல்லூரியில் உயிரியல் பாடம் எடுத்துப் படித்தேன். படித்துக் கொண்டிருக்கும் பொழுதே, மாணவர் இயக்கத்தில் சேர்ந்து பணி செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. குறிப்பாக அகில இந்திய கத்தோலிக்கப் பல்கலைக்கழக மாணவர் சங்கம் (AICUF). இந்தக் காலக் கட்டத்தில்தான் நான் மார்க்சியத்தைத் தெரிந்து கொண்டேன். இடதுசாரி சிந்தனைகளைப் புரிந்து கொள்வதற்கான ஒரு தளம் எனக்கு இருந்தது.

மார்க்சிய, இடதுசாரிச் சிந்தனைகளால், நான் அதிகமாக மக்களைச் சந்திக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. நான் மாணவர் சங்கத்தில் தேசிய அளவில் பொறுப்பேற்று செயல்பட்டுக் கொண்டிருந்தேன். சரியான நேரத்தில் களத்திற்குச் சென்று வேலை செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து கொண்டிருந்தது. மேலும் எனக்கு வழிகாட்டியவர்களும், என்னோடு படித்த சக மாணவர்களும், எனக்குள் சமூக சிந்தனை வளர்வதற்குக் காரணமாக இருந்தார்கள். கிடைக்கும் வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்திக் கொண்டேன். என்னைச் சுற்றி இருப்பவர்கள் பெரும்பாலும் பலர் இடதுசாரிச் சிந்தனை உள்ளவர்களாக இருந்தார்கள். இதற்கு அடிப்படைக் காரணம் அன்றைய அரசியல் சூழல். இந்திய பிரதமராக இருந்த இந்திரா காந்தி அவர்கள் அறிவித்த அவசரகால நெருக்கடி நிலையின் காரணமாகத்தான், அதற்கு எதிரான இடதுசாரி சித்தாந்தங்கள் வளர்த்தெடுக்கப்பட்டது. இதனால்தான் எங்கள் தலைமுறைக்கு இடதுசாரிக் கருத்துக்களை உள்வாங்குவதற்கான வாய்ப்புக்

கிடைத்தது. குறிப்பாக என்னை உருவாக்கியதில் தற்போது ஐ.நா சபையின் சிறப்புப் பிரதிநிதியாகச் செயல்பட்டுவரும் திரு. D.J ரவீந்திரன் அவர்களுக்கு மிகப் பெரிய பங்கு உள்ளது. மேலும் எனது அம்மா பிரான்ஸ் நாட்டில் இருந்து, இந்தியாவிற்குப் பணி செய்ய வருவதற்குக் காரணமாக இருந்தவர்கள் அருட்தந்தை ஜெராக் மற்றும் அருட்தந்தை அபேபியர் ஆகியோர்தான், பின்னாளில் நான், மாணவர் இயக்கத்தில் தேசிய அளவில் செயல்படக் காரணமாக இருந்தனர். இவரோடு அருட்தந்தை கிளாட் என்பவரும் என்னை ஊக்கப்படுத்தியதில் முக்கியமானவர். சமூகம் சார்ந்த சிந்தனை, இடதுசாரிச் சிந்தனை இதையெல்லாம் எனக்குக் கொடுத்தவர்கள் எனக்கு வழி காட்டியவர்கள் அனைவருமே நம்மூரைச் சேர்ந்தவர்களே!

எனது கல்லூரிப் பருவத்தில் அவசரக்காலம் தொடர்ந்து இருந்தது. இதன் காரணமாக உரிமையியல் பாதையில் நான் சிந்திப்பதற்கும், ஆய்வு செய்வதற்கும் அது உதவியது. மேலும் அவசர நிலையை எதிர்த்துத் தீரத்துடன் போராடியவர்கள் சிறை சென்றதும் எனக்கு ஆழமான படிப்பினையாக மாறியது.

● - **வழக்கறிஞராகப் பணியாற்றத் தேர்வு செய்த காரணம் மற்றும் தற்போது உங்களுடைய வழக்கறிஞர் பணி?**

**ஹென்றி திபேன்** - நான் திருச்சியில் கல்லூரிப் படிப்பை முடித்த பின்பு, அகில இந்திய கத்தோலிக்க மாணவர் சங்கத்தின் (AICUF) தேசிய அளவில் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, முழு நேரப் பணியாளராகப் பணியாற்ற சென்னை சென்றேன். அப்போது திரு. I. பால்ராஜ் என்பவரும் முழுநேரப் பணியாளராக என்னோடு சென்னையில் இருந்தார். இந்தக் காலகட்டத்தில்தான், வேடசந்தூர் அருகாமையில் இருந்த அழகாபுரி அணை உடைந்து விட்டது. இந்த அணை உடைந்ததால் அப்பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் மற்றும் குடியிருப்புகளுக்குப் பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட்டது. அன்றைய காலகட்டத்தில் தமிழகத்தில் இந்த நிகழ்வு பெரும் பேசு பொருளாக இருந்தது.

அணை உடைந்த செய்தி அறிந்தவுடன், அப்பகுதிக்கு நேரடியாகச் சென்று களப்பணி செய்ய வேண்டும் என்ற ஆர்வம் எனக்கும் ஐ. பால்ராஜ் அவர்களுக்கும் அதிகமாக ஏற்பட்டது. அப்போது எங்களோடு இருந்த இன்னும் சிலர் அப்பகுதிக்குச் செல்ல முடியாது. பெரிய அளவில் வெள்ளம் அடித்து செல்கிறது. நீங்கள் செய்வது ஆபத்தான பணி. எனவே அப்பகுதிக்குச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தினார்கள். நாங்கள் வேடசந்தூர் செல்வதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டு எங்களோடு இணைந்து

பணியாற்றுவதற்காக தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் செயலாற்றும் AICUF இயக்க மாணவர்களையும் இணைத்துக் கொண்டு செயலாற்றினோம்.

வேடசந்தூர் பகுதியில் பாதிக்கப்பட்ட கிராமங்களில் களப்பணி ஆற்றிய காலகட்டத்தில்தான், எனக்குச் சாதி குறித்த அறிமுகமும், புரிதலும் ஏற்பட்டது. என்னோடு இணைந்து பணியாற்றி கொண்டிருந்த ஐ. பால்ராஜ் அவர்கள், ஒரு தலித் சமூகத்தைச் சேர்ந்தவர் அல்ல. ஆனால், இவர் சாதியச் சித்தாந்தத்தை எல்லாம் கடந்து சமத்துவத்தை நேசிக்கக் கூடிய ஓர் ஆளுமையாக இருந்தார். குறிப்பாக அவர் வழக்கறிஞர் எப்சிபாய் என்ற ஒரு தலித் சமூகத்தைச் சேர்ந்தவரைத் திருமணம் செய்து கொண்டார். இதை ஏன் இந்த இடத்தில் குறிப்பிடுகிறேன் என்றால், மாணவர் பருவத்தில் இருந்து சாதிகளைக் கடந்து, பலர் செயலாற்றி வருகிறார்கள் என்பதை பதிவு செய்வதற்காகத்தான். மாணவர்களாகிய நாங்கள் மறுவாழ்வுப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதுதான், சாதியின் முரண்பாடுகளை பார்க்கவும், அனுபவிக்கவும் முடிந்தது. குறிப்பாக நாங்கள் எல்லாம் சென்னையில் இருந்து வந்து பணியாற்றும் மாணவர்கள் என்பதால், பிற்படுத்தப்பட்ட சமூக மக்கள் வாழக்கூடிய பகுதிகளில் எந்தப் பாகுபாடும் இல்லை. எந்த அறிவுறுத்தல்களும் எங்களுக்குத் தரப்படவில்லை. நாங்கள் தலித் மக்கள் வசிக்கும் பகுதிகளில் பணியாற்றும்போதும், அந்த பகுதியைச் சேர்ந்த இளைஞர்களோடு பணியாற்றும்போதும், அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்களோடு இணைந்து பணியாற்றிம் போதும் எங்களுக்கு எதிர்ப்பும் அறிவுறுத்தல்களும் வந்தது. குறிப்பாகப் பிற்படுத்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த மக்களில் சிலர், தங்களை உயர்சாதியினராக நினைத்துக் கொண்டு பணி செய்யவிடாமல் எங்களைத் தடுத்தனர். எங்களிடம் தலித் மக்களோடு இணைந்து அல்லது அந்தப் பகுதியில் சென்று பணியாற்றுவது ஆபத்தானது என்றும், சிரமங்கள் வரும் என்றும்



எங்களுக்கு அறிவுறுத்தினார்கள். இந்தச் செயல்பாட்டின் மூலமே, நாங்கள் சாதியப் பாகுபாட்டை, அதன் கூர்மையை மற்றும் சாதியப் பார்வையைப் புரிந்து கொண்டோம்.

அப்பகுதியிலேயே நாங்கள் தொடர்ச்சியாக இரண்டு, மூன்று ஆண்டுகள் பணியாற்ற வேண்டிய ஒரு சூழல் ஏற்பட்டது. இதனால் இளம் மாணவர்கள், இளம் மாணவிகள் ஒரே வீட்டில் கூட்டாக இணைந்து வாழக்கூடிய, குறிப்பாக பொதுவுடைமை (commune) வாழ்க்கையை வாழ்ந்து வந்தோம். எங்களுக்குள் எவ்விதப் பாகுபாடுகளையோ, ஏற்றத்தாழ்வுகளையோ மற்றும் சிரமங்களையோ உண்டாக்காத அருமையானதோர் பொதுவுடமை வாழ்க்கையை வாழ்ந்த அனுபவம் அங்கு எங்களுக்குக் கிடைத்தது. அதே காலகட்டத்தில் இம்மக்களை சங்கமாக மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்தச் சங்கத்தின் பணி என்பது, அப்போது சாதியத்துக்கு எதிரானதாக இல்லை. ஆனால், கூலி உயர்வு பேசக்கூடிய, கூலி உயர்வுக்காகக் குரல் கொடுக்கக் கூடிய ஒரு சங்கமாக அது செயல்பட்டது. இதனால் இரவு நேரங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் கூட்டங்கள் நடத்தவும், அதில் பங்கெடுக்கவும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த இரவு நேர சங்கக் கூட்டங்கள்தான் எங்களுக்குப் பல்கலைக்கழகங்களாக மாறின. மாலை ஆறு மணியிலிருந்து இரவு பன்னிரெண்டு மணி வரை வேடசந்தூரைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களில் கூட்டங்கள் நடத்துவதற்கான வாய்ப்புகள் கிடைத்தன.

எங்களுக்குக் கிடைத்த வாய்ப்பு என்பது பல்கலைக்கழகங்களில் படித்த போது கிடைத்த பல விசயங்களை, எங்களுக்குள் ஏற்பட்ட முரண்பாடுகளைத் தூக்கி எறிவதற்கான அனுபவமாக இருந்தது. இந்த கிராமங்கள்தான் எங்களுக்கு பெரிய அனுபவங்களைக் கொடுத்தது. ஒவ்வொரு கிராமத்திலும், எங்களது பயிற்சியின் மூலமாகத் தேர்வு செய்யப்பட்ட குழுக்களை உருவாக்கினோம். அப்படிக் குழுக்களை உருவாக்கும் பணிகளின் போதுதான் சகோதரி லூசி அறிமுகமானார். நாங்கள் உருவாக்கிய முக்கிய குழுவில் (Core Committee) அவர் பங்கேற்புச் செய்தார். இவர் பின்னாளில் மறைந்த பேராசிரியர் சேவியர் ஆரோக்கியசாமி அவர்களின் மனைவியானார். எங்கள் குழுவிலேயே சமூகப்பணி படித்த ஒரே நபர் சகோதரி லூசி அவர்கள்தான். இவர் ஒரு முழு நேரச் சமூகப் பணியாளராக மாறியதும், இதே வேடசந்தூர் பகுதியில்தான்.


இந்தக் காலகட்டங்களில் வேடசந்தூர் பகுதியில் விவசாயச் சங்கங்கள் வலுப்பெற்றன. விவசாயச் சங்கங்கள் தங்களுடைய உரிமைகளுக்காகப் போராடிய போதுதான் துப்பாக்கிச் சூடு நடைபெற்றது. இந்த சம்பவத்திற்குப் பின்பு எங்கள் குழுவினர்

தொடர்ந்து விவாதித்தோம். குழு விவாதத்தில் குறிப்பாக ஐ. பால்ராஜ் அவர்கள் “இனிமேல் நாம் பொது வாழ்வில் பயணம் செய்ய வேண்டும் என்றால், உன்னைப் போன்ற நபர்கள் சட்டம் படிக்க வேண்டும். அதன் மூலம் காவல்துறையை எதிர்கொள்ள வேண்டிய சூழலும் அவசியம் நமக்கு ஏற்படும். அப்பொழுது சட்டப்படிப்பு நமக்குப் பாதுகாப்பாக அமையும்” என்ற கருத்தை முன் வைத்தார். இக்கருத்து என்னை சிந்திக்க வைத்தது. இந்த நிகழ்ச்சிக்கு முன்பு வரை காவல்துறையினரைச் சந்திப்பதற்கு, எந்த வாய்ப்போ, சூழலோ அமையவில்லை. நான் மாணவர் பருவத்திலேயே பொது வாழ்வில் தலையீடு செய்த பின்பு காவலர்களைச் சந்திக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. தொடக்க காலத்தில் ஒரு வகையான அச்ச உணர்வு இருந்தாலும், நாம் செய்யக்கூடிய நேர்மையான பணியானது, மக்களுக்கான பணி என்பதால், அந்த அச்ச உணர்வு காலப் போக்கில் மறைந்துவிட்டது. இந்தச் சூழலில்தான், நாம் வழக்கறிஞராகப் படித்தால், மக்களுக்கு இலவசச் சட்ட உதவி வழங்க முடியும், போலீசாரையும் எதிர்கொள்ள முடியும் என்ற உணர்வு மேலோங்கியது. அதுதான் நான் வழக்கறிஞராகப் படிப்பதற்குக் காரணமாக அமைந்தது. இதனால் நான் மதுரைக்குச் சென்று சட்டம் படிக்க கல்லூரியில் சேர்ந்தேன். தற்போது காவல் சித்திரவதைக்கு எதிரான பல வழக்குகளில் நான் தலையீடு செய்து வருகிறேன். குறிப்பாகத் தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு வழக்கு, சாத்தான்குளம் தந்தை மகன் இறந்த வழக்கு போன்றவை. இப்படித் தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நடைபெறக்கூடிய காவல் சித்திரவதைக்கு எதிரான வழக்குகளில் மக்கள் கண்காணிப்பகம் வாயிலாக இலவசச் சட்ட உதவி வழங்கக்கூடிய பணிகளைச் செய்து வருகிறோம்.

● - **பொதுவாழ்விற்கு வந்த காரணம்**

**ஹென்றி திபேன்** - நான் பொது வாழ்விற்கு வருவதற்கு மிக முக்கியக் காரணம் அம்மாவின் வாழ்க்கை. நான் எனக்கு விவரம் தெரிந்த நாள்கள் முதல் அம்மாவின் சமூக பணியைப் பார்த்தே வளர்ந்தவன். வாரத்தில் மூன்று நாள்கள் தொழு நோயால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மருத்துவப் பணி செய்வதற்காகச் சேலத்தைச் சுற்றி இருக்கக்கூடிய பல்வேறு கிராமங்களுக்கு அதிகாலையிலேயே அம்மா கிளம்பிச் செல்வதைப் பார்த்தவன். பல நேரங்களில் அம்மாவோடு வெகு தூரங்களில் உள்ள கிராமங்களுக்குச் சென்றுள்ளேன். பாதிக்கப்பட்ட மக்களிடம் அம்மா காட்டிய அன்பும், கரிசனையும் என்னை இந்தப் பொது வாழ்விற்கு ஈர்த்தது.

அம்மா சில நேரங்களில் என்னிடமும், என்னுடைய சகோதர சகோதரிகளிடமும் ஒரு கேள்வியைத் திரும்பத் திரும்ப முன் வைப்பார். நான் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். வாய்ப்பற்ற மக்களுக்காக நான் உதவி செய்து வருகிறேன். நீங்கள் என்னவாக ஆக விரும்புகிறீர்கள் என்று கேட்பார். அந்தக் கேள்வி என்னைத் திரும்பத் திரும்ப சிந்திக்கச் வைத்தது.




பொது வாழ்விற்குப் பணி செய்ய வரும்பொழுது, நாம் குறைந்தபட்சம் ஒரு தகுதியோடு வர வேண்டும். இங்கு நான் தகுதி என்று குறிப்பிடுவது நமக்கான வாழ்வாதாரத் தேவைகளுக்காகப் பொருளை ஈட்டக்கூடிய ஒரு கல்வியை. அதற்கான வாய்ப்புச் சூழலை உருவாக்க வேண்டும் என்பதை அம்மா என்னிடம் அடிக்கடி அறிவுறுத்துவார். இதனடிப்படையில்தான் வேடச்சந்தூரில் நான் மூன்றாண்டுகள், முழு நேரமாகக் களப்பணி செய்தபின்பு, நான் என்னை வளர்த்துக் கொள்ள வேண்டும் அல்லது இந்த பணிக்கு ஏற்றாற் போல் ஆயத்தப் படுத்திக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் தான், நான் சட்டம் படிக்க ஏற்றுக் கொண்டேன். இந்த சிந்தனையானது எனது அம்மா எனக்கு ஒவ்வொரு முறையும் வலியுறுத்திய கருத்தாகும். குறைந்தபட்சம் சமூகப் பணிக்கு என்னை ஆயுத்தப்படுத்தி வந்த நிலையில்தான், இன்று பல அச்சுறுத்தல்கள், பல சவால்கள் எனக்கு எதிராக நிகழ்ந்த போதும் அதை எதிர்க்கத் தேவையான துணிச்சலைத் எனக்குக் தருகிறது.

● – **மக்கள் சிவில் உரிமைக் கழகத்தில்** (PUCL) **உங்கள் செயல்பாடுகள்**

**ஹென்றி திபேன்** – மதுரையில் நான் சட்டம் பயின்று கொண்டிருந்த பொழுது பல கசப்பான அனுபவங்கள் எனக்குச் சட்டக் கல்லூரியில் ஏற்பட்டது. ஏனென்றால், சட்டக் கல்லூரியின் கட்டமைப்பு அவ்வாறு

இருந்தது. முறையான வகுப்பறைகள், ஆசிரியர்கள் இல்லாத சட்டக் கல்லூரியைப் பார்த்தேன். இதனால் நான் நாள்தோறும் கல்லூரிக்குச் செல்லக்கூடிய மாணவனாக இல்லை. எனக்கு அதில் உடன்பாடும் இல்லை. மேலும் கல்லூரி மற்றும் சுற்றுச்சூழல் எனக்கு ஏற்புடையதாக இல்லை. ஆதலால், நான் தேர்வு செய்த கல்வி தவறானதோ என்கிற ஒரு தயக்கமும் எனக்குள் ஏற்பட்டது. இந்த நிலையில் தான் பியூசிஎல் (PUCL) அமைப்புப் பற்றி நான் அறிந்து கொண்டேன். நானே சிலரிடம் அறிவுரை பெற்று பியூசிஎல் அமைப்பைக் கட்டமைத்தேன். பியூசிஎல் அமைப்புதான் எனது மனித உரிமைப் பணிக்கு முழுமையான அடித்தளம் அமைத்தது. மதுரையைச் சார்ந்த அமெரிக்கன் கல்லூரியின் வேதியியல் துறைத் தலைவரான பேராசிரியர் வெங்கட்ராமன் அவர்கள் தலைவராகவும், நான் செயலாளராகவும் பணி செய்யும் வாய்ப்புக் கிடைத்தது.



இக்காலகட்டத்தில்தான் மதுரை மாவட்டம், வாடிப்பட்டி காவல் நிலையத்தில் பிரேம்குமார் என்பவர் காவல் ஆய்வாளராகப் பணி செய்து வந்தார் அந்த சமயத்தில், நல்லகாமன் என்கிற ஒரு முன்னாள் இராணுவ வீரர் மீது நடத்திய காவல் சித்திரவதை நிகழ்வுதான் நான் செய்த முதல் கள ஆய்வுப் (Fact Finding) பணியாகும். இந்த கள ஆய்வானது எனது வாழ்க்கையில் வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். ஏனென்றால் நான் தலையீடு செய்த இந்த வழக்கில் குற்றவாளியான காவல் ஆய்வாள பிரேம்குமார் என்பவர் பின்பு காஞ்சிபுரத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக (SP) பொறுப்பேற்ற நிலையில், நான் தலையீடு செய்த வழக்கின் கீழ் குற்றவியல் நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டு, பணிக்காலப் பலன்கள் எதையும் பெற முடியாமல், தண்டனை கிடைக்கப்பட்டு பின்னாளில் இறந்து போனார்.

நான் பியூசிஎல் அமைப்பில் பயணம் செய்த காலகட்டத்தில்தான் மதுரையில் 1982 ஆம் ஆண்டில் இரண்டு வார காலம் தொடர் நிகழ்வுகள் நடத்தினோம். குறிப்பாகக் காவல் சித்திரவதைக்கு

எதிராக, தமிழ்நாட்டில் நடந்த ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாக இதனை நான் பதிவு செய்கிறேன். அதில் குறிப்பாக சினிமா நடிகர்கள், வழக்கறிஞர்கள், எழுத்தாளர்கள், நீதிபதிகள், மாணவர்கள் எனப் பலரும் பங்கேற்புச் செய்தார்கள். எங்களது பிரச்சார இயக்கத்தின் நோக்கம் என்பது சட்ட விரோதமாகச் செயல்படும் காவலர்களை எதிர்த்துத்தான். சித்திரவதைக்கு எதிரான பிரச்சாரமாக எங்களுடைய பிரச்சாரம் நடைபெற்றது. குறிப்பாகப் பகல்பூர் சிறையில் அனந்த் பர்வர்தன் கண் பறிக்கப்பட்ட சம்பவத்தை முன் வைத்துப் பிரச்சாரங்களை மேற்கொண்டோம். சிறையில் நடைபெறக்கூடிய தாக்குதல்களைக் கண்டித்தும், தர்மபுரியில் நடந்த போலி மோதல் சாவுகளைக் (Encounter) கண்டித்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இது சம்பந்தமாக நிறையப் படங்களை நாங்கள் காட்சிப்படுத்தியுள்ளோம்.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்து பல்வேறு மனித உரிமைச் செயல்பாட்டாளர்கள், மூத்த வழக்கறிஞர்கள் உள்ளிட்டோரை அழைத்து வந்து உரையாட வைத்தோம். இதில் ஒன்றாக எங்கள் பிரச்சாரத்தின் இறுதி நிகழ்வாக 31ஆம் நாள் வாயில் கறுப்புத் துணி கட்டி, மௌன ஊர்வலம் நடத்தத் திட்டமிட்டிந்தோம். மதுரையில் பெரியார் பேருந்து நிலையத் திலிருந்து பேரணி தொடங்கி, IMA அரங்கில் நிறைவு பெறுவதாகத் திட்டமிட்டிருந்தோம். இந்நிகழ்வில், மூத்த வழக்கறிஞர்கள் கே.ஜி. கண்ணபிரான், பி.வி. பக்தவச்சலம், நீதிபதி தார்குண்டே ஆகியோர் பங்கேற்று உரையாற்ற இருந்தார்கள். நாங்கள் முன்னெடுத்த சித்திரவதைக்கு எதிரான பேரணி நடந்துவிடக்கூடாது எனத் திட்டமிட்ட காவல்துறையினர் கடுமையான தடியடி நடத்தினார்கள். இதில் நீதிபதி உட்பட அனைவரும் அடித்து விரட்டப்பட்டார்கள். குறிப்பாக ஒருங்கிணைப்புப் பணி செய்த என்னை காவல்துறை யினர் குறி வைத்து, என்னைத் தாக்க வேண்டும் என்ற நோக்கத்திலேயே தேடினார்கள். ஏனென்றால், நான் செய்யக்கூடிய அனைத்துச் செயல்பாடுகளும் மிக எளிதாகக் கண்டுபிடிக்கக் கூடிய வகையில் என் தோற்றம் இருந்தது. என்னுடன் பணி செய்யக்கூடிய தோழர்களில் நான் உயரமானவனாக இருப்பேன். ஆகவே காவல் துறையினர் எளிமையாக அடையாளம் காணக்கூடிய நபராக எனது உயரம் என்னைக் காட்டியது.

மதுரையில் பியூசிஎல் தலைமையில் முன்னெடுத்த பேரணியில் நீதிபதி தார்குண்டே பங்கெடுத்த நிலையிலும் காவல்துறை தன்னுடைய வன்முறையை நிகழ்த்துவதற்குத் தயங்கவில்லை. இந்நிகழ்வு என் வாழ்வில் மறக்க முடியாத ஒரு நிகழ்வாக அமைந்தது. காவல் வன்முறைக்கு எதிராகச் செயல்படுவதற்கு

இந்நிகழ்வு அடித்தளமாக எனக்கு அமைந்தது. பேரணியில் பங்கேற்ற அனைவரும் போலீசாரால் அடித்து விரட்டப்பட்டு, பலர் இரத்தக் காயங்களுடன் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்தார்கள். நானும் வெவ்வேறு இடங்களில் போலீசாரின் கண்களிலிருந்து மறைந்து தப்பித்து ஓடி எனது இயக்கப் பணிகளை செய்து வந்தேன். இந்நிலையிலும் போலீஸ் நடத்திய தடியடியில் பாதிக்கப்பட்டவர்களைச் சந்திப்பதற்காகத் தமுக்கம் மைதானம் வழியாகச் சென்ற போதுதான், அன்றைய மதுரை மத்தியத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த ஐயா பழ.நெடுமாறன் அவர்கள் எதிரே அவரது மெட்டலோ வேனில் வந்தார். அவர் என்னைப் பார்த்தவுடன் ‘‘உன்னைத்தான் போலீஸ் தேடிக்கொண்டிருக்கிறார்கள். நீ ஏன் இங்கு வந்தாய்?’’ எனச் சொல்லி அவருடைய வேனில் ஏற்றிக் கொண்டார். அவரது மெட்டலோ வேன் நேராக மதுரை அரசு மருத்துவமனைக்குச் சென்றது. அப்போது மருத்துவமனையைச் சுற்றி அனைத்து இடங்களிலும் காவலர்கள் குவிக்கப்பட்டு இருந்தார்கள். இந்நிலையில், ஐயா பழ. நெடுமாறன் அவர்கள், ‘‘எக்காரணத்தைக் கொண்டும், எனது வேனை விட்டு கீழே இறங்கி விடாதே!’’ என்று தெரிவித்தார். ‘‘போலீசார் எனது வேனைச் சோதனை செய்ய மாட்டார்கள் என்பதால் இது உனக்குப் பாதுகாப்பான இடம்’’ என்று சொல்லி வேனின் உள்ளேயே என்னை மறைத்து வைத்தார். அதன் பின்பு அங்கிருந்து என்னை அழைத்து வந்து பாதுகாப்பான இடத்தில் தங்க வைத்தார். மதுரையில் பியூசிஎல் சார்பாக முன்னெடுத்த போராட்டத்தின் போது, என்னைப் போலீசார் வலை போட்டுத் தேடினர். அப்போது என்னைக் காப்பாற்றியவர் ஐயா பழ. நெடுமாறன் அவர்கள்தான்.

**● - மக்கள் கண்காணிப்பகம் தொடங்கிய வரலாற்றுப் பின்னணி என்ன?**



பெர்லின் சுவர்

**ஹென்றி திபேன்** - மக்கள் கண்காணிப்பகம் என்ற மனித உரிமை அமைப்பு தென்னிந்திய மாநிலமான, தமிழ்நாட்டில் மதுரையை மையமாக வைத்து 1995 ஆம் ஆண்டு டிசம்பர் 10 ஆம் நாளில் தொடங்கிய அமைப்பாகும். சமூகத்தை மேம்படுத்துவதற்காக சமூக சிந்தனை வளர்ச்சி மையம் (CPSC) திட்டம் உருவாக்கப்பட்டது. குறிப்பாக 1993 ஆம் ஆண்டு ஆஸ்திரியா நாட்டின் தலைநகர் வியன்னா நகரில், நடைபெற்ற இரண்டாவது அகில உலக மனித உரிமை மாநாட்டின் தாக்கம்தான் மக்கள் கண்காணிப்பகம் உருவாவதற்கு ஒரு காரணமாக அமைந்தது. இந்த மாநாட்டில் நான் பங்கு எடுப்பதற்குத் திருமிகு. மாயா தர்வால அவர்கள்தான் எனக்குள் அழுத்தத்தையும், வாய்ப்பையும் உருவாக்கினார். ஆம், இந்த மாநாட்டில் பங்கெடுப்பதற்காகப் பயணம் மேற்கொண்ட நான், தொடக்கத்தில் ஒரு பதட்டத்துடன், ஒருவகை பயம் கலந்த மனநிலையிலேயே அங்கு சென்றேன். அகில உலக இரண்டாவது மனித உரிமை மாநாட்டிற்குச் சென்ற பின்னர்தான், மாநாட்டின் வெளி அரங்குகளில் கிடைத்த அனுபவங்கள், மனித உரிமைப் பாதையில் என்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்வதற்கு வாய்ப்பாக அமைந்தது. சர்வதேச அளவில் கட்டமைக்கப்பட்ட மனித உரிமைத் தளத்தை நாம் இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் கட்டமைக்க வேண்டும் என்ற உந்துதலும், நம்பிக்கையும் எனக்கு ஏற்பட்டது.

இதே காலகட்டத்தில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட தென் மாவட்டக் கலவரங்கள், பட்டியல் சமூக மக்களுக்கு எதிரான இந்தக் கலவரங்களைக் கண்காணிப்புச் செய்தது, அதில் கிடைத்த தரவுகள் ஆகியவைதான் மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு மனித உரிமைக் களத்தில் மிக வலுவாகச் செயல்படுவதற்குக் காரணமாக அமைந்தது. சாதியத்திற்கு எதிரான, பெண்ணடிமைத்தனத்திற்கு எதிரான, குழந்தைகள் உரிமைகளுக்கான, சிறுபான்மையினர் உரிமைகளுக்கான ஒரு வலுவான மனித உரிமைக் கட்டமைப்பை உருவாக்க வேண்டிய அவசியமும், தேவையும் ஏற்பட்டது. நாம் உருவாக்கும் கட்டமைப்பு என்பது ஒரு தரப்பினரால் உருவாக்கக்கூடிய, ஒரு சாராருக்காகப் பேசக்கூடிய, ஒரு சாராருடைய பிரச்சனையைக் கவனிக்கக் கூடிய, கண்காணிக்கக் கூடிய கட்டமைப்பாக இருந்து விடக்கூடாது என்பதில் நாங்கள் தெளிவாக இருந்தோம். நமது சமூகத்தில் எந்தத் தரப்பினர் பாதிக்கப்பட்டாலும், அவர்களுக்காகக் குரல் கொடுக்கக்கூடிய அவர்களுக்காகப் பேசக்கூடிய, அவர்களுக்காகப் போராடக் கூடிய, இலவச சட்ட உதவி தரக்கூடிய ஓர் அமைப்பாகச் செயல்பட வேண்டும் என்கிற நிலை ஏற்பட்டது. அதை மக்கள் கண்காணிப்பகம்

இப்போதும் செய்து கொண்டிருக்கிறது.

● - **காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம் உருவானதற்கான காரணம் மற்றும் மக்கள் கண்காணிப்பகத்தின் பங்களிப்பு**

**ஹென்றி திபேன்** - காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம் (Joint Action Against Custodial Tourture JAACT) என்பது தமிழ்நாடு புதுச்சேரி மாநிலங்களில் சித்திரவதைகளைத் தடுப்பதற்காகச் செயல்படும் கூட்டியக்கமாகும். கடந்த 2020 ஆம் ஆண்டு, அமெரிக்காவில் மினியாபொலிஸ் நகரில் கருப்பின இளைஞர் ஒருவர் வெள்ளை நிறப் போலீஸ் ஒருவரால் கழுத்து நெறிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார். இதேபோல் தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் காவல் நிலையத்தில் 22 ஜூலை 2021 அன்று தந்தை, மகன் இருவரையும் அடித்துக் கொலை செய்தனர். இவ்விரண்டு சம்பவங்களும் நாடு முழுவதும் மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தின. இந்நிலையில்தான் தமிழ்நாட்டில் காவல் சித்திரவதைகளைத் தடுப்பதற்காகப் பல்வேறு உரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன. அதன் விளைவாகக் காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம் உருவாக்கப்பட்டது.

காவல் சித்திரவதைகளைத் தடுப்பதற்கு உரிமையும், கடமையும் நமது சமூகத்தில் அனைவருக்கும் உண்டு. அதனால் தமிழ்நாட்டில் செயல்படும் பல்வேறு அரசியல் கட்சிகள் இயக்கங்கள், அமைப்புகள் என 86 அமைப்புகள் கூட்டாக இணைந்து உருவாக்கிய கூட்டியக்கம்தான் ஜேக்ட் அமைப்பு ஆகும். தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் பெரும்பான்மையான கட்சிகள், இயக்கங்கள் இதில் பங்கேற்றுச் சித்திரவதைக்கு எதிராகச் செயல்படுகின்றனர். மாநில, மாவட்ட அளவில் செயல்படுகின்ற பொறுப்பாளர்களுக்கு மனித உரிமைகள் குறித்த பயிற்சிகள், சித்திரவதைக்கு எதிரான சர்வதேச தரநிர்ணங்கள், சட்டங்கள் குறித்து பயிற்சிகள் வழங்கி வருகின்றோம். சித்திரவதைகளை தடுத்து மனித உரிமைகளைப் பாதுகாத்து, வளர்த்து வரும் பணிகளை இணைத்து காவல் சித்திரவதைக்கு எதிரான கூட்டியக்கம் செயல்பட்டு வருகிறது.

● - **தலித்துகள் நலம் காப்பதில் மக்கள் கண்காணிப்பகம்**

**ஹென்றி திபேன்** - மக்கள் கண்காணிப்பகம், பணி ஆரம்பித்த நேரத்தில் 1995 ஆம் ஆண்டில் தென் தமிழகத்தில் இருந்த சாதிய மோதல்கள்தான் இப்பணியில் எம்மை ஈடுபடச் செய்தது. அதிலும் அதிகமான படிப்பினைகள், குறிப்பாக SC/ ST வன்கொடுமைச் சட்டம் முறையாக அமல்படுத்தப்படாத நிலை இருந்தது. தலித் மக்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்களை கண்டுக் கொள்ளாமல் அரசு அமைதி காத்தது மிகவும்

வியப்பாக இருந்தது. இப்படி ஒரு சட்டம் இருந்தும் காவல்துறை பாகுபாட்டோடு செயல்பட்டது. எங்கள் தலையீட்டில் கிடைத்த நேர்த்தியான அனுபவங்கள் மூலம் பெற்ற தரவுகளை வைத்து, தென் மாவட்டத்தில் நடந்த சாதிய மோதல் பின்னணியில் அறிக்கைகளை தயார் செய்தோம். அதே நேரத்திலே Amnesty International, Human Rights Watch போன்ற அமைப்புகளுக்குக் கடிதம் எழுதினோம். அந்த கடிதத்தின் தாக்கமாக நொறுக்கப்பட்ட மானுடம் (Broken People) என்ற Human Rights Watch-ன் அறிக்கை வெளியானது. தமிழ்நாடு, மகாராஷ்டிரா, பீகார் உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களை மையப்படுத்திப் பல மாநிலங்களுக்கு நேரடியாகச் சென்று, களத்தில் பணி செய்தவர்களுடன் இணைந்து, நீங்கள் பரிந்துரை (Recommendation) கொண்டு வந்தால்தான், பங்கேற்பு முறை சரியாக இருக்கும் எனக்கூறி அவர்களோடு விவாதித்தோம். இதனால் அமெரிக்காவில், மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) தலைமையகத்தில் ஒப்புதல் பெற்று 1997 ஆம் ஆண்டு நாம் பரிந்துரை செய்த உறுப்பினர்களைப் பெங்களூரில் ஒன்றிணைத்து அந்த அறிக்கைக்கான பரிந்துரையை இறுதி செய்தோம். மனித உரிமைகள் கண்காணிப்பகம் (Human Rights Watch) செயலாக்கத்தில் இது போன்று ஒரு கூட்டத்தைக் கூட்டி விவாதித்துப் பரிந்துரையை இறுதி செய்தது வரலாற்றில் முதல் நிகழ்வாகும். இது ஒரு மிகப் பெரிய வெற்றியாகும். இவற்றையெல்லாம் மக்கள் கண்காணிப்பகம் என்ற பெயரில்தான் செய்தோம்.

இதே காலகட்டத்தில் உலகளாவிய பிரகடனம் அறிமுகமாகி 40 வருடங்கள் கடந்த நேரத்தில் தலித் உரிமைகளும் மனித உரிமைகளே என்பதை வலியுறுத்துகின்ற நாடு தழுவிய பரப்புரை தேவை என்ற கருத்தை, கர்நாடக மாநிலம் பெங்களூரில் தேசிய அளவில் நடைபெற்ற கூட்டத்தின் இறுதியில் நான் தெரிவித்தேன். அந்த வேண்டுகோள்தான் தேசிய அளவில் முன்னெடுக்கப்பட்ட தலித் மனித உரிமைப் பிரச்சாரம்(Campaign for Dalit Human Rights) உருவாவதற்கான முதல் கட்டமாக இருந்தது. தலித்துகளுக்காகத் தேசிய தலித் மனித உரிமைப் பிரச்சாரத்தினை(National Campaign for Dalit Human Rights-NCDHR) ஒரு தலித்தாகப் பிறந்தவர், முன்னின்று நடத்த வேண்டும் என்ற கருத்தை நான் முன் வைத்தேன். மற்றவர்கள் இதனைப் புரிந்து கொள்வதற்குக் கடினமான சூழ்நிலையிலும் உறுதியாக நான் நின்றது வரலாற்றில் முக்கியமானதாகும். அதனால்தான் மார்ட்டின் மக்குவா அவர்கள் தலைமையில் இப்பணிகளை அப்போது கொண்டுச் சென்றார்கள். அவ்வாறு பணிகள் மேற்கொண்ட போதுதான்

தேசியக் குழு உருவாக்கப்பட்டது. இதை உருவாக்குவதில் மக்கள் கண்காணிப்பகத்திற்கு பெரிய பங்கும், பணியும் இருந்தது என்பதை பெருமையுடன் கூறுகிறேன். அதற்கு பின்பு டர்பன் மாநாடு வரை பல பணிகளில் தேசிய, சர்வதேசத் தலையீடுகள் தொடர்ந்து கொண்டு செல்லப்பட்டது. அதனைத் தொடர்ந்து, டர்பன் மாநாடு. அதற்குப் பின் தலித் மனித உரிமை சார்ந்த பயிற்சிகள் தேசிய அளவில் கொண்டு செல்லப்பட்டது. தலித் மனித உரிமை கண்காணிப்பு என்ற பணியை தொடங்குவதற்கு சுமார் 1000 நபர்களைத் தேசிய அளவில் தயார் செய்து, தயாரிப்புப் பணிகளெல்லாம் ஒவ்வொரு பயிற்சி முகாமாக பத்து நாள்கள் நடைபெற்றது. அதற்குப் பின்பு 1000 நபர்களில் குழுக்களாக தேர்வு செய்யப்பட்ட 200 பேருக்கு அறிக்கை எழுதுவதற்கு பயிற்சி வழங்கப்பட்டது. தேசிய அளவில் 10 பயிற்சிகள் நடந்திருக்கும். பின்னர் அதில் தேர்வு செய்யப்பட்ட, எனக்கு தெரிந்து ஒரு 66, 70 பயிற்சி மாணவர்கள், பத்து வாரங்கள் மதுரையில் நம்முடன் தங்கியிருந்தார்கள். இவர்களெல்லாம் முக்கியப் பங்காற்றியவர்கள். இன்று இந்தியா முழுவதும் தலித் மனித உரிமைப் பணியினை முன்னின்று செய்யக்கூடிய பலர் மக்கள் கண்காணிப்பகம் முன்னெடுத்த பயிற்சியில் பங்கு பெற்றவர்கள் என்று பெருமையுடன் கூறலாம்.

தலித் மனித உரிமைப் பணி, மக்கள் கண்காணிப்பகத்தின் சார்பில் தொடர்ந்து நான்கு ஆண்டுகள் கொண்டுச் செல்லப்பட்ட பணியாகும். இன்று தலித் மனித உரிமைக்காகச் செயல்படுவோர், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மக்கள் கண்காணிப்பகம் நடத்திய பயிற்சியில் பங்கேற்றவர்களாகத்தான் இருப்பார்கள் என்பதனை மக்கள் கண்காணிப்பகத்தின் சார்பில் பெருமையோடு கூறலாம். தமிழ்நாட்டில் தலித் மனித உரிமைப் பணி குறித்து இரண்டு நபர்கள் மிகவும் சிறப்பாகச் சொல்வார்கள். திரு. தொல். திருமாவளவன் அவர்களை நான் சந்திக்கும் போது, பட்டியல் வகுப்பினர் மற்றும் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் குறித்தான அறிமுகமும் புரிதலும் உங்கள் மூலமே கிடைத்தது என்றும், நீங்கள் இது போன்ற பயிற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்றும் ஒவ்வொரு முறையும் குறிப்பிடுவார். இதேபோல் மறைந்த திரு. சந்திரபோஸ் அவர்களும் பெருமையுடன் கூறுவார். **தலித் மனித உரிமை என்பது, பேசுகின்ற விசயமாக மட்டுமில்லாமல், செயல்படுகிற விசயமாகவும் மக்கள் கண்காணிப்பகம் மாற்றியது**. தலித் மனித உரிமை சார்ந்து தேசிய அளவில் பல்வேறு பயிற்சிகளை நாம் முன்னின்று நடத்தியுள்ளோம்.

● - **சிறுபான்மையோர் உரிமைகளுக்காக முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள்.**

**ஹென்றி திபேன்** - சிறுபான்மையினர் உரிமைகளுக்காக மக்கள் கண்காணிப்பகம் குறிப்பிட்ட பிரச்சனைகளில் தலையீடு செய்து போராடியதாக என்னால் சொல்ல முடியாது. ஆனால் சிறுபான்மையினர் பாதிக்கப்படும்போது குரல் கொடுக்ககூடிய நபர்களாகத்தான் நாம் இருந்தோம். இதில் குறிப்பாக 1997 ஆம் ஆண்டு 58 பேர் படுகொலை செய்யப்பட்ட, 200 பேர் காயமடைந்த கோயம்புத்தூர் கலவரங்கள் ஏற்பட்டபோது, இசுலாமியர்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் துணிச்சலாகக் களத்திற்கு நாம் சென்றோம். அந்த களத்திற்குச் சென்றபோதுதான் தமுமுக தலைவரான பேராசிரியர் ஜவாஹிருல்லா அவர்களுக்கும் நமக்குமான நேரடித் தொடர்பு ஏற்பட்டது. அங்கே தாக்குலுக்கு உள்ளான கோட்டைமேடு பகுதிக்கு, ஆய்வு மேற்கொள்ளச் சென்ற போது நடந்த சுவையான நிகழ்ச்சிகளும் நினைவுக்கு வருகிறது. அக்கலவர நேரத்தில் கோயம்புத்தூருக்கு, எந்த வாகனத்திலும், எவரும் போக முடியாது. வழக்கறிஞராக, வழக்கு நடத்தப் போகிறோம் என்று சொல்லி, வழக்கு விவரங்களையெல்லாம் சொல்லி, கருப்பு கோட் எல்லாம் எடுத்து வண்டியில் வைத்துக்கொண்டுதான் எங்களால் கோயம்புத்தூர் நகரத்திற்குள் நுழைய முடிந்தது. ஏனெனில் போலீசார் வெளியாட்களைக் கோவை நகருக்குள் விடமாட்டார்கள். அத்தகைய சூழலில், முன்னெடுத்த கடினமான பணிகளை எந்நாளும் மறக்கமாட்டோம். அங்கு சென்று இசுலாமியர்களுக்காகத் துணிச்சலாகப் பேசினோம். அதற்குப்பின் தேசிய அளவில் இசுலாமியர்களுக்கு எதிராகத் தொடர்ந்து தாக்குதல்கள் நடந்தபோதெல்லாம், எந்நேரத்திலும், எப்பொழுதும் அவர்களுடன் நின்று பேசுகின்ற, அவர்களுக்குச் சாதகமாக நிற்கக்கூடிய ஒரு அமைப்பாகவே நாம் இருந்தோம்.

இதே போல் கிறித்தவர்கள் மத்தியிலும், இது போன்ற உரிமை சார்ந்த உணர்வுகளை எழுப்பகூடிய நபர்கள் இருந்தார்கள். எனக்கு இன்னும் நினைவு உள்ளது என்னவென்றால், அருட்பணி டைமன்ராஜ் அவர்கள் உயிரோடு இருந்தவரையில், மதுரையில் அனைத்துக் கிறித்தவ அமைப்புகள், இசுலாமிய அமைப்புகள், சமூக சிந்தனையாளர்கள் ஆகியோரை ஒருங்கிணைத்து ஓர் அமைப்பை உருவாக்கினார். மதுரை உயர்மறைமாவட்ட ஆயர் தலைமையில் அவ்வமைப்பை நிறுவியிருந்தார். ஆனால், அருட்தந்தை. டைமண்ட் ராஜ் அவர்களது மறைவுக்குப் பின்னர், இது போன்ற பணியை வலுவாக முன்னெடுத்து செல்வதற்கு யாரும் தயாராக இல்லை. இதனால் கிறித்தவர்கள் மத்தியில் உரிமை சார்ந்த அரசியல் மேலோங்கி வளர முடியாத நிலை உள்ளது. இசுலாமியர்கள் போல அரசியல் ஆக்கபடாமல் கிறித்துவர்கள்

உள்ளனர். கிறித்தவர்களை அரசியல்படுத்த வேண்டிய வாய்ப்பு நமக்குக் கிடைக்கவில்லை. ஏனென்றால் நம்முடைய பணிகள், வளங்கள், அழுத்தங்கள் அனைத்தும் வேறு பகுதிகளை நோக்கிய பணிகளாக இருந்ததால், இவ்விசயத்தில் நாம் பெரிய அளவில் பங்கு செலுத்த முடியாத நிலை உள்ளது. மணிப்பூரில் கிறித்தவர்களுக்கு எதிராக நடைபெற்று வரும் வன்முறைக்கு எதிராக அண்மையில் மதுரை கத்தோலிக்க மறைமாவட்டத் திருச்சபை தலையீடு செய்ய வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. பிறகு அதையொட்டி சி.எஸ்.ஐ, பெந்தகொஸ்தே ஆகிய அமைப்புகளையும் இணைத்துக் கூட்டாக முன்னெடுத்த நிகழ்வு ஜூலை 16, 2023 அன்று நடைபெற்றது. மாபெரும் பேரணி, பொதுக்கூட்டம் எனத் தமிழக மக்கள் ஒற்றுமை மேடை என்ற அமைப்பின் ஒருங்கிணைப்பில் மதுரையில் அது வெற்றிகரமாக நடைபெற்றது. ஒரு வரலாற்றுச் சிறப்பாகும்.

● - **மனித உரிமைப் போராளி ஸ்டேன் சாமி அவர்களோடான உறவு**

**ஹென்றி திபேன்** - மனித உரிமைப் போராளி ஸ்டேன் சாமி அவர்களோடான உறவு என்பது எனக்கு ஒரு வித்தியாசமான சூழலில்தான் கிடைத்தது. வெவ்வேறு நாடுகளில் இருந்து இந்தியாவிற்குச் சமூகப் பணி செய்வதற்காக வருகை தந்து தென்னகத்தில் வாழக்கூடிய தனித்து வாழும் பெண்கள் (Single Ladies) சுமார் 15 பேர் சங்கமாகச் (Association) செயல்பட்டு வந்தார்கள். ஆண்டுக்கு ஒரு முறையும், வாய்ப்பிருக்கும் நேரங்களில் கோடை காலங்களிலும் கூடுவார்கள். அவ்வாறு கூடும் போது கர்நாடகா மாநிலம், பெங்களூரில் உள்ள இந்தியச் சமூக நிறுவனத்தில் (Indian Social Institute-ISI) கூடுவார்கள். அப்போது அங்கு இருந்த அருட்பணி வோல்கன் அவர்கள் இக்குழுவினருக்கு ஒரு முன்மாதிரி வழிகாட்டியாக இருந்தார். அந்தக் கூட்டங்களுக்கு என் அம்மாவுடன் செல்கின்ற ஒரு மகனாகத்தான் நான் இருந்தேன். அப்பொழுது அம்மாவுடன் இருப்பதற்கு நேரம் கிடைக்கும். அந்த நேரத்தில் அருட்பணி ஸ்டேன் சாமி அவர்கள் எனக்கு, என் சிறுவயதில் அறிமுகமானார். எங்களுக்குள் அப்போதிலிருந்துதான் நட்புறவு ஏற்படுகிறது. பின்னர் தொடர்ந்து ஸ்டேன் சாமி அவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. ISI செல்லும் போதெல்லாம், எனக்கு மூத்த வழிகாட்டியாக, நண்பராக எனக்கு ஸ்டேன் சாமி அவர்கள் இருந்தார். பின்னர் ஸ்டேன்சாமி அவர்கள் ISI இல் இருந்து சென்ற பின்பு, எப்போதெல்லாம் தமிழ்நாட்டுக்கு வருவாரோ, அப்போதெல்லம் அவரைச் சந்திப்பதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். அவர் பணிபுரிந்து வந்த பகைச்சா பகுதிக்கு செல்லக்கூடிய கூடிய வாய்ப்புக் கிடைத்தது.

ஸ்டேன் சாமி அவர்களோடு எப்போது பேசினாலும் தொலைபேசியில் அக்கறையோடு பேசுவார். தமிழ்நாட்டிற்கு வரும் போது நேரடியாக சந்தித்து பேசும் வாய்ப்புகள் கிடைத்தது. அதைப் போன்ற ஒரு தொடர் நட்பு எங்களுக்குள் இருந்தது. ஸ்டேன்சாமி அவர்கள் பியூசிஎல் பணிகளில் ஆர்வமாக இருந்தார். சர்வதேச அளவில் ஐ.நா சபையில் முன்னெடுக்கப்பட்ட UPR சார்ந்து இருக்க கூடிய விவாதங்களை அவரோடு கொண்டு செல்லும் போது அதிகம் சிரமப்பட்டு அவருக்கு நம்பிக்கையூட்டி அவரை அழைத்தோம். ஆதிவாசி பிரச்சினைகள் குறித்து பேச வேண்டும் என கோரிக்கை வைத்தோம். அதன் அடிப்படையில் UPR அறிக்கையில் அவருக்கு ஒரு பங்கு இருந்தது. தேசிய மனித உரிமைக் காப்பாளர் கூட்டமைப்பு (HRDA) சார்பாக அவரது இடத்தில் பயிற்சிகள் நடத்தும் போது சிறப்பாக ஒத்துழைப்புக் கொடுத்தார்.

கடந்த எட்டு ஆண்டுகள் ஸ்டேன்சாமி அவர்களை அதிகமாகச் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. ஜார்கண்டில் அவருக்கு எதிரான வழக்குகளிலும், அவருடனான நட்பின் காரணமாகத் தொடர்ந்து அவருக்கு சட்ட ஆலோசனை கொடுக்ககூடிய ஒரு நபராகவும் நான் இருந்தேன். மேலும் HRDA மூலமாக அவர்களுக்குப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டோம். அவரது பாதுகாப்பு குறித்துப் பல்வேறு ஆலோசனைக் கூட்டத்தில் எல்லாம் தொடர்ந்து பங்கேற்கக் கூடிய வாய்ப்புக் கிடைத்தது. வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் அவரிடம் தொலைபேசியில் பேசினேன்.எனக்கு இன்னும் நினைவு இருக்கிறது. தேசிய புலனாய்வு முகமை (NIA) ஸ்டேன் சாமி அவர்களிடம் விசாரணை நடத்தும் பொழுது, அவர்களின் நம்பிக்கை குறித்து, நேர்மை குறித்துக் கேள்வி எழுப்புவார். குறிப்பாகச் சாத்தான்குளத்தில் தந்தை மகன் சித்திரவதை கொலை வழக்கில் காவல்துறை சட்ட விரோதமாக ச் செயல்பட்ட விதத்தை அவர்களிடத்தில் தெரிவிப்பார். ஒரே ஒரு நம்பிக்கை அப்போது அவருக்கு இருந்தது. என்னவென்றால் அது உண்மை நிலையில் இருந்து அவர் எப்பொழுதும் மாறியது இல்லை என்பதுதான். அவர் என்ன நம்பினாரோ அதையே கடைசி வரையிலும் பதிவு செய்தார். அவர் எழுதிய மௌன சாட்சி அல்லேன் என்ற புத்தகத்தில் இதனைப் பதிவு செய்து உள்ளார்.

2018 ஆம் ஆண்டில் அவருடைய இடத்தை முதல் முறையாகச் சோதனை செய்ய, போலீசார் சென்றனர். அப்போது தகவல் அறிந்த நான் ஸ்டேன் சாமியிடம் உடனே பேசுவதற்குப் பல முயற்சிகள் எடுத்து, சுமார் 11 மணிக்குத்தான் தொலைபேசி மூலமாக அவரிடம் பேச முடிந்தது. அப்போது அவர் என்னிடம் சொன்ன வார்த்தைகளை மறக்க முடியாது. சோதனை செய்ய வந்த போலீசார் என்னிடமிருந்த


மக்கள் கண்காணிப்பகம் அலுவலகம்

அனைத்தையும் எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள். நான் காலையில் கொஞ்ச நேரம், இளையராஜாவின் தமிழ்ப் பாட்டுக் கேட்பேன். அந்த குறுந்தகட்டையும் (CD) எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள் என்றார்.

2019 ஆம் ஆண்டு ஜுன் மாதம்18 ஆம் நாள் மறுபடியும் தேசிய புலனாய்வு முகமை (NIA) செல்கின்றனர். ஏனென்றால் தேசிய புலனாய்வு முகமை ஏற்கெனவே கைப்பற்றிச் சென்ற கம்ப்யூட்டரில் அவர்கள் திட்டமிட்டுப் புகுத்திய ஆவணங்கள் (Files) இல்லை. இதனால் ஆத்திரத்தில், ஆதங்கத்தில்தான் ஸ்டேன்சாமியிடம் மீண்டும் சோதனை செய்யச் சென்றனர். தேசியப் புலனாய்வு முகமை ஸ்டேன்சாமியின் கம்ப்யூட்டரைக் கைப்பற்றியபோது அவர்கள் எதிர்பார்த்தது கிடைக்கவில்லை. ஏனென்றால் தேசிய ப் புலனாய்வு முகமை கைப்பற்ற நினைத்த கம்ப்யூட்டரைப் பழுது நீக்க கொடுத்து விட்டார். இதனால் தேசியப் புலனாய்வு முகமையின் திட்டம் நிறைவேறவில்லை. இரண்டாவது முறையாக வரும் போது ஸ்டேன் சாமியின் பழுது நீக்கத்திற்குக் கொடுத்த கம்ப்யூட்டரை தேசியப் புலனாய்வு முகமை கைப்பற்றிது. கைப்பற்றப்பட்ட கம்ப்யூட்டரில்தான், தேசிய புலனாய்வு முகமை ஏற்கெனவே திட்டமிட்டுப் புகுத்தியிருந்த ஆவணங்களில் உள்ள கடிதங்களை வைத்துதான் வழக்குப் பதிவு செய்தனர்.

ஸ்டேன்சாமியிடம் இரண்டாவது முறை தேசியப் புலனாய்வு முகமை கம்ப்யூட்டரைக் கைப்பற்றிய அடுத்தநாள் 2019 ஜுன் 13 ஆம் நாள் அன்று தேசிய மனித உரிமை ஆணையத்தில் (NHRC) கூட்டம் நடைபெறுகிறது. தேசிய மனித உரிமை ஆணையத்தில் நான் Core Group உறுப்பினர் கிடையாது. என்றாலும் வெளியில்

நான் கொடுத்துக் கொண்டிருக்கக்கூடிய சத்தத்தின் காரணமாக என்னைச் சிறப்பு விருந்தினராக அழைத்தார்கள். அதனால் நான் அந்தக் கூட்டத்தில் பங்கேற்றேன். கூட்டம் தொடங்கியவுடன் நான் அறிமுகம் கொடுப்பதற்கு முன்னதாகவே, இரண்டு விசயங்களைத் தெரிவிக்க விரும்புகிறேன் என்று அதிக உணர்ச்சி வசப்பட்டுப் பேசத் தொடங்கினேன். ஸ்டேன்சாமி மேல் தேவையில்லாமல் புனே காவல்துறை கை வைத்துள்ளது. வழக்குப் போடுவதற்கு முயற்சி செய்து வருகிறார்கள். இதில் தேசிய மனித உரிமை ஆணையம் தலையீடு செய்ய வேண்டும் என்றும், இது போன்ற ஒரு மனித உரிமைக் காப்பாளரைக் காவல்துறை பழி வாங்கும் நோக்கத்தில் செயல்படக்கூடாது என்றும் ஏற்கெனவே சக்கர நாற்காலியில் செல்லக்கூடிய 80 சதவீத மாற்றுத் திறனாளியான பேராசிரியர் சாய்பாபா சிறையில் உயிரோடு இருப்பாரா என்கிற சந்தேகம் உள்ளது என்றும் அந்த கூட்டத்தில் நான் விளக்கமாகப் பேசினேன்.

எனக்குப் பின்னர் பேசிய தேசிய மனித உரிமை ஆணையத் தலைவர் நீதிபதி தத்து அவர்கள் நீங்கள் நம்பிக்கை இழந்து போகாதீர்கள் என்றும், நாங்கள் உங்களோடு இருப்போம் என்றும், ஸ்டேன்சாமி சம்மந்தப்பட்ட வழக்குகளில் தலையீடு இருக்கிறது என்றும், அவரை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்தார். இதில் முக்கியமாகப் பாராட்ட வேண்டிய செய்தி ஒன்று உண்டு, தேசிய மனித உரிமை ஆணையம் ஸ்டேன்சாமி வழக்கில் தலையீடு செய்யக்கூடிய பின்னணியில் சேசு சபையினர் செய்த இரண்டு முக்கியமான விசயங்களை நாம் பாராட்ட வேண்டும். ஸ்டேன் சாமியைப் பாதுகாப்பதில் மறைமுகமாக நமக்குப் பங்கு இருக்கலாம். இதில் முக்கியமான செய்தி என்னவென்றால், ஸ்டேன்சாமி இறப்பிற்குப் பின்பு, இந்த வழக்கில் ஸ்டேன்சாமி 16 ஆவது குற்றவாளியாக இருந்தாலும், தொடர்ந்து இந்த வழக்கில் அவரது இறப்பைப் பற்றிக் கேள்வி கேட்க வேண்டும் என்றும், இவ்வழக்கில் எஞ்சியுள்ள 15 நபர்களின் குடும்பங்களுக்கு ஆதரவாகத் தேசிய, சர்வதேசிய அளவில் செயல்படும் மனித உரிமை அமைப்புகள் தொடர் ஆதரவு பிரச்சாரத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் முடிவு எடுத்தார்கள். இதன் மூலம் ஸ்டேன்சாமியின் கனவை நிஜமாக்க முயன்று வருகிறார்கள். 2021 ஜூலை 5 ஆம் நாள் கைதியாக மருத்துவமனையில் அவர் இறந்தார் என்ற செய்தியைக் கேட்டதும் அன்று மாலை 6 மணி அளவில் இரங்கல் கூட்டத்தை ஒருங்கிணைப்புச் செய்தோம். அதில் ஐ.நா சபையின் மனித உரிமைக் காப்பாளர்களுக்கான (HRD) சிறப்புப் பிரதிநிதி திருமிகு.

மேரி லாலர் பங்கேற்றார். கூட்டத்தில் சேசு சபையினர் கொடுத்த முக்கிய அறிவிப்பு என்னவென்றால், ஸ்டேன்சாமியின் உடலைப் பல இடங்களுக்கும் எடுத்துச் செல்ல முடியாது. எனவே அவரது உடலை எரியூட்டி, ஸ்டேன்சாமியின் எரியூட்டப்பட்ட சாம்பலை நாட்டின் பல இடங்களுக்கு எடுத்துச் செல்லலாம் என்ற முடிவினை சேசு சபையினர் அறிவித்தார்கள் என்பதைப் பெருமையுடன் கூற விரும்புகிறேன்.

ஸ்டேன் சாமியின் சாம்பல் வந்தவுடன் கண்டிப்பாக அந்தச் சாம்பல் நாடு முழுவதும் கொண்டு செல்லப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முதல் ஆளாகப் பரிந்துரை செய்தேன். அதற்குப் பொறுப்பாக இருந்த ஜோ.சேவியர் அவர்களும் அவரது குழுவினரும் அதை ஏற்றுக் கொண்டார்கள். அப்போது தமிழ்நாட்டுக்குக் கொண்டு வரப்படும் ஸ்டேன்சாமியின் சாம்பலை என்னிடம் கொடுத்து, முன்னெடுக்கச் சொன்னார்கள். நான் உடனே மறுத்துவிட்டேன். ஏனென்றால் ஏற்கெனவே சி.பி.ஐ வழக்கு உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளுக்கு நாங்கள் ஆளாக்கபட்டிருக்கும் நிலையில், ஸ்டேன்சாமியின் சாம்பலைப் பாதுகாப்பற்கான ஆதாரம், பலம் எங்களிடம் இல்லை. அதனால் சேசு சபையினரே இந்த பொறுப்பை எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தேன். ஆனால், சாம்பல் பயண நிகழ்வுகளில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகள், இயக்கங்கள் கூட்டாகப் பங்கெடுக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தேன். சில இடங்களில் சாத்தியமானதாக இருந்தாலும், சில இடங்களில் நடைபெறவில்லை. குறிப்பாகத் தமிழ்நாட்டின் மேற்கு மாவட்டங்களில் அரசியல் இயக்கங்கள், சமூக அமைப்புகள், பொது மக்கள் ஸ்டேன்சாமியின் சாம்பல் பவனி நிகழ்வுகளில் பங்கேற்க வாய்ப்பு வழங்காமல் இருந்தது எனக்கு மிகவும் வருத்தமாக உள்ளது. ஆனால் ஸ்டேன்சாமியின் சாம்பல் பவனித் திட்டத்திற்கு ஆலோசனை வழங்கியது மிகப் பெருமையாக உள்ளது.

● - **காவல் நிலையங்களில் செய்ய வேண்டிய சீர்திருத்தங்கள் என்ன?**


**ஹென்றி திபேன்** - காவல் நிலையங்கள், சிறைச் சாலைகள் போன்றவற்றில் மேற்கொள்ள வேண்டிய சீர்த்திருத்தங்கள் குறித்த வரையறைகள் எல்லாம் ஏற்கெனவே இருக்கிறது. புதிதான வரையறைகள் வந்துதான் இந்த நிறுவனங்களைச் சீர்த்திருத்த வேண்டும் என்ற தேவையில்லை. இருக்கக்கூடிய வரையறைகளை நடைமுறைப்படுத்தினாலே போதுமானது. ஆனால் சரியாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதால்தான் காவல் நிலையங்கள்

சட்ட விரோதமாகச் செயல்படக் காரணமாக உள்ளது. எடுத்துக் காட்டாக சிறையில் சி.சி.டி.வி கேமரா இருக்க வேண்டும் என்கிறார்கள். ஆனால், அந்த சி.சி.டி.வி கேமரா பதிவுகளை யார் பார்ப்பது, அதை யார் கண்காணிப்பது என்ற முடிவு இதுவரையில் இல்லை. காவல் நிலையங்களைப் பொறுத்த வரையில் ஓரளவு நடைமுறைப்படுத்தியிருப்பதாக ஒரு தோரணை இருக்கிறது. அது குறித்தான பிரச்சாரங்கள் செய்வதால் காவல் நிலைய சி.சி.டி.வி குறித்துப் பொது வெளியில் பேசப்படுகிறது. ஆனால் சிறையைப் பொறுத்த வரைக்கும் சி.சி.டி.வி கேமரா வைப்பதே கிடையாது. சிறையைப் பொறுத்தமட்டில் Visitors, Non-Appointment official appointment செய்யப்பட வேண்டும். இன்றைய நாள் வரையிலும் தமிழ்நாட்டில் மட்டுந்தான் Visitors, Non-Appointment official appointment செய்யப்படவில்லை.

இவை எல்லாம் மாறுவதற்கு முக்கியமான காரணம் நமது நம்பிக்கை சார்ந்து உள்ளது. சிறைகளில், காவல் நிலையங்களில் மாற்றங்கள் கொண்டு வரவேண்டும் என்ற ஆழ்ந்த நம்பிக்கை காவல்துறைப் பொறுப்பாளர்களிடம் இருக்க வேண்டும். சிறைக்கு வெளியே இருந்து அரசின் அங்கீகாரம் பெற்றுச் சிறையை கண்காணிக்கக்கூடிய அமைப்புகள் அனுமதிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத காரணத்தினால்தான் சட்ட மீறல்கள் நடைபெறுகிறது. சிறைத்துறை என்பது முன்புபோல வெறும் தண்டிக்கப்பட்டவர்கள், குற்றவாளிகள் இருக்கக்கூடிய இடமாக மட்டும் இல்லை. இன்றைய நிலையில் சிறைத்துறை அற்புதமான பொருளாதாரம் ஈட்டக்கூடிய துறையாக மாறிவிட்டது. குறிப்பாகச் சிறையில் சிறிதளவு விவசாயம், தச்சு ஆகிய தொழில்கள் நடக்கின்றது. இது போன்ற நிறைய வேலை வாய்ப்பு தொடர்புடைய பயிற்சிகள், வாய்ப்புகள் வழங்கக்கூடிய இடமாக சிறைச்சாலை மாறிவிட்டது. இவற்றில் எல்லாம் சரியான கண்காணிப்பு இல்லையென்பதால்தான் ஊழல் நடந்து வருகிறது. இவையெல்லாம் சிறைத்துறைக்குள் வரவேண்டிய மாற்றங்கள்தான். அதனால் சிறைத்துறை குறித்த உயர்நீதிமன்றத் தீர்ப்புகள், சட்டத்தில் இருக்கக்கூடிய முன்மாதிரிகள் எல்லாம் போதுமனாதாகத்தான் இருக்கிறது. ஆனால் மாற்றங்களை நடைமுறைப்படுத்தக்கூடிய கண்காணிப்புக் குழுவின் பணிதான் இப்போது மிகத் தேவையாக உள்ளது. அவ்வாறு இல்லையெனில் பிரச்சனைகள் ஏற்படுகிறது. காவல் நிலையங்களைப் பொறுத்த வரையில், அதே நிலைமைதான் இங்கு இருக்கிறது. போதுமான சட்டங்கள் இருக்கிறதே தவிர, அதிகாரத்தை நான் சட்டத்திலிருந்து பெறுகிறேன் என்பதை மறந்து, அதிகாரத்தைச் சீருடையிலிருந்து பெறுவது போன்ற,

பதவியில் இருந்து பெறுவது போன்ற அளவுக்கு மோசமான முன் மாதிரிகள்தான் உள்ளன.

சிறைகளில், காவல் நிலையங்களில் பணி செய்வோருக்கு அதிக மன அழுத்தம் ஏற்படுகிறது என்பது உண்மைதான். அவர்களுக்கான மன அழுத்தம் சார்ந்த பயிற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். அவர்களுக்கான நலத்திட்டங்களை அதிகப்படுத்த வேண்டும். இந்த நிலையில் காவலர்களைக் குடும்பம் குடும்பமாக அழைத்து, உளவியல் பயிற்சி கொடுத்து, ஆற்றுப்படுத்துவதாக அரசு அறிவித்த நிலையில், அதற்கான விவரம் வெளிப்படையாக அரசு அறிவித்துள்ளதா? இந்த விவரத்தை பொது வெளியில் வந்தால் தமிழ்நாட்டு மக்களுக்கு அதிர்ச்சியை அளிப்பதோடு, மன அழுத்தத்தினால் பாதிக்கப்பட்ட காவல்துறையினரின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். இது போன்று மன அழுத்தத்தில் இருக்கக்கூடியவர்கள் காவல்துறையில் செயலாற்றும் போது, ஏகப்பட்ட தவறுகள் நடக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. மேலும் அதிகாரத்தைத் தவறாகக் கையாள்கிறார்கள். மன அழுத்தத்தில் இருப்பவர்களும், தவறு செய்பவர்களும் ஒரே துறையில் தொடர்ந்து செயல்படுவதால், இவர்களை இடமாற்றம் செய்யக்கூடிய உயர் அதிகாரிகள் கண்டு கொள்ளாமல் இருப்பதால், இவர்கள் தவறு செய்பவர்களாக மட்டுமே இருக்கிறார்கள்.




ஆனாலும் நாம் பேசுவது சட்டம் சார்ந்த விசயம். இதில் சிலர் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் அந்த நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. இந்த நடவடிக்கைகள் தாமதமாகும்போதுதான் நமது சமூகத்தில் சித்திரவதைகள் மேலோங்குகிறது. திராவிட மாடல் அரசு என்று சொல்லப்படக்கூடிய, சமூகநீதியைப் போற்றும் அரசு எனக் கருதப்படும் தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு காவல்துறையில்

சிறப்புக் கவனம் செலுத்தி, சித்திரவதைகளைத் தடுப்பதற்கு அதைக் குற்றமாக அறிவித்து, ஒரு சிறப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டும். இவை எல்லாம் தமிழ்நாட்டில் செய்ய வேண்டிய மிக முக்கியமான காவல்துறைச் சீர்திருத்தங்கள் ஆகும்.

● - **உங்களது சர்வதேச மனித உரிமைச் செயல்பாடுகள், “சாதியப் பாகுபாடும், இன வேற்றுமையே” என்பது குறித்து எடுக்கப்பட்ட முயற்சி மற்றும் உலகளாவிய காலமுறை மீளாய்வு** (Universal Periodic Review) **போன்றவை குறித்த விளக்கமும் தேவை**

**ஹென்றி திபேன்** - சர்வதேச அரங்குகளுக்கு நான் சென்ற முதல் கூட்டம் இரண்டாம் அகில உலக மனித உரிமை மாநாடு ஆஸ்திரியா தலைநகர் வியன்னாவில் 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்றதுதான். இரண்டாவதாக சர்வதேச அளவில் தலித் மனித உரிமைக்காக ஆதரவு கொடுக்கக்கூடிய, குரல் கொடுக்கக்கூடிய டர்பன் மாநாடு. இதேபோல் சர்வதேச அளவில் தலித் மனித உரிமைக்காக ஒரு புதிய கட்டமைப்பை உருவாக்கினோம். 2000ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்த முயற்சிகளில் பலர் இருந்தனர். அந்தப் பலரில் ஒருவனாகத்தான் நானும் இருந்தேன். இது இன்று உருவாகி 22 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த அமைப்பினுடைய சர்வதேசத் தலைவராக இருக்கிறேன். அந்த அமைப்பின் பெயர் International Dalit Solidarity Network (IDSN) ஆகும். கடந்த 15 ஆண்டுகளாக ஐ.நா மன்றத்தில் மனு செய்து தொடர்ந்து போராடிதன் விளைவாகத்தான் IDSN அமைப்பிற்கு ஐ. நா சபையின் அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. கிடைக்கப்பெற்ற அங்கீகாரத்தை முறியடிக்கக்கூடிய வகையில் இந்திய அரசு சில அரசுகளை கூட்டாக இணைத்துக் கொண்டு செயல்பட்டது. இதை வருத்தத்துடன் பதிவு செய்கின்றேன். மேலும் ஒரே ஒரு நாடு IDSN அங்கீகாரம் குறித்து, 115 கேள்விகளை மீண்டும், மீண்டும் கேட்டது, இதனால் அங்கீகாரம் பெற 15 ஆண்டுகள் ஆனது. இறுதியாக என்ன நடந்தாலும் நடக்கட்டும் என முடிவு செய்து வாக்களிப்பதன் வாயிலாகத்தான் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையில் நாம் பிரச்சாரத்தை முன்னெடுத்து, இந்த அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறோம். இதுவே சர்வதேச அளவில் தலித் மனித உரிமைகள் அரங்கில் நான் பங்கேற்புச் செய்த மிக முக்கியமான, நிறைய விசயங்கள் கற்றுக் கொண்ட அரங்காக இருந்தது.

அடுத்து, தலித் உரிமைகளும், மனித உரிமைகளே என்ற முழக்கத்தை முன் வைத்து டர்பன் மாநாட்டிற்காக இந்தியாவில் தேசிய அளவில் தயாரிப்புப் பணிகள் மேற்கொண்டது. மாநாட்டில்

பங்கேற்பு செய்தபின் IDSN மூலமாகப் பணிகள் கொண்டு சென்றது. இது ஒரு பக்கம் இதைத் தாண்டி பல மனித உரிமை அமைப்புகளில் மக்கள் கண்காணிப்பகம் உறுப்பினராக இருக்கிறது. எடுத்துக் காட்டாகச் சித்திரவதைக்கு எதிரான உலகளாவிய அமைப்பில் (OMCT) உறுப்பினராக இருக்கிறோம். சித்திரவதை சார்ந்த விசயங்களில் ஐ.நா சபைக்கு கொண்டு செல்வது போன்ற விசயங்களில் உதவி செய்யக்கூடிய அமைப்பாக அது இருக்கிறது. OMCTஇன் தலையீட்டின் காரணமாக நாம் பலருக்கு மறுவாழ்வை ஏற்படுத்திக் கொடுத்தோம். OMCT அமைப்பு ஐ.நா சபையின் நிதி பெற்று வீரப்பன் தேடுதல் வேட்டையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருத்துவ முகாம் நடத்த உதவி செய்திருக்கிறார்கள். சித்திரவதை சார்ந்த குறிப்பாக மனித உரிமை காப்பாளர்கள் சார்ந்த பணிகளில் OMCT அமைப்பு இருந்தது. அதே போல், சித்திரவதைக்கு எதிரான உலகளாவிய மனித உரிமைக் கூட்டமைப்பு FIDHலும் நாம் உறுப்பினராக இருக்கிறோம். அதனால் அவர்கள் உலக மாநாட்டில் தொடர்ந்து பங்கேற்றோம். பல விசயங்களில் FIDH உதவி செய்வதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது. அவர்கள் நமக்கு நிறைய விசயங்களில் உதவி செய்திருக்கிறார்கள். ஒன்று மனித உரிமைக் காப்பாளர் பணியில். இன்னொன்று தேசிய மனித உரிமை ஆணையங்கள் தலையீடு செய்வதற்காக அரசு சாரா அமைப்புகளுக்கான ஆசிய அளவில் ANNI என்ற தளத்தை உருவாக்கினார்கள். அந்தத் தளத்துடன் இந்தியாவில் நின்ற அமைப்பை நம்மால் உருவாக்க முடிந்தது.

அதனால் இந்தச் சர்வதேச அமைப்பில் நமது பங்கேற்பு முக்கியமானது. பலரைப் பயன்படுத்தியுள்ளோம். அதே போல் பல விசயங்களை கற்றுக் கொண்டு உள்ளே கொண்டு வந்து அமல்படுத்துவதற்குக் காரணமாக இருந்தது இந்த உலகளவிலான தளம்தான். ஒரு பெரிய வரலாறாக இது இப்போது நமக்கு எல்லா இடத்திலேயும் உள்ளது. ஆனால் பொறுப்பில் இல்லாமல் இருந்தாலும் நாம் செய்யக்கூடிய பணி தொடர்ந்து கொண்டே இருக்கும்.

● - **உங்களுக்கு வழங்கப்பட்ட தேசிய, சர்வதேசிய விருதுகள் பற்றியும், மனித உரிமைப் பணியில் மக்கள் கண்காணிப்பகத்திற்கு நேரிட்ட நெருக்கடிகள், அதனால் உங்களுக்கும், அமைப்பின் பணியாளர்களுக்கும் ஏற்பட்ட இன்னல்கள் குறித்து விளக்கவும்.**

**ஹென்றி திபேன் - ஜெர்மனியை மையமாகக் கொண்டு செயல்படக் கூடிய ஆம்னெஸ்டி இன்டர்நேஷனல் என்ற சர்வதேச அமைப்பு எனக்கு மனித உரிமை விருது வழங்கியது.** இந்தச்

சர்வதேச விருது என்பது எனக்குத் தனிப்பட்ட முறையில் வழங்கப்படவில்லை. மக்கள் கண்காணிப்பகம் செய்த பணிக்காக கிடைத்த அங்கீகாரமாக இது இருந்தது.



மக்கள் கண்காணிப்பகத்தின் நெருக்கடியான கால கட்டம் 2012 இல் தொடங்கி தற்போது 10 ஆண்டுகளைக் கடந்து விட்டது. 2012 ஜூலை காலகட்டத்தில் இருந்து இன்றைய நாள் வரையிலும் தொடர்ந்து பணிகள் செய்து கொண்டே உள்ளோம். அதற்குக் காரணம் ஒன்று மக்கள் கண்காணிப்பகத்தின் அறக்கட்டளையில் உள்ள அறங்காவலர்கள் எங்கள் பணிகளின் மீது வைத்திருந்த நம்பிக்கை. இது எங்கள் அமைப்பிற்குக் கிடைத்த மிகப் பெரிய பலம். இது பொதுவாக எல்லா அமைப்புகளுக்கும் கிடைக்காது. பாதிக்கப்பட்ட மற்ற அமைப்புகளின் அறக்கட்டளை அறங்காவலர் குழுவில் எவ்வளவோ பிரச்சனைகள் இருந்தது எனக்குத் தெரியும். அது மக்கள் கண்காணிப்பகத்திற்கு ஏற்படவில்லை. என்னோடு பணியாற்றிய பலர் பணியில் இருந்து நின்றுவிட்டார்கள். பணியிலிருந்து நின்றவர்களுக்குப் பல சிரமங்கள் இருக்கும். குடும்பம் வாயிலாகவும், தனிப்பட்ட முறையிலும் பல சிரமங்கள் இருந்தது. ஆனாலும் கடந்த 10 ஆண்டுகள் என்னோடு இருப்பவர்களை வைத்துத் துணிச்சலான நிலைப்பாடு எடுத்ததுதான்

இந்த பணி தொடர்வதற்குக் காரணமாக இருந்தது.

மக்கள் கண்காணிப்பகத்தில் எந்த பணி நின்றுவிடும் என்று எதிர்பார்த்தார்களோ, அந்தப் பணி நிற்கவில்லை என்ற ஆதங்கத்தில் இன்றுவரை இருக்கின்றனர். எடுத்துக் காட்டாக சி.பி.ஐ வழக்கு சென்ற ஆண்டு எங்கள் மீது பதிவு செய்தார்கள். ஒரு வருடம் முழுமையாக எங்கள் அலுவலகத்தில் அமர்ந்து சோதனை செய்தார்கள். இந்த நிலையிலும் ஒரு நாள்கூட எவ்வித மாற்றமுமின்றி எமது பணிகளைத் தடையின்றி செய்து வந்தோம். இதே போல் சி.பி.ஐ இல் இருந்து வந்தவர்கள், அன்றாடம் சோதனை செய்ய வந்தவர்கள், சட்டப்பூர்வமாகவும், மரியாதையுடனும் எங்களிடம் நடந்து கொண்டார்கள் என்பதனையும் நான் இந்த இடத்தில் பதிவு செய்கின்றேன். நேர்மையாக இருந்ததன் காரணமாகத்தான் துணிச்சலாக இருக்க முடிந்தது. கடந்த ஒரு வருடம் முழுவதும் சி.பி.ஐ அதிகாரிகள் எங்கள் கணக்குகளைப் பார்வையிட்டுச் சென்ற பின்பு, மீண்டும் கடந்த வாரம் எங்கள் அலுவலகத்திற்கு வந்தார்கள். வந்த சி.பி.ஐ குழுவினர் 2008ஆம் ஆண்டிலிருந்து நாங்கள் பயன்படுத்திக் கொண்டிருந்த வாகனங்கள் குறித்துக் கேள்வி எழுப்பினார்கள். எங்கள் அலுவலக வாகனங்களை விற்பனை செய்திருப்பேன் என்ற சந்தேகம் எழுப்பிய சி.பி.ஐ. அதிகாரிகளிடம் எங்களது ஆவணங்களை ஒப்படைத்துள்ளோம். இதன் மூலம் எங்களது வெளிப்படைத் தன்மையை மீண்டும் ஒரு முறை நிரூபித்துள்ளோம்.



ஆம்னெஸ்டி விருது வழங்கும் விழாவில்
திருமதி சிந்தியா திபேன்

சட்ட ரீதியாக இருக்கக்கூடிய FCRA (Foreign Contribution Regulation Act) சட்டத்தை, அரசின் விருப்பத்திற்கேற்ப முடக்குகிறார்கள். மத்திய உள்துறை அமைச்சகம் (Ministry of Home Affairs) மூன்று முறை எங்கள் அலுவலகத்திற்கு நேரில் வந்து விசாரித்துச் சென்றிருக்கிறார்கள். அதன்பின்பு பத்து ஆண்டுகள் கடந்த நிலையில், கடந்த ஓராண்டு முழுவதும் சி.பி.ஐ விசாரணை செய்தார்கள். தற்போது மீண்டும் சி.பி.ஐ விசாரிக்க வருகிறார்கள். விசாரணைக்கு வரும் அதிகாரிகள் என்னென்

விவரங்கள் கேட்கிறார்களோ, அந்த விவரங்களை முழுமையாகக் கொடுக்கின்றோம். ஆனால் எங்கள் வங்கிக் கணக்கைத் தடை செய்த FCRA தொடர்பாகப் பதில் ஏதும் சொல்வதில்லை. மனித உரிமை அரங்கில் பணியாற்றுபவர்களை FCRA சட்டத்தைப் பயன்படுத்தி முடக்குகிறார்கள்.

இந்திய அரசின் அணுகுமுறை என்பது பாகுபாடு சார்ந்த அணுகுமுறையாக உள்ளது. குறிப்பாக நிதி சார்ந்த ஊழல்கள் குறித்து விசாரிக்கும் போது தொழில் நிறுவனங்களின் சட்ட திட்டங்களும், தொண்டு நிறுவனங்களுக்கான சட்ட திட்டங்களும் மிகவும் வித்தியாசமாக இருக்கிறது. அது சமமற்ற நிலையில் பாகுபாடாக உள்ளது.

ஒரு தொழில் நிறுவனம் தவறு செய்தால், நோட்டீஸ் கொடுப்பார்கள். பழைய தரவுகளைக் கேட்பார்கள். ஆனால் உடனடியாக வங்கிக் கணக்கை முடக்கமாட்டார்கள். தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் துறையில், சந்தேகங்கள் ஏற்பட்டால் உடனடியாக சம்மந்தப்பட்ட அமைப்பின் வங்கிக் கணக்கினை முடக்குவதையே முதல் திட்டமாகச் செயல்படுத்துகிறார்கள். இதன் மூலம் அரசின், பழிவாங்கும் நோக்கம் வெளிப்படுகிறது. தமிழ்நாட்டில் FCRA சட்டத்தைப் பயன்படுத்தி பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவங்களின் வங்கிக் கணக்கை முடக்கினார்கள். இந்த தாக்குதல்கள் தமிழ்நாட்டில் திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது. குறிப்பாகத் தூத்துக்குடி கத்தோலிக்க மறை மாவட்டம், தமிழ்நாட்டின் மாண்புமிகு அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் அவர்களின் அமைப்பு, சுப. உதயக்குமார் அவர்களின் அமைப்பு மற்றும் மக்கள் கண்காணிப்பம் ஆகியவற்றின் வங்கிக் கணக்குகளை FCRA கொண்டு தடை செய்தார்கள். தடை செய்யப்பட்டு 10 ஆண்டுகள் கடந்த நிலையில், மேற்கண்ட அமைப்புகளின் குற்றத்தை நிரூபித்துள்ளார்களா? தவறுகள் நடந்துள்ளது என்பதை அரசு அறிவித்துள்ளதா? இந்தக் கேள்விகளுக்கு எந்தப் பதிலும் இல்லை. இது மட்டுமல்லாது இந்திய அளவில் இந்திரா ஜெய்சிங் அவர்களின் அமைப்பு, மார்ட்டின் மக்குவா சார்ந்திருக்கக்கூடிய அமைப்பு உள்ளிட்ட எந்த வழக்கிலும் நிரூபிக்கவில்லை என்பதுதான் எதார்த்தமான உண்மை. ஆனால் இவ்வளவு நெருக்கடிகளையும் கடந்து, நாம் தொடர்ந்து மனித உரிமைக் களத்தில் பணி செய்து கொண்டுதான் இருக்கிறோம். முன்னெடுக்கும் பணியைத் தொய்வின்றித் தொடர்ந்து செய்து கொண்டுதான் உள்ளோம்.

**● - எந்தெந்த சர்வதேச ஒப்பந்தங்களில் இந்தியாவின் ஒத்துழைப்புத் தேவை?**

**ஹென்றி திபேன்** - சர்வதேச ஒப்பந்தங்கள் குறித்து நாம் பேசுவதற்கு முன்பாக குறைந்தபட்சம் ஐ.நா சபையோடு தொடர்பு வைத்திருப்பதும், பணி செய்வதும் இங்கு குற்றமாக்கப்படுகிறது. ஆனால் ஐ.நா சபையின் பாதுகாப்புக் கவுன்சிலில் இந்தியா நிரந்தர உறுப்பினர் ஆக வேண்டும் என்று கடந்த 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து பிரச்சாரம் செய்து கொண்டு வருகிறது. ஐ.நா. சபையில் செயல்படக்கூடிய சில அரங்குகளில் இந்தியாவின் பிரதமர் பேசுகிறார் என பெருமையாகச் சொல்கிறோம். ஆனால் உண்மையில் சர்வதேச அரங்குகளில் இந்தியாவின் பங்களிப்பு என்பது சொல்லக்கூடிய அளவில் இல்லை. ஐ.நா சபையில் நடக்கும் கூட்டங்களில் பங்கேற்க இந்தியர்கள் சென்றால், விமான நிலையத்திலேயே தடுத்துவிடுகிறார்கள். அல்லது பங்கேற்றுவிட்டுத் திரும்பி வந்தால் விமான நிலையத்திலேயே கைது செய்து விடுகிறார்கள். சர்வதேச கூட்டங்களுக்கு வெளியே செல்கிறவர்களை உளவுத்துறையின் வா யிலாக உன்னிப்பாக கண்காணிக்கிறார்கள். விமான நிலையத்தில் இமிகிரேசன் அதிகாரிகள் நமது நாட்டின் பாதுகாப்பைக் கருதி செய்கிறார்கள் என்று எடுத்துக் கொண்டால், நமக்கு அதில் ஒரு கேள்வி உள்ளது. ஐ.நா சபை கூட்டத்திற்குப் போவதால் இந்த நாட்டிற்கு என்ன அச்சுறுத்தல் ஏற்பட்டுவிடப் போகிறது?.

இந்திய அரசு ஐ.நாவின் பாதுகாப்புக் கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராக வேண்டும் என்று பரப்புரை செய்கின்ற வேளையில், ஓர் இந்தியக் குடிமகன் ஐ.நா சபை சார்ந்த சர்வதேசக் கூட்டங்களில் பங்கேற்பதைத் தடுப்பது என்பது முரண்பாடாக இல்லையா? மக்கள் கண்காணிப்பகத்தின் மீதான தாக்குதலுக்கு சர்வதேச அரங்குகளில் மக்கள் கண்காணிப்பகம் பங்கேற்புச் செய்வதுதான் காரணம். குறிப்பாக ஐ.நா சபையின் மனித உரிமைக் காப்பாளர்களுக்கான சிறப்புப் பிரதிநிதி திருமிகு. மார்கரேட் செகாக்கியா இந்தியா வந்த போது அவருடன் இணைந்து முழுமையாகப் பணி செய்தோம். இந்தியாவில் பல்வேறு மாநிலங்களுக்குப் பயணம் செய்து அவருக்கு உதவியாக இருந்தோம். 2012 ஆம் ஆண்டு தேசிய மனித உரிமை ஆணையத்தின் சர்வதேச அங்கீகாரம் முதல் முறையாகக் கேள்விக்குள்ளாக்கப்பட்டது. இதனால்தான் மக்கள் கண்காணிப்பகத்தின் வங்கிக் கணக்கு FCRA வாயிலாகத் தடை செய்யப்பட்டது. மக்கள் கண்காணிப்பகத்தின் FCRA புதுப்பிக்காதற்குக் காரணமே, சர்வதேசத் தலையீடுகள்தான்.

இந்தியாவில் நடக்கக்கூடிய நல்ல விசயங்களைக் கூட வெளியே வந்து சொல்வதற்கு ஏன் இந்தியா தயங்குகின்றது? இந்தியா உலக அரங்கில் பேசக்கூடிய நல்ல எடுத்துக்காட்டுகளும் உண்டு. குறிப்பாக இந்தியாவில் பஞ்சாயத்துராஜ் உறுப்பினர்கள்

தேர்வு செய்யப்படுகிறார்கள். பெண்களுக்கு இட ஒதுக்கீடு, தலித் மக்களுக்கு இட ஒதுக்கீடு, ஆதிவாசி மக்களுக்கு இட ஒதுக்கீடு இருக்கிறது. இப்படி ஒரு கட்டமைப்பு இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வாயிலாகக் கொண்டு வந்து செயல்படுகிறது. ஐந்தாண்டுக்கு ஒரு முறை அது மாறிக் கொண்டே இருக்கிறது. இதுபோல் வேறு எந்த நாட்டையும் முன்னுதாரணமாகச் சொல்ல முடியாது. இது குறித்துப் பெருமையாக உலகளவில் பேசுவதற்கு இந்தியா ஏன் முன் வருவதில்லை. பெருமையாக நாம் சொல்ல வேண்டிய விசயங்களைச் சொல்வதற்குக் கூட ஐ.நா. சபையின் அரங்குகளைப் பயன்படுத்தாமல் இருக்கின்றோம் என்பது மிகவும் வருத்தமாக உள்ளது. நமது நாட்டில் தேசிய, மாநில மனித உரிமை நிறுவனங்கள் 170 உருவாக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. இது போன்று எந்த நாட்டிலும் இல்லை. இது குறித்துப் பேசுவதற்கு நிறைய உள்ளது. மனித உரிமையைப் பாதுகாக்க நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்களை உருவாக்கியுள்ள நாடு இந்தியா என்று வெளியில் எங்கேயாவது பேசி இருக்கிறார்களா? இப்படிப்பட்ட ஆக்கரீதியான செய்திகளை எங்களைப் போன்ற சிவில் சமூகக் குழுக்கள்தான் பேசிக் கொண்டு உள்ளன.

● - **மக்கள் கண்காணிப்பகத்தின் எதிர்காலத் திட்டங்கள் பற்றிக் குறிப்பிடவும்**

**ஹென்றி திபேன்** - மக்கள் கண்காணிப்பகம் ஒரு நிரந்தர அமைப்பாக இருக்க முடியாது. அப்படி இருக்க வேண்டும் என நினைப்பது நல்லதல்ல. இன்றைக்கு வருகின்ற தாக்குதல்கள் மத்தியில் ஓர் அமைப்புத் தொடர்ந்து இருக்கிறது என்பதே பெரிய சவால்தான். மக்கள் கண்காணிப்பகத்தின் 30 ஆண்டு அனுபவங்களை மற்றவர்களுக்கு நாம் பகிர்கிறோமா? மற்றவர்கள் இந்த 30 ஆண்டு அனுபவத்தை உள்வாங்கக் காரணமாக இருக்கிறோமா? அதுதான் நமது பெரும் முயற்சியாக இருக்க முடியும். நம் பணிகளை மற்றவர்கள் வாயிலாகப் பரவலாக்குவது முக்கியப் பணி. குறிப்பாக நாம் செய்கின்ற பணி மனித உரிமைக் காப்பாளர்கள் சார்ந்து இருக்கக்கூடிய பணி. அப்பணிகளைத் தொடர்ந்து கொண்டு



ஆம்னெஸ்டி விருது வழங்கல்

செல்வது, அதையொட்டி தேசிய அளவில் பணி செய்வது போன்றவை மற்றவர்களோ, தேசிய மனித உரிமை நிறுவனங்களோ செய்யாத பணிகளாகும் இதையெல்லாம் முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டு செல்ல வேண்டும். இது போன்ற பணிகளைச் செய்ய உள்ளூர் நிதியைத் திரட்டுவதன் மூலம் நிற்க இயலும் என்ற எடுத்துக் காட்டினை உருவாக்கக்கூடிய பொறுப்பு மக்கள் கண்காணிப்பகத்திற்கு இருக்கிறது. வெவ்வேறு நடவடிக்கைகள் நமது பேரில் இல்லாமல், வெவ்வேறு கூட்டு நடவடிக்கைகளை கொண்டு செல்வதற்கு மனித உரிமைப் பணியை வெவ்வேறு அரங்குகளில் மற்றவர்கள் வாயிலாக கொண்டு செல்கின்ற தகுதி நமக்குக் கிடைத்துள்ளது. நாம் அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த அமைப்புக்குத் தமிழ்நாட்டில், தேசிய அளவில் கொடுக்கப்பட்டிருக்கும் ஆதரவை நாம் பயன்படுத்திக் கொண்டு, **கூட்டு நடவடிக்கைகள்தான் மனித உரிமைக்கு வழி** என்பதை வலியுறுத்துகின்ற பல அரங்குகளில் பணிகளைக் கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு மக்கள் கண்காணிப்பகத்திற்கு உள்ளது. இங்கே போட்டிக்கே இடமில்லை. இங்கு செயல்பட்டு வந்த பல அரசு சாரா தன்னார்வக் குழுக்கள் முடங்கியுள்ளன. ஆனால் வெளி அரங்குகளில் இதை கொண்டு செல்வதற்கு நாங்கள் பக்க பலமாக இருப்போம்.

இதுதான் நமது முக்கியமான பணியும், மிகப் பெரிய கனவுமாக உள்ளது. இந்த அனுபவங்களை எல்லாம் தொகுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அதற்கு நாங்கள் நேரம் ஒதுக்கவில்லை. இந்த வரலாற்றை எழுதுவதற்கு நேரம் தேவை. இது சார்ந்த கல்வியை அரசியல் கட்சிகளுக்கும், இயக்கங்களுக்கும் முழுவதுமாகக் கொண்டு செல்வதற்கு, முயற்சி எடுக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. ஆனால் முயற்சி எடுக்கவில்லை. இவை போன்ற கடமைகள் எங்கள் தோள்களின் மீது சுமத்தப்பட்டுள்ளதாகக் கருதுகிறேன். அரசியல் கட்சியினர், இயக்கத்தினர் அனைவரும் எப்போதும் அவர்கள் பணியை எடுத்துப் போகின்றனர். அப்போதுதான் தொடர்ந்து இந்த பணிகள் செல்லும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. இதுதான் மக்கள் கண்காணிப்பகத்தின் குடிமைச் சமூக அமைப்பின் நன்கொடையாக இருக்கும்.

❖❖❖

# சோசலிச அனுபவங்கள் : மார்க்ஸ் முதல் அம்பேத்கர் வரை

யமுனா ராஜேந்திரன்

*புரட்சியின் பிற்பாடு சாதி மதப்பாகுபாடு இருக்காது, அவர்கள் சமமாக நடத்தப்படுவார்கள் என்பதை அறியாதவரை சொத்துடமைச் சமத்துவத்துக்கான புரட்சியில் மனிதர்கள் இணைய மாட்டார்கள். புரட்சிக்குத் தலைமை தாங்கும் ஒரு சோசலிஸ்ட் சாதியில் நம்பிக்கை இல்லை என்று உறுதி அளித்தால் மட்டும் போதாது. உறுதி என்பது மிகவும் ஆழமான அடித்தளத்தில் இருந்து வரும் உத்தரவாதமாக இருக்க வேண்டும். அதாவது, தங்கள் தனிப்பட்ட சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தின் உணர்வில் ஒருவரையொருவர் நோக்கிய தோழர்களின் உளவியல் அணுகுமுறை என்கிற அடித்தளத்தில் இருந்து அது வரவேண்டும். (1)*

I

இன்றைய மார்க்சியம் தொடர்பான விவாதங்களில் புதிய மார்க்சியம்(New Marxism), பின்மார்க்சியம்(Post Marxism), பின்னை நவீனத்துவ அல்லது பின்நவீனத்துவ மார்க்சியம்(Post-modern Marxism), நவமார்க்சியம்(Neo Marxism) எனப் பலவாறு மார்க்சியத்தைக் கூறுபோடும்முறை இருக்கிறது. மார்க்சியத்தை இவ்வாறு கூறு போடுவதற்குப் பதிலாக நாம் மார்க்சிய வளர்ச்சியை வரலாற்றுக் கட்டங்களாகப்(Marxist Development in Historical Stages) பகுத்துக் கொள்வோம்.

ஆதாரமாக, ஜெர்மன் தத்துவம், ஆங்கிலப் பொருளாதாரம், பிரெஞ்சுப் புரட்சிகர அரசியல் பற்றிய மார்க்ஸ் எங்கெல்ஸ் எழுத்துக்கள் வெளியான, அவர்கள் செயல்பட்ட காலகட்டம். இரண்டாவது அதனைக் குறிப்பிட்ட இரசியச் சூழலுக்குப் பொருத்தி லெனின் டிராட்ஸ்க்கி ஸ்டாலின் போன்றோர் எழுதிச் செயல்பட்ட காலகட்டம். மூன்றாவதாக சோவியத் அனுபவங்களையும் எடுத்துக்கொண்டு, சீன நிலைமைகள் குறித்து மாவோ எழுதிச் செயல்பட்ட காலகட்டம். இதனை நாம் செவ்வியல் மார்க்சியக் காலகட்டம்(Classical Marxist) எனலாம்.

இரசியப் புரட்சியினால் ஆதர்சம் பெற்றாலும் இரசிய அனுபவங்கள் குறித்த விமர்சனத்துடன் சமாந்தரமாக 1920-கள் முதலே பிறிதொரு மரபு இருக்கிறது. ரோஸா லுக்ச்ம்பர்க், லுகாக்ஸ், கிராம்சி போன்றோரின் மரபு இது. இவர்களை ஆதர்சமாகக்

கொண்டு ஸ்டாலினின் இரசிய மாதிரிக்கு மாற்றான மனிதாபிமான மார்க்சிய(Humanist Marxist) மாதிரியொன்று ஹங்கேரிய கோஸ்லாவிய செக்கோஸ்லவாக்கிய நாடுகளில் உருவானது. பிராக் சிந்தனைப் பள்ளியினர், பிராக்சிஸ் சிந்தனைப்பள்ளியினர் (Parxis School) என இவர்கள் வழங்கப்பட்டார்கள்.

இரசிய சோசலிச அனுபவங்களும் பாசிச எதிர்ப்பு அனுபவங்ளும் இவர்தம் சமகாலத்தவர்களான பிராங்பர்ட் சிந்தனையினரது (Frankfurt School) பேசுபொருள்களாக ஆகின. புரட்சிகரப் பிரக்ஞை பற்றிப் பேசிய லுகாக்சினால் ஆதர்ஷம் பெற்றவர்களாக இவர்கள் இருந்தனர். இதனுடன் 1968 பிரெஞ்சு தொழிலாளர் மாணவர் எழுச்சியை ஒட்டி சார்த்தரின் இருத்தலில் மார்க்சியம்(Existentialist Marxism), அல்தூசரின் அமைப்பியல் மார்கசியம் (Structuralist Marxism) போன்ற சிந்தனைகள் எழுந்தன. இந்தச் சிந்தனைப் போக்குகளின் பின் இருந்தவர்கள் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களாக இருந்தவர்கள். சிலர் கட்சியின் உறுப்பினர்களாக இருந்து அதிலிருந்து வெளியேறியவர்கள்.

இந்த மேற்கத்திய, சீன அனுபவங்களுக்கு அப்பால் காலனியாதிக்க தேசிய விடுதலைப் போராட்ட அனுபவங்களாக வியட்நாமிய, கியூப, அங்கோலா, தெற்கு யேமான் போன்ற நாடுகளின் படிப்பினைகள் இருக்கின்றன. இவ்வாறு மார்க்சியம் கோட்பாடு, செயல்முறை என அதனது அனுபவப்பரப்பு பன்முகத்தன்மையானவை. இதனையே இன்று நாம் பன்முகத்தன்மையிலான மார்க்சியம் (Multidimensional Marxism) என்கிறோம்.

இந்த அத்தனைச் சிந்தனைப் போக்குகளோடும் இதுவரைத்திய இடதுசாரி மரபைப் புரட்டிப்போட்ட ஒரு நிகழ்வாக சோவியத் யூனியனிலும் கிழக்க ஐரோப்பிய நாடுகளிலும் இரசிய மாதிரி சோசலிச அரசுகள் வீழ்ச்சியடைகின்றன. சோவியத் மாதிரி (Soviet Model) சோசலிசத்திற்கு மாற்றான சோசலிச மாதிரிகள் பற்றிய விவாதங்கள் இப்பொது எழுகின்றன. எடின் பாலிபர், சந்தால்மொபே போன்றவர்கள் பேசும் சமத்துவத்தையும் சுதந்திரத்தையும்(Equality and Freedom) அடிப்படையாகக் கொண்ட ஜனநாயகம்(Radical Democray) பற்றிய விவாதங்கள் இப்போது எழுகின்றன.

## II

இருபதாம் நூற்றண்டு சோசலிசம் கம்யூனிஸ்டுக் கட்சி அதிகாரத்தின் கீழான பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் (Proletarian Dictatorship), அரசு சோசலிசம்(State Socialism) என்கிற இரசிய மாதிரியாக இருந்தது. இருபத்தியோராம் நூற்றாண்டு சோசலிசம் கீழிருந்து கட்டடப்படும் உழைக்கும் வர்க்கச் சமூகக்குழுக்களின்

பிரதிநிதித்துவப் பங்கேற்பு மற்றும் ஒருங்கிணைவில் உருவான ஒரு ஜனநாயக அமைப்பின் விளைவாக அரசு வடிவம் இருக்கவேண்டும் என்று வெனிசுலாவின் சேவாசும் மைக்கேல் எபோவிட்சும் தெளிவுபடுத்தினர் இதுவே எதிர்கால சோசலிசம் எனவும் அறிவித்தனர்.

வளர்ச்சியடைந்த முதலாளித்துவத்தில் தொழிலாளர் புரட்சி என்கிற காலகட்டமல்ல, ஆயுதப் புரட்சியின் மூலம் ஆட்சியதிகாரத்தை அமைத்த காலம் அல்ல, பாராளுமன்ற ஜனநாயகத்தின்(Parliamentary Democracy) வழி சோசலிசத்தைக் கட்டுவதைப் பற்றியே இப்போது நாம் பேசுகிறோம் என்றார் அமெரிக்க இலத்தீனமெரிக்க மார்க்சியரான மைக்கேல் லெபோவிட்ஸ்.

> ***மார்க்சும் எங்கெல்சும் தமது கம்யூனிஸ்ட்டுக் கட்சி அறிக்கையில் 'ஜனநாயகத்திற்கான போராட்டத்தில் வெற்றி அடைய உழைப்பாளி வர்க்கத்தினது புரட்சியின் முதல்படி பாட்டாளியை ஆளும் வர்க்கத்தின் நிலைக்குக் கொணர்வது' என்று வாதித்தார்கள். பிற்பாடு, தமது அரசியல் மேலாதிக்கத்தை வலிமையாகக் கொண்டு அனைத்து வகைகளிலும் முதலாளிகளிடமிருந்து மூலதனத்தைக் கைப்பற்றுவது என்றார்கள். தேர்தல்களில் வெற்றிபெறுவதாலோ அல்லது அல்லது அரசைக் கைப்பற்றுவதாலோ தொழிலாளி வர்க்கம் தனது அரசியல் மேலாதிக்கத்தைச் சாதிக்கமுடியாது என்பதை இருபதாம் நூற்றாண்டு மெய்ப்பித்திருக்கிறது. சமூகத்தின் உறுப்பினர்களுக்கு அவர்களது நாயகத்தன்மையுடன் தமது திறன்களை வளர்த்துக் கொள்வதற்கான வெளியைத்தரும் நிறுவனங்களை உருவாக்குவதே இன்று ஜனநாயகத்திற்கான உண்மையான போராட்டமாக இருக்கிறது.(2)***

சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பின்பு இன்றும் கம்யூனிஸ்ட்டுக் கட்சிகள் தலைமையில் சீனா, வியட்நாம், வட கொரியா, லாவோஸ், கியூபா போன்ற நாடுகளில் சோசலிசம் நிலவுகிறது. இவை அனைத்தும் உலகளாவிய முதலாளித்துவச் சந்தைப் பொருளாதார ( International Capitalist Market Economy) அமைப்புக்குள் நுழைந்துவிட்டன. அமெரிக்கா உள்ளிட்டுப் பங்களாதேஷ் வரை உலகில் கம்யூனிஸ்ட்டுக் கட்சிகள் இருக்கின்றன. அவை சோசலிசத்திற்கான தத்தமது பாதைகளையும் தமது திட்டங்களில் கொண்டிருக்கின்றன.

அரசு இடையீடு(State Intervention) செய்து மக்கள் நலனைப் பாதுகாக்கும், முதலாளிகளுக்கும் தொழிற்சங்க இயக்கத்திற்கும் மத்தியஸ்தம் செய்யும்(Mediate) என்கிற கீனிஸியப் பொருளதாரச் சிந்தனையையொட்டிய (Keynesian Economic Thought) தாராளவாதத்தை (Liberalism) இன்று நவதாராளவாதம் (Neo Liberalism) தோற்கடித்துவிட்டது. மக்கள் நலனில் அரசுக்கு எந்தப்

பொறுப்பும் இல்லை எனும் இது மக்கள் நலத்திட்டங்களைக் கைவிட்டுவிட்டது. மக்கள்நலத் திட்டங்களின் நிதிகளை வெட்டிக்குறைத்து (Austerity) விட்டது. சந்தையையும் கார்ப்பரேட் முதலாளிகளின் இலாபத்தையும் மட்டுமே மையமாக் கொண்ட ஒரு பொருளாதார அமைப்பை இது உருவாக்கிவிட்டது.

அமெரிக்காவின் ரீகனும் பிரிட்டனின் தாட்ச்சரும் இதனது முன்னோடிகள். இன்று இநதியா இந்தப் பாதையில்தான் பயணிக்கிறது. பொதுத்துறையை முற்றாக ஒழிப்பது இதனது பொருளியல் கொள்கையாக இருக்கிறது.

இது ஒரு புறமிருக்க சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பின் ஐரோப்பாவின் பெரும் கம்யூனிஸ்டுக் கட்சியான இத்தாலிய கம்யூனிஸ்டுக் கட்சி 2012 ஆம் ஆண்டு அதனது இருபதாவது காங்கிரசில் தனது பெயரை ஜனநாயக இடதுசாரிக் கட்சி என மாற்றிக் கொண்டது. அதே ஆண்டு பாலஸ்தீனக் கம்யூனிஸ்டுக் கட்சி தனது பெயரை பாலஸ்தீன மக்கள் கட்சி என்று மாற்றிக் கொண்டது. மார்க்சிய லெனினியத்தைத் தனது கோட்பாடாகக் கொண்டிருந்த குர்திஸ் விடுதலை இயக்கம் இன்று கீழிருந்து கட்டப்படும் ஜனநாயகம் தழுவிய முர்ரே புக்ச்சின் எனும் கோட்பாட்டாளரின் எதேச்சாதிகார எதிர்ப்பு(anti-Authoritarian) மற்றும் முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசத்தைத் (Libertarian Socialism) தேர்வு செய்திருக்கிறது.

சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் பின் கம்யூனிச அரசியல் இப்படி இரு கூறுகளாக ஆகியிருக்கிறது என்பதுதான் இன்று உலக அரசியல் யதார்த்தம்.

இன்று மார்க்சின் எழுத்துக்களை மட்டும் தனியே எடுத்துக்கொண்டு அதனைத் திட்டவட்டமான சிந்தனையமைப்பாக ஆய்வுசெய்யும் கல்வியியல் சார்ந்த முறை ஒன்று இருக்கிறது. மார்க்ஸ் இந்த உலகைப் புரிந்துகொள்ள விஞ்ஞானபூர்வமான ஒரு முறை யியலை உருவாக்குகிறார். இந்த முறையியலின் வழி, குறிப்பிட்ட வரலாற்று மனிதாய சக்தியின் வழி ஒரு எதிர்காலக் கனவுலகை அவர் வழிமொழிகிறார். அதாவது இயங்கியல் பொருள்முதலியல், வரலாற்றுப் பொருள்முதலியல் என்பது பகுப்பாய்வு, தொழிலாளி வர்க்கம் வரலாற்றுச் சக்தி, கம்யூனிசம் எதிர்காலக் கனவுலகு. இதில் முதலிரண்டு விஷயங்களை விரித்து எழுதிய மார்க்ஸ் அரசு முதலாளித்துவம் சோசலிசம் கம்யூனிசம் இவற்றுக்கு இடை யிலான மாற்றம் எவ்வாறு எந்தத் தருணத்தில் நிகழும் என்பதை விரித்து எழுதவில்லை. அவை சிதறலாக அங்கும் இங்குமான குறிப்புகளாகவே இருக்கின்றன. அவற்றை இன்றயை பொருளியல் வளர்ச்சியுடன் ஒப்பிட்டு இற்றைப்படுத்தும் திட்டம் ஒன்றை

ஜெர்மன் ரோஸா லக்சம்பர்க் ஆய்வு நிறுவனத்தினர் மார்க்சின் முழுமையடையாத திட்டம் (The Unfinished System of Marx) எனும் பொருளில் முன்னெடுத்து வருகின்றனர்(3).

III

மார்க்சுக்கு முன்னும் பின்னுமாகவும் சோவியத் யூனியனது வீழ்ச்சிக்குப் பின்னரும் சோசலிசம் குறித்த கருத்துக்கள் எவ்வாறு மாறிவந்திருக்கிறது என்பதை நாம் தொகுத்துக்கொள்வோம்.

மார்க்சுக்கு முன்னராகக் கோட்பாட்டு அடிப்படையில் ஆய்வுமுறையியல் சார்ந்து அல்லாமல் சமத்துவ சமூகத்தைப் படைத்தல் எனச் சிந்தித்த கற்பனாவாத சோசலிஸ்ட்டுகள்(Utopian Socialists) என ரூசோ, புனித சைமன், சார்ல்ஸ் பூரியர், ரோபரட், ஓவன் போன்றவர்கள் வேறுவேறு சமூக மாதிரிகளை முன்மொழிந்தார்கள். வர்க்கத்தின் மூலம் (Class Based) வரலாற்றுப் பரிணாமத்தைப் பற்றிய செயிண்ட சைமனின் பகுப்பாய்வு, சுற்றுச்சூழல்(Environmentalism) நிர்ணயவாதத்தில் ஓவனின் வலியுறுத்தல், சமூக அடக்குமுறை வடிவங்களின்(Social Oppressions) முக்கியத்துவம் பற்றிய போரியரின் அங்கீகாரம் ஆகியவை பிற்காலச் சோசலிசப் பகுப்பாய்வுகளில் முக்கியமான கூறுகளை வழங்கின. சமத்துவத்தின் பின்னணியில் ஒத்துழைப்பு, சங்கமித்தல், நல்லிணக்கம் போன்ற குறிப்பிட்ட மதிப்புகளில் கவனம் செலுத்துவதன் மூலம் கற்பனாவாதிகள் சோசலிசத்திற்குக் கணிசமான பங்களிப்பைச் செய்தனர். ஓவன் மற்றும் போரியரின் விஷயத்தில் இது பாலியல் சமத்துவத்தை(Sexual Equality) வலியுறுத்துவதாக இருந்தது.



கற்பனாவாத சோசலிஸ்ட்டுளைக் கடந்து, அரசு மறுப்புச்

சோசலிஸ்ட்டுகளோடு (Anarchist Socialists) அரசு எனும் பிரச்சினையில் மார்க்ஸ் முரண்பட்டார். அரசு அடிப்படையில் ஒடுக்குமுறை வடிவம் என்ற அரசு மறுப்பு(Anti-State) என்பதைத் தமது சிந்தனையின் அடிப்படையாக முன்வைத்தனர். இதற்கு மாறாகக் கூட்டுறவு அமைப்புகள் (Cooperatives), கம்யூன்கள் (Communes), உழைப்பாளர் கவுன்சில்கள் (Workers Councils) போன்றவற்றை முன்வைத்தனர். மார்க்ஸ் புரவுதோன், பகுனின் போன்றவர்களோடு வாதிட்டு, இயங்கியல் (Dialectics), வரலாற்றுப் பொருள்முதல்வாத ஆய்வு (Historical Materialism), வர்க்கப்போராட்டம் பாட்டாளி வர்க்கத் தலைமை(Proletarian Leadership) என விஞ்ஞான ரீதியில் சோசலிசத்திற்கான பாதையை விளக்கினர். இரசியாவில் அமைந்த சோசலிசம் என்பது பாட்டாளி வர்க்கத்தின் தலைமை என்று சொல்லிக்கொண்ட அதிகாரவர்க்கத்தின்(Bureaucratic State in the name of Proletariat) ஆட்சியாக ஆகியது. (4)

இத்தகைய சோவியத் மாதிரிக்கு மாற்றான ஒன்றையே 21 ஆம் நூற்றாண்டுகான சோசலிசமாக இந்திய மார்க்சிஸ்டுக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரான பிரகாஷ் காரட் முன்வைக்கிறார். 20 ஆம் நூற்றாண்டின் சோசலிசத்தில் சோவியத் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு உற்பத்திச் சாதனங்களின் பொதுவுடைமை பெருமளவில் அரசிடம் இருந்தது. அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் முக்கியவடிவமாக இருப்பதால் அது பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும், இயக்கும் அதிகாரவர்க்கத்தின் கட்டுப்பாட்டுக்கு அது வழிவகுத்தது. நிறுவனங்களை நடத்துவதில் தொழிலாளர்களுக்கு எந்தக் கருத்தும் இல்லை. 21 ஆம் நூற்றாண்டில் சோசலிசத்தின் கீழ் பொதுவுடைமை பல்வேறு வடிவங்களில் இருக்க வேண்டும். அரசு உடைமை அந்த வடிவங்களில் ஒன்றாகும். அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் அல்லது பொதுத்துறையாக அது இருக்கலாம். தொழிலாளர்கள் மற்றும் ஊழியர்களுக்குச் சொந்தமான கூட்டுறவு நிறுவனங்கள் இருக்க வேண்டும். சோவியத் யூனியனில் இருந்த மிகவும் மையப்படுத்தப்பட்ட அமைப்பைப் போல அல்லாமல், பல்வேறு வகையான பொதுவுடைமை அமைப்புகள் இருக்க வேண்டும் என்கிறார் பிரகாஷ் காரட்.(5).

## IV

மார்க்சியம் எந்தச் சமூகத்தையும் பகுப்பாய்வதற்கான ஓர் ஆய்வுமுறையை முன்வைக்கிறது. அதுதான் இயங்கியல் வரலாற்றுப் பொருள்முதலியல். பிற்பாடு மார்க்சில் முக்கியமானது வர்க்கப்

போராட்டம் புரட்சிகரக் கட்சி வளர்ச்சியடைந்த முதலாளித்துவத்தில் புரட்சி சோசலிசம் அதன் வளர்ந்த கட்டமாகக் கம்யூனிசம்.

ஐரோப்பாவில் கார்ல் மார்க்ஸ் எதிர்பார்த்தது போல, வளர்ச்சியடைந்த முதலாளித்துவம், வளர்ச்சியடைந்த பாட்டாளி வர்க்கத்தலைமை என்பது உலகின் முதல் புரட்சியான இரசியப் புரட்சியில் இல்லை. சீனாவில் முன்னணிப்படை, விவசாயிகள். கியூபாவில் மாணவர் நடுத்தர வர்க்கத்தினர். வெனிசுலா, பொலிவியா உள்ளிட்ட இலத்தீனமெரிக்க நாடுகளில் பிரதானமாகப் பூர்வகுடி மக்கள். இந்தியாவில், பிரதானமாகத் தொழிலாளி வரக்கத்தினருடன் தலித்துகள்.

இரசியப் புரட்சியை மூலதனத்துக்கு எதிரான புரட்சி என்றார் கிராம்சி. இவ்வாறு புரட்சிக்கு யார் முன்னணி வகிப்பது என்பது அந்தந்தச் சூழலால் தீர்மானிக்கப்படுவது. இவை அனைத்தினதும் இலக்கு சோசலிசம். மார்க்ஸ், லெனின்பிடல், லுமும்பாசேவாஸ், என அனைவரதும் இலக்கு மார்க்ஸ் முன்வைத்த சோசலிசம்தான்.

பகுப்பாய்வுக் கருவி ஒன்று. முறைகள் அந்தந்த நாட்டுக்கு உரியவை. முக்கியமான விஷயம், அந்தந்த நாட்டின் பிரத்யேகத் தன்மையைக் கவனம் கொள்வது என்பதுதான். அம்பேத்கரும் அரச சோசலிசம் (State Capitalism) தான் தனது இலக்கு என்று பேசுகிறார். அவரோடு உரையாடல் மேற்கொள்வது என்பது இந்தியாவின் 17 சதவீதமாகத் திரண்டிருக்கிற ஒடுக்கப்பட்ட மக்களிடம் உரையாடல் மேற்கொள்வது.

மார்க்ஸ் எதிர்பார்த்தபடி வளர்ச்சியடைந்த முதலாளித்துவ சமூகத்தில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் புரட்சி என்பது நடைபெறவேயில்லை. ஆயுதப்புரட்சி நடைபெற்ற சமூகங்களிலும் இரண்டாம் உலகப் போரில் விளைந்த கிழக்கு ஐரோப்பிய சமூகங்களிலும்தான் ஒற்றைக்கட்சி கம்யூனிச ஆட்சி வந்தது. அடுத்து சீனா, வியட்நாம், கியூபாவில் காலனியாதிக்க எதிர்ப்பு ஆயுதப்புரட்சி நடந்தது. இவை அனைத்தும் எழுபது ஆண்டுகளுக்கு முந்திய அனுபவங்கள்.

நிகரகுவாவில் (1979-90) இடதுசாரிகள் ஆயுதப்புரட்சியின் மூலம் ஆட்சிக்கு வந்து பிற்பாடு பாராளுமன்ற ஜனநாயகத்திற்குத் திரும்பினார்கள். இன்று கம்யூனிஸ்ட்டுகள் உலகில் எங்குமே ஆயுதப் புரட்சியின் மூலம் ஆட்சி என்பதைப் பேசுவது இல்லை. இலத்தீன் அமெரிக்காவில் ஆயுத இயக்கங்கள் கடந்தகாலம் என்றார் பிடல். இலத்தீனமெரிக்க இடதுசாரிகள் பாராளுமன்ற ஜனநாயகம் வழிலான சோசலிச சமூகம் என்றுதான் பேசுகிறார்கள்.

மேற்கிலும் மேற்கல்லாத நாடுகளிலும் தாராளவாத முதலாளித்துவத் திலிருந்து சோசலிசம் நோக்கி என்பதுதான் இன்று இடதுசாரிச்

சிந்தனையாக இருக்கிறது. பொதுத்துறையின் கீழ் அடிப்படைத் தேவைகள், கலப்புப் பொருளாதாரம், ஒடுக்கப்பட்ட மக்களுக்குச் சமூகநீதி, கல்வி, மருத்துவம், இருப்பிடம் போன்றவற்றில் சமத்துவம், பெண்ணிலைவாதம் (Feminism), கருத்துச்சுதந்திரம், சூழலியல் (Ecology), அரசியல் ஜனநாயகம், சிறுபான்மையினர் உரிமை என்பதுதான் இன்றைய சோசலிச சிந்தனை. 21 ஆம் நூற்றாண்டு சோசலிசம் இதிலிருந்துதான் உருவாக முடியும்.

இன்று உலகின் அனைத்துப் பிரச்சினைக்கும் ஒரு தனிச் சிந்தனையாளரிடம் ரெடிமேட் பதில்களை எதிர்பார்க்க முடியாது. காலமும் இடமும் ஒருவரது சிந்தனையைத் தீர்மானிக்கிறது. கால மாற்றத்தில் அவரது சிந்தனை பலராலும் விரித்தெழுதப்படுகிறது. பிரச்சினை நம் காலத்தின் பிரச்சினைகளை எதிர்கொள்வது என்றால் நாம் அதனை மையமிட்டுதான் சிந்திக்க வேண்டும்.

இதனால்தான் மார்க்ஸ், அம்பேத்கர், பெரியார் சிந்தனையின் ஒருங்கிணைவை நாம் பேசுகிறோம். இவை அனைத்துமே உறவும் முரணும் கொண்டவை. இனியான தேடலும் தேவைப்பட்டவை. இந்தியச் சூழல் இதனைக் கோருகிறது. நமக்கு என்ன வேண்டும்? அதன் விரிவான அர்த்தத்தில் இந்திய ஒடுக்கப்பட்ட மனிதரின் விடுதலை. இதற்கு ஓர் அமைப்பாக எந்தத் தனியொருவரதும் சிந்தனை போதாது. அதனால்தான் விடுதலைச் சிந்தனைகளில் இருந்து தேர்வை மேற்கொள்கிறோம். ஹெகலில் கருத்து முதலியலை நிராகரித்துவிட்டு இயங்கியலைத் தேர்ந்து அதனை இயங்கியல் பொருள்முதலியலாக மார்க்ஸ் உருவாக்கவில்லையா?

## V

கார்ல் மார்க்ஸ் (1818-1883) மறைந்து எட்டு ஆண்டுகளின் பின் அம்பேத்கர் (1891-1956) பிறந்தார். மார்க்ஸ் பத்தொன்பதாம் நூற்றாண்டின் சிந்தனையாளர் என்றால், அம்பேத்கர் இருபதாம் நூற்றாண்டின் மத்தியகாலச் சிந்தனையாளர். இருவரும் 65 ஆண்டுக் காலம் உயிர் வாழ்ந்தார்கள்.

உலக அளவில் என்றால் அம்பேத்கரின் மார்க்சியம் குறித்த அனுபவம் என்பது சோவியத் சோசலிசம் குறித்த அனுபவம்தான். ஸ்டாலின் காலம் குறித்த குருஷ்சேவின் ஆவணம் 25 பிப்ரவரி 1956 சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 30 ஆவது காங்கிரசில் சமர்ப்பிக்கப்படுகிறது. அம்பேத்கர் அதே ஆண்டு டிசம்பர் 5 ஆம் திகதி மரணமடைகிறார். குருஷ்சேவ் ஆவணம் குறித்து அம்பேத்கர் ஏதாவது எழுதியிருக்கிறார் என்பதற்கான ஆவணம் இல்லை. அம்பேத்கர் மார்க்ஸ், லெனின் குறித்துச் சாராம்சமாக எழுதியிருக்கிறாரே அல்லாது இவர்களிலிருந்து குறிப்பான

நூல்களிலிருந்து குறிப்பான மேற்கோள்களை அம்பேத்கர் பாவித்திருக்கவில்லை.

இந்தியாவில் நிலப்புரபுத்துவத்தை ஒழிப்பது என்பது சாதியை ஒழிப்பதன் மூலமே சாத்தியம் என அம்பேத்கர் கருதினார். வர்க்க ஒற்றுமைக்கான முன்நிபந்தனையாகப் பிரக்ஞைபூர்வமாகத் தொழிலாளி வர்க்கத்தினிடையில் சாதிய நீக்கமனநிலை உருவாகவேண்டும் என அவர் கருதினார். இந்தப் பிரச்சினை அவர் காலத்தில் வர்க்க மையவாதத்தை முன்னுறுத்திய கம்யூனிஸ்ட்டுகளுக்கும் அவருக்குமான பெரும் முரணாக எழுந்தது.

சாதி ஒழிப்பு என்பது ஒரு சட்டமுறை அணுகல், அதற்கு முன்பாக அது பிரக்ஞை மாற்றம். தொழிலாளி வர்க்கத்திடம் இந்தப் பிரக்ஞை மாற்றத்தை (Conscious Building) யார் உருவாக்குவது? அதற்கான கருத்தியல் அடிப்படை இல்லாமல் அது எப்படிச் சாத்தியம்? பஞ்சாலைத் தொழிலகத்தில் துப்புரவு, கடும் உடலுழைப்பு கோரும் வேலைகளை (Menial and Manual Jobs) மட்டும் தலித்துகளுக்கு ஒதுக்காமல், நெசவுப் பிரிவிலும் (Weaving Department) தலித்துகளுக்கு இடம்தரப் போராடுவது என்பது வர்க்கப் போராட்டதின் பகுதி. வர்க்க ஒற்றுமைக்கு இந்த சாதியப்பிளவு மனநிலை தடையாக இருக்கிறது. சாதியம் நிலைபெறக் காரணம் நிலப்பிரபுத்துவ முறை. நிலப்பிரபுத்துவ ஒழிப்பின் முதல் எதிர்முனை விவசாயக் கூலித்தொழிலாளர்களில் பெரும்பான்மையான தலித் மக்கள்தான். இவர்கள் குறித்த சாதியப்பிரக்ஞை மாற்றம் உருவாகாமல் எவ்வாறு நிலமற்ற விவசாயிகள்கூலித்தொழிலாளர் ஒற்றுமை உருவாகும்?



உழைப்பு, சுரண்டல், முதலாளிய மூலதனத் திரட்டல் பற்றிப் பேசும்போது மார்க்ஸ் உற்பத்தியில் ஒப்புதலுடனான உழைப்பு

(Free Labour), ஒப்புதலற்ற நிர்ப்பந்திக்கப்பட்ட உழைப்பு (Unfree Labour) பற்றிப் பேசுகிறார்.

உழைப்புக்கான ஊதியம் என்ற ஒப்புதலுடன் உற்பத்தியில் ஈடுபடுவது முதல் வகை. திரட்டப்பட்ட தொழில்கள், அரசு மற்றும் தனியார் அமைப்புத் தொழிற்சங்கங்களில் இருப்போர் இத்தகைய தொழிலாளர். அடிமை முறைக்குள்(Slavery) கொணரப்பட்ட, சங்கிலிகள் பூட்டப்பட்ட நிலையில் கொட்டகைகளில் அடைக்கப்பட்டு, மிருகங்களைப் போல் உழைப்புச் செலுத்த நிர்ப்பந்திக்கப்படடவர்கள் ஆப்பிரிக்க மக்கள், வெவ்விந்தியப் பூர்வகுடி மக்கள் போன்றோர்.

மார்க்ஸ் இத்தகையவர்களை முதலாளிய உறபத்தி முறைக்கு முன்னரான காலத்தவராகப் பிரிக்கிறார். இந்தியச் சூழலில் தலித் மக்கள் இத்தகைய பின்ணணியில்தான் பரம்பரை அடிமைகளாக (Bonded Labourers) வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

இன்று மேற்கத்தியஅமெரிக்க முதலாளிய மூலதனத் திரட்டலுக்கு வரலாற்று ரீதியில் இனநிற மூலதனம்(Racial Capitalism) எனப் பெயரிடுகிறார்கள். இத்தகைய நோக்கில் இந்திய நிலைமையில் நிச்சயமாக சாதிவாத மூலதனத்திரட்டல்(Casteist Capitalism) என்பது நிகழ்ந்தேயிருக்கிறது. (6)

வர்க்க அரசியல் பெருமளவு ஒப்புதலுடனான உழைப்பில் ஈடுபடும் திரட்டப்பட்ட தொழிலாளர்களினிடையேதான் தொழிற்சங்கங்களின் வழி செயல்படுகிறது. உண்மையில் இன்றும் விவசாயக் கூலித்தொழிலாளர்கள், உதிரித்தொழிலாளர்கள், அமைப்புசாராத் தொழில்களில் ஈடுபடுபவர்கள் நிப்பந்திக்கப்படும் உழைப்பைத் தருபவர்களாவே உள்ளனர். இப்படி இருப்பவர்கள் பெரும்பாலும் தலித் மக்கள்தான். எனவேதான் ஒப்புதலுடனான உழைப்பு, நிரப்பந்திக்கப்படும் உழைப்பு என இரண்டையும் உற்பத்தி உறவுகளில் வைத்துப்பேச வேண்டும். இந்த வகையில் வர்க்கமும் சாதியும் கறுப்பினமும் சமமுக்கியத்துவம் கொண்டதாக ஆகின்றன.

இந்தியச் சமூகத்தில் இந்துமதம், சாதி, பார்ப்பனியம், அரசதிகாரம் என்பவற்றுக்கு இடையிலான இடையறாத உறவை அம்பேத்கர் வெளிப்படுத்தினார். பார்ப்பனியம் குறித்த அவரது பார்வையும் மதத்தை ஒரு விமர்சன அலகாக விலக்கி வைத்த கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் பார்வையும் இருவருக்குமிடையில் பெரும் முரணாக எழுந்தது. தமிழகத்தில் பெரியாரியத்துக்கும் கம்யூனிஸ்ட்டுகளுக்கும் இடையிலான முரணாகவும் இது இருந்தது.

எல்லா வகைத் தத்துவ நோக்குகளும், கோட்பாட்டுப் பார்வைகளும், அறிவுத்துறைகளும் தீர்க்கவேண்டிய பிரச்சினை இதுதான். அமைப்பு பிரச்சினையாக, சிக்கலானதாக, வலிதருவதாக,

நெருக்கடி மிக்கதாக, மாற்ற வேண்டியதாக இருக்கிறதா? இதற்கு பிரக்ஞையின் பங்கு என்ன? மாற்ற வேண்டியதில் மனிதனின் பங்கு என்ன? அமைப்பு குறித்த ஆய்வுக்கு(Analysis) மார்க்சை விட்டால் வழியேது? கூடுதலாக அல்தூசர், கிராம்சி. பிரக்ஞையை (Consciousness) ஆழ்ந்து கற்க லுகாக்ஸ். கூடுதலாக சார்த்தர். மனிதனின் பங்கு (Human Agency) குறித்து அளவிட லெனின். கூடுதலாக மாவோ, சேகுவேரா. உலகின் அத்தனைச் சிந்தனையமைப்புகளையும். ஆம், அம்பேத்கர், பெரியார் உள்ளிட்டு இதற்குள் இருத்திவிடலாம்

அம்பேத்கர் பொருளியலாளராகவும் இந்திய யாப்பை எழுதியவராகவும், தலித் விடுதலைக் கோபாட்டாளராகவும் அரசமைப்பு, மக்கள்நலன், அரசு சோசலிசம், சாதிய நீக்கம் போன்ற பிரச்சினைகளை மையம் கொண்டே அவரது சிந்தனைகள் கோட்பாட்டாக்கம் பெற்றன.

இரசிய சோசலிசம் என்பது ஒற்றைக்கட்சியான கம்யூனிஸ்ட்டுக் கட்சி ( One Party State directed by Single Party) வழிகாட்டுதலில் அரசு முதலாளித்துவத்தை (State Capitalism) இடைக்காலகட்டமாகவும், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் (Proletarian Dictatorship) கொண்ட அடுத்தகட்ட அரசை சோசலிசம் (Socialism) எனவும் லெனின் வரையறுத்தார். அம்பேத்கர் அரசின் அடிப்படையாகச் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பதை முன்வைத்தார். அவரது அரச சோசலிசம் பல்கட்சி பாராளுமன்ற ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டது. அம்பேத்கர் பலகட்சிகள் பங்கேற்கும் பாராளுமன்ற அமைப்பில் ஜனநாயக சோசலிசத்தை (Democratic Socialism) முன்வைத்தார். அதனை அவர் அரசு சோசலிசம் என்கிறார்.

வர்க்கத்தைக் கீழ்கட்டுமானத்தில் (Basic Structure) வைத்து வரையறுக்கும் இந்திய மார்க்சியர்கள் சாதியை மேல்கட்டுமானத்தின் (Super Structure) பகுதியான பண்பாட்டுப் பிரச்சினையாக (Caste as Cultural issue) முன்வைத்ததை அம்பேத்கர் மறுத்தார். சாதி உற்பத்திஉறவாகவும் வர்க்கத்திற்கு இணையாகவும் (Caste oppression as parallel to Class oppression) பார்ப்பனிய மேலாதிக்கப் பண்பாட்டின் பகுதியாகவும் இருக்கிறது. இவ்வாறு கீழ்மேல் கட்டுமானம் என இரண்டிலும் சாதி வலுவான இருப்பைக் கொண்டிருக்கிறது. வேறு வேறு சூழல்களில் கீழ்க் கட்டுமானம் சார்ந்த பொருளாதார நிர்ணயம் (Economic Determinism) என்பதற்கு மாறாக, மேல்கட்டுமானம் அரசியல் மற்றும் கலாச்சாரமும் நிர்ணயக்கூராக இருக்கமுடியும்.

குறிப்பாக மார்க்சின் வரையறையில் மேல்கீழ் கட்டுமானம் என்பது ஒரு உருவகம் (Metaphor). அது இறுகிய (Static), உறைநிலைக் கட்டமைப்பு (Freezed) அல்ல. இரண்டும் பரஸ்பரம்

(Mutually) பாதிப்பதும் மாற்றத்துக்கு உட்பட்டதாகவும் இருக்கினறன. மூலதனம், அரசு, பாசிசம் பற்றிய ஆய்வில் இது வெளிப்படும். கிராம்சி, அல்தூசர் போன்றவர்கள் இதனைச் சொன்னார்கள்.(7)

மார்க்சும் அம்பேத்கரும் சோசலிசம் பற்றிச் சிந்தித்தவர்கள். சோசலிசத்திற்கான முன்நிபந்தனை நிலப்பிரபுத்துவம் ஒழிக்கப்பட வேண்டும். சாதியமைப்பு ஒழியாமல் நிலப்பிரபுத்துவம் ஒழியாது. வர்க்கப் போராட்டத்தின் வழியிலான சோசலிசத்திற்கு ஏதுவான சூழல் சாதி ஒழிப்பில்தான் இருக்கிறது என்கிறார் அம்பேத்கர். அம்பேத்கரின் சோசலிசம் என்பது இரசிய அனுபவங்கள், மதம் சாதிபார்ப்பனியத்தை ஆய்வுக்குட்படுத்தாத அவர்காலத்திய இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சிகளின் பாலான விமர்சனத்தில் இருந்து வடிவம் பெற்றது. சுதந்திரம் சமத்துவம் சகோரத்துவம் எனும் அவரது அவாவில் இருந்து வடிவம் பெற்றது.

அம்பேத்கரின விமர்சனத்தைக் கருத்தில் கொண்டு இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் மூத்த தவைர்களில் ஒருவரான ஏ.பி.பரதன் இவ்வாறு சொல்கிறார் :

***சாதியை ஒழிப்பதும் சாதியமைப்பை ஒழிப்பதும் இந்திய ஜனநாயகப் புரட்சியின் ஒருங்கிணைந்த பகுதியாகும். சாதி அமைப்பை ஒழிக்காமல் இந்திய நிலப்பிரபுத்துவத்தை முற்றிலும் ஒழிக்க முடியாது. இந்திய முதலாளித்துவ அமைப்பிற்குச் சாதி அமைப்பைத் தகர்க்க அரசியல் மற்றும் பொருளாதார விருப்பம் இல்லை, ஏனெனில் சாதிப் பிளவுகள் உழைக்கும் மக்களைப் பிரிக்க உதவுகின்றன, இதனால் கூலித் தொழிலாளைரைச் சுரண்ட உதவுகின்றன. இடது மற்றும் கம்யூனிஸ்ட்டு இயக்கங்கள் விரவான வகையில் பொருளாதார ஒடுக்குமுறை மற்றும் சமூக பாகுபாடுகளுக்கு எதிராக உழைக்கும் மக்களின் வர்க்கப் போராட்டங்களை வலுப்படுத்த வேண்டும். (8)***

## VI

மார்க்சிய ஆய்வு முறையியலுக்கோ மார்க்சியம் சொல்கிற கம்யூனிசத் திட்டத்திற்கோ மாற்றாக, அதனைப் பிரதியீடு(Replace) செய்ய ஒரு முழுமையான சமூகத் திட்டத்தைப் பெரியார் உருவகிக்கவில்லை. அது அவரது நோக்கமும் இல்லை. அவர் கம்யூனிசத்தை ஒரு சமூகத் திட்டமாக ஏற்றவர்.

இந்துமதம்,சாதி, பார்ப்பனியம் போன்றவற்றில் மார்க்சியர் கவனம் கொள்ளவேண்டும் என அவர் கோருகிறார். இது பண்பாட்டரசியலில். இந்திய நிலைமையில் மேல்கட்டுமானத்தில் மேலாதிக்கம் செய்யக் கூடியதாக, நிர்ணயமான பாத்திரம் வகிக்கக் கூடியதாக இது இருக்கிறது.

பெரியார் பொதுவுடமையை ஏற்கவே செய்கிறார். கம்யூனிஸட்டுக் கட்சி அறிக்கையைத் தமிழில் கொண்டுவந்தவர் அவர்தான். கிராம்சி, அல்தூசர் வழியில் பெரியார் இந்திய நிலைமையில் மார்க்சியத்தின் ஒரு தொடர்ச்சி.

அம்பேத்கர் தனது இறுதிக்காலத்தில் புத்தரா மார்க்சா என்று கேள்வி கேட்டு புத்தரது அமைதி வழியை மாற்றுச்சமூகத்திட்டமாக (Alternative Society) முன்வைத்தவர்தான். புத்தமதம் தனிமனித வாழ்வுக்கான வழிகாட்டு நெறியாக அமையலாமேயல்லாது, மார்க்ஸ் முன்வைக்கிற முழுமையான ஒரு சமூகப் பொருளியல் பண்பாட்டு மாற்றாக ஆகமுடியாது.



அரசுடன் இணைந்து கொண்ட எந்தமதமாயினும் அது வன்முறையாக அடுத்தவர் மீதான ஒதுக்கலாகவும்தான் ஆகிவிடுகிறது என்பதற்கு இலங்கை, பர்மா போன்ற நாடுகள் எடுத்துக்காட்டு. ஒரு அரசியல் திட்டமாக புத்தமதப் பார்வை மார்க்சியத் திட்டத்துக்கு மாற்றாகிவிடமுடியாது.

அம்பேத்கர், சாதியப் பிரச்சினையை வர்க்கப் பிரச்சனையுடன் இணக்கப்படுத்துவதற்கு இடையறாது முயன்றவர். இந்துமதம் சாதி ஒதுக்கல் பார்ப்பனியம் வெறுமனே மேல்கட்டுமானம் சார்ந்த பணபாட்டுப் பிரச்சினை அல்ல, அது அனைத்தும் தழுவிய இந்திய அமைப்பு சார்ந்த பிரச்சினை என கம்யூனிஸ்ட்டுக் கட்சியோடு வாதிட்டுக் கொண்டிருந்தார். அதில் அவர் விரக்தியுற்றார். இவ்வாறுதான் அவரது இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சி சார்ந்த ஒவ்வாமை உருவானது.

அடுத்து, அத்யாவசிய மக்கள் சேவைகள் பொதுத்துறையின் கீழ், பிற சமூகத் திட்டங்கள் அனைத்தும் சுதந்தரம், சகோரதரத்துவம, சமத்துவம் என்பதன் அடிப்படையில் அமைய வேண்டும் என்றார் அவர். அன்றைய பிரித்தானியத் தொழிலாளர் கட்சி(British Labour

Party) முன்வைத்த அரசின் தலையீடு(State Intervention)-அரசின் வழியில் மக்கள் நலத்திட்டங்கள் எனும் பாதையையே அவர் தேர்வுசெய்தார்.

பிரித்தானியத் தொழிற்கட்சியின் தலைவரான நார்மன் இயான் மெக்கன்சியின் சோசலிசம் : ஒரு குறு அறிமுகம்( Socialism : A short Introduction) எனும் நூல் மற்றும் அமெரிக்க சமூக ஜனநாயகவாதியான ஜான் டூயியின் ஜனநாயகமும் கல்வியும் (Democracy and Education) எனும் நூலின் ஆதர்சத்தினாலும் உருவானது அம்பேத்கரின் அரசியல் கருத்தியல்.

ஒரு வார்த்தையில் சொன்னால் சோசலிசம் குறித்த அவரது தேர்வு அவரது கால இரசிய சோசலிசத்திற்கும்( Russian Socialism based on Proletariaon Dictatorship), பிரித்தானியத் தொழிலாளர் கட்சியின் சமூக ஜனநாயக(Socialism based on Multi party Democracy) சோசலிசத்திற்கும் இடையிலானதாக இருந்தது. அவர் சமூக ஜனநாயக சோசலிசத்தைத் தேர்வு செய்தார். கம்யூனிசம், இந்தியக் கம்யூனிஸ்ட்டுகள் தொடர்பான அவரது நிலைபாடுகளை இவ்வாறுதான் நாம் புரிந்துகொள்ள முடியும்.(9)

சோசலிசத்தில் ஜனநாயகம் குறித்த வலியுறுத்தலை இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சி லிபரேசன் அமைப்பின் செயலாளர் திபங்கர் பட்டாச்சார்யா பின்வருமாறு குறிப்பிடுகிறார் :

> ***சோவியத்திற்குப் பிந்தைய உலகில் உலகளாவிய பொருளாதார அரசியல் போக்குகளின் பின்னணியில் தற்போதைய இந்திய முன்னேற்றங்களைக் கண்டறிய முடியும் என்றாலும், இந்திய வரலாறு மற்றும் சமூகத்தில் இதற்கான வலுவான வேர்கள் உள்ளன. அம்பேத்கரையும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையும் ஏற்கும்போது அவர் விடுத்த எச்சரிக்கைகளையும் மறுபரிசீலனை செய்ய வேண்டும். அரசியலில் இடதுசாரிகளின் பார்வையும் பங்கும் வரலாற்று ரீதியாகச் சோசலிசத்தைக் கட்டியெழுப்புவதற்கான கருத்துக்கள், சோதனைகளுடன் அடையாளம் காணப்பட்டுள்ளது, ஆனால, ஜனநாயகத்தின் ஓர் உயர்ந்த மாதிரியை வழங்குவதற்கான சோசலிசத்திற்கான சவால் ஆபத்தான வகையில் புறக்கணிக்கப்பட்டுள்ளது. ஒரு பாசிசத் தாக்குதலை எதிர்கொள்ளும் போது, இந்தியாவில் இடதுசாரிகள் ஜனநாயகத்தின் மிகவும் நிலையான, நம்பகமான போராளிகளாக வெளிப்பட்டு அதனை உறுதிப்படுத்த வேண்டும். (10)***

இன்றைய நிலையில், வர்க்கத்துக்கு இணையானது சாதி, இந்துமதம், சாதி, பார்ப்பனியம், இந்திய அதிகார அமைப்பு என்கிற அம்பேத்கரது வலியுறுத்தலை ஏற்று அம்பேத்கரை மார்க்சியர்கள் தமது அனைத்தும் தழுவிய முழுமையான கம்யூனிசத் திட்டத்தினுள்

ஏற்க முடியும். உண்மையில் இந்திய சோசலிசம் நோக்கிய மார்க்சிய வழியில் இருக்கிற தடைக்கற்களைத்தான் (Hindrance) அம்பேத்ரும் பெரியாரும் அக்கறையுடன் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

மார்க்சும் லெனினும் வலியுறுத்திய கருத்தாக்கங்களான முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் போன்றன இன்று அதனது அடுத்த கட்டமாக கார்ப்பரேட்டிசமாக வடிவம் பெற்றிருக்கிறது. சமூக ஜனநாயக தாராளவாதம் இன்று நவதாராளவாதமாக வடிவம் பெற்றிருக்கிறது. உடலுழைப்புத் தொழிலாளர்கள் சேவைத் துறைத்தொழிலாளர்கள், திரட்டப்படாத தொழிலாளர்கள் என்று வர்க்க அரசியலை அணுகவேண்டியிருக்கிறது. மார்க்ஸ் அனைத்துத்துறை அறிவும் சார்ந்து சிந்தித்தவர். அவர் ஹெகல் முதலான அவரது காலத்தின் சிந்தனையாளர்களைக் கடந்து வந்தவர். இதனாலேயே மார்க்சிய மரபு அனைத்துத் துறைகளையும் பாதிக்கிறது. அம்பேத்கரும் பெரியாரும் இந்திய நிலைமையில் மார்க்சியத்தின் உடன்பயணிகள். அவர்களோடு இணைந்தும் கடந்தும் அது அதனது பொதுவுடைமைத் திட்டம் நோக்கி நடக்கும் வலிமைகொண்டது.

இந்திய சுதந்திரத்திற்கு முன்னும் பின்னும் பாராளுமன்ற ஜனநாயகம் இந்தியாவில் இயங்கி வருகிறது. சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகளில் இந்தியா பாராளுமன்ற ஜனநாயகத்தில் இயங்கிவருகிறது. இந்திய அரசியல் அமைப்புக்குள்தான் நாம் இன்று சோசலிசம் பேசமுடியும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் இங்கு சாத்தியமில்லை. ஒற்றைக்கட்சி ஆட்சியதிகாரம் என்பது இந்தியாவிற்கான பாதையாக இருக்க முடியாது. ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவரதும் தலைமையில் அமைகிற ஆட்சியே இந்திய சோசலிசத்திற்கான பாதையாக ஆக முடியும்.

மார்க்ஸ் காலத்திலும் அவரது பின்னும் எத்தனையோ பின், நவ கோட்பாடுகள் வந்துபோய்விட்டன. மார்க்சியம் மட்டுமே தொடர்ந்து விமோசன அரசியலாகக் களத்தில் இருக்கிறது. அதற்கான காரணம், அதுவெறும் பகுப்பாய்வு மட்டும் அல்ல. அது சொர்க்கத்தை மண்ணில் படைக்கும் அனைத்தும் தழுவிய, மனித விடுதலைக்குகான அனைத்தையும் உள்ளடக்கும் ஒரு நடைமுறைத் திட்டம். அதனைப் பிற சிந்தனைகள் பிரதியீடு செய்துவிடும் எனக் கருத முடியாது.

***References:***

*(1) B.R. Ambedkar/Annihilation of Caste/ 1936.*

*(2) Michael A. Lebowitz/ What Is Socialism for the Twenty-First Century? /*

*Monthly Review/01 October 2016.*

*(3) Judith Dellheim and Frieder Otto Wolf /The Unfinished System of Karl Marx : Critically Reading Capital as a Challenge for our Time/ Springer/ 2018.*

*(4) Michael Newman/Socialism : A very short Introduction/ OUP/2005.*

*(5) Prakash Karat/CPI-M/ Marxism in the 21st Century: Alternative to*

*Neoliberal Capitalism and Imperialism/The Marxist, XX V II 4/*

*October–December 2011.*

*(6) Sheetal Chabria / Where Does Caste Fit in A Global His tory of Racial Capitalism? / Historical Materialism/ July 2 023.*

*(7) D.Raja and N.Muthumohan / Marx and Ambedkar Con t inuing the Dialogue*

*/ Refer Muthumohan's talk on Basic-Superstrucure/2018.*

*(8) A.B.Baradhan/CPI/Introduction/CPI /Marx and Ambed kar Continuing the*

*Dialogue/ D.Raja and N.Muthumohan/NCBH /2018.*

*(9) V.Geetha /Bhimrao Ramji Ambedkar and the Question of Socialism in*

*I ndia/ Refer Communists, Caste and Hindu Religion /2021.*

*(10) Dipankar Bahttacharya/CPI(ML) Liberation/ Fascism Democracy and the Left Forum Speech /20 th Decem ber /2020.*

• **கட்டுரையாளர் - இலண்டன் வாழ் மார்க்சிய ஆய்வாளர், பல்துறை எழுத்தாளர்**

❖❖❖

# அம்பேத்கரிய விடுதலைக் கருத்தியல் அரசியலும்,அண்ணலின் பன்முகப் பரிமாணங்களும்.

**வே.மு.பொதியவெற்பன்**

விடுதலைக்கான வழிகாட்டும் அரசியல் தத்துவம் முற்றுண்மையானதுமன்று, ஒரேவழிப் பாதையுமன்று. தத்துவ வழிபாட்டின் தன்னிலைகளாகக் கட்சிகட்டி, வன்மம் பாராட்டி வெறுப்பரசியலால் நீலம்பாரிக்கும் சீரழிவுகள் அருவறுத்துக் களைந்தெறியப்பட வேண்டியனவே. கருமை செம்மை நீலம் கைகோத்தாலே காவிநிர்மூலம் என்னும் உள்ளார்ந்த புரிந்துணர்வுடன் இயங்கியாக வேண்டியதென்பதே இன்றைய பொருத்தப்பாடான அணுகுமுறை ஆகும்.

“இடதுசாரிகளும் ஒடுக்கப்பட்ட மக்களும்,சிறுபான்மைச் சமூகத்தாரும் அரசியல் சக்தியாக அணிதிரள வேண்டிய தேவை யிருக்கிறது என்று கடந்த இருபதாண்டுகளாக நான் வலியுறுத்தி வருகிறேன்.” தொல்.திருமாவளவன் (‘நமது தமிழ்மண்’ சன.2015)

இந்நோக்கிலவர் தம் விசிக சார்பில் ஒருங்கிணைத்த சனாதனப் பாசிச எதிர்ப்பு மாநாடு குறிப்பிடத்தக்கதாகும்.

‘பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு’ திருச்சியில் கருஞ் சட்டைப் பேரணி, கோவையில் நீலச்சட்டைப் பேரணி

எனத் தொடர்ந்து; 29/05/2022 அன்று மதுரையில் வர்க்க வருண ஒழிப்பு மாநாட்டையும் செஞ்சட்டைப் பேரணியையும் நடாத்தியது. அதில் ‘வீழட்டும் பார்ப்பனியம் சாதியம் முதலாளியம் ‘ எனும் ஆவணத்தொகுப்பையும் வெளியிட்டது. பன்மப் படிநிலையான சாதிய சமூக அமைப்பில் வாழநேர்ந்துள்ள நாம் அதற்கான ஓர்மையுடனேயே இத்தகுஅணுகுமுறையை மேற்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்.

“1938 ஜனவரி 12 அன்று பம்பாயில் 20,000 விவசாயிகளைத் திரட்டி ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார் அம்பேத்கர். இந்தியக் கம்யூனிஸ்ட்டுக் கட்சி உறுப்பினர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்: ‘ஏழை,பணக்காரன் என்ற இரண்டே சாதிகள்தான் உலகில் உள்ளன. இங்கே திரண்டுள்ளது போல் சாதி,மத, வேறுபாடுகளை மறந்து இன்னும் வலிமையாக நாம் ஒன்றிணைய வேண்டும்.

கம்யூனிஸ்ட்டு நண்பர்களுக்கு ஒன்றைக் கூறிக் கொள்வேன்.

மார்க்சியக் கோட்பாடுகளின் மீது எனக்கு விமர்சனங்கள் ஒருபுறம் இருந்தபோதும் உழைப்பாளிகளின் வர்க்கப் போராட்டத்தைப் பொறுத்தமட்டில் கம்யூனிஸ்ட்டுக் தத்துவம் எமக்கு நெருக்கமாக உள்ளதாகவே நான் உணர்கிறேன்'' எனக் குறிப்பிட்டார். அ.மார்க்ஸ் ('அம்பேத்கர் வழியில் அறிந்து கொள்ளப்பட வேண்டிய சில அம்சங்கள்' ப.43) இத்தகு புள்ளிகள் ஒன்றுபடும் தரப்புகளை முதலிற் தொகுத்துக் காண்போம்.

''காந்தி காந்தியம் இன்றி அம்பேத்கரிய பெரியாரிய அறச் சட்டகத் திலிருந்தே இனியான அற அரசியலைக் கட்ட முடியும்.'' ''புத்தர், அம்பேத்கர், மார்க்ஸ், பெரியார் அனைவரிடமிருந்தும் கற்போம் என்பதுதான் விடுதலை அரசியல்.'' பிரேம் ('அயோத்திதாசர் தொடங்கிவைத்த அறப்போராட்டம்' ப. 88) ''இந்தியாவில் மார்க்சியமும் லெனினியமும் மலரவும், சமதர்ம சமுதாய அமைப்பு வந்திடவும் பெரியாரியம் உதவும்; அம்பேத்கரின் ஆய்வுகள் துணைநிற்கும் என்பதை நாம் உணர்வது இன்றியமையாதது ஆகும்.'' வே. ஆனைமுத்து ('வீழட்டும் பார்ப்பனியம் .. சாதியம்.. முதலாளியம்.')

''தன்னை ஓர் உலகக் குடிமகன்(I am a citizen of the world) என அறிவித்த கார்ல் மார்க்சும் 'எனக்குத் தாய்நாடு இல்லை' (I have no homeland: எனக்கென ஒரு நாடு இல்லை) எனக் காந்தியின் முன் அறிவித்த அம்பேத்கரும் இணைந்து கூறும் செய்தி இது. 'ஆகக் கீழான ஒடுக்குதலுக்கு உள்ளாகும் மக்களின் விடுதலையில்தான் மனிதர்கள் அனைவர்க்குமான விடுதலை தொடங்குகிறது. இந்த விடுதலையைக்கொண்டு வரக் கூடியவர்கள் அந்த ஒடுக்குதலுக்கு உள்ளானவர்கள் தான்.'இந்த அறிவிப்பு வெறும் உணர்ச்சி மயமானதோ, நல்லெண்ண அடிப்படையில் உருவானதோ, அந்தராத்மாவின் ஒலியோ அல்ல. உலக வரலாற்றின் மிக அரிதான இரு பேறறிவாளர்களின் ஆய்வின்வழி கண்டறியப்பட்ட உண்மை.'' பிரேம் (முற்சுட்டிய நூல் ப.97) 'அந்தராத்மாவின் ஒலியோ' என பிரேம் சுட்டுவதன் பொருள் அந்தராத்மாவின் பேரால் காந்தியார் கையாண்ட தந்திர நாடகங்களைத்தாம். பூனா ஒப்பந்தத் தருணத்தில் அவர் மேற்கொண்ட உண்ணாநிலைப் போராட்டம் அமைப்பு சார்பிலான முடிவின் அமலாக்கமா என்ன? மாறாக அது மகாத்மாவின் அந்தராத்மா அசரீரி பேரிலான முன்னெடுப்புத்தானே? மட்டுமல்ல, ''இதர அரசியல் தலைவர்களுடனோ மற்றவர்களுடனோ பேச்சு வார்த்தை நடத்தும் பொழுது காந்திஜீ ஒரு விஷயத்தை ஒத்துக்கொண்டு விடுவார். ஆனால் சிலநாட்கள் கழித்து அவர் ஒப்புக் கொண்டதை மீறிவிடுவார். இதற்கு அவர் சொன்ன காரணம் 'எனது அந்தராத்மா அப்படிச் சொல்லிற்று. எனவே எனது கருத்தை

மாற்றிக் கொண்டேன் ‘ என்று சர்வ சாதாரணமாகக் கூறிவிடுவார்.’ (ஏ.கே.ரிபாயி ‘மறுமலர்ச்சி’ 30/09/1994 ’பறை 2015) “புலமை மிக்க அம்பேத்கரும்,பள்ளிக்கூடத்தை விட்டு இளமையிலேயே வெளியேறிய ஈவெராவும்,ஒரு விஷயத்தில் இந்தப் பார்வைத் தீர்க்கத்தைத் தமது இயக்கங்களின் மூலம் வெளியிட்டனர். அது இதுதான்: இந்தியா வெள்ளையரிடமிருந்து,பெறக் கூடிய சுதந்தரம் இரண்டாம் பட்சமானது, இந்தியா பெறவேண்டியது ஜாதி ஒழிப்பைத்தான்.” பிரமிள் (‘வானமற்ற வெளி’) பாவாணரும் பிரித்தானியத்தை எதிர்ப்பதினும் பிராமணியத்தை எதிர்த்ததே பெரியார் பேராண்மை என்பார்.(‘தமிழன் எப்படிக் கெட்டான்?’) பின்காலனிய நோக்கில் இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்: காலனியாதிக்கம் இந்தியாவில் மேற்கொண்ட செயல்பாடுகளை இரண்டு நிலைகளில் அணுகலாம், ஒன்று ஆக்கபூர்வமானதாக, மற்றொன்று அழிவு பூர்வமானதாக எனக் கார்ல் மார்க்ஸ் கூற்றை முன்வைத்து, “தலித்துகளின் வாழ்வில் காலனியம் ஏற்படுத்திய மாற்றங்களில் பல ஆக்கபூர்வமானவை. நிலவுடைமையும் சாதிய அமைப்பும் கட்டமைத்திருந்த ஆதிக்க வெளிகளைக் கடந்து அதைப் புதிய வெளிகளாக மாற்றியது” “நகரமயம், புதியதொழிற்சாலைகள், நவீன தொழிற்கருவிகள் போன்ற நவீனச் செயல்பாடுகள் சாதி, மதம் எனும் கட்டுமானங்களிலிருந்து தலித்துகள் வெளியேறுவதற்கு ஓரளவு வாய்ப்பு ஏற்பட்டது. முதன்முறையாகப் பொதுவெளிகளின் பரப்பிற்குள் தலித்துகள் இடம்பெறல் என்பது அவர்களுடைய உரிமைப்போராட்டங்களின் நீட்சி. இதை அங்கீகரித்தது காலனியத்தின் வெகுமதி.” ந.இரத்தினக்குமார் (‘பின்காலனியம் சமூகம் இலக்கியம் அரசியல்’) இதற்கூடாகப் பிரித்தானிய எதிர்ப்பினும் பார்ப்பனிய எதிர்ப்பை அயோத்திதாசரும் அம்பேத்கரும் முன்னுரிமை கொடுத்து மேற்கொண்டதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள இயலும்.

இந்தியாவின் தலைமையதிகாரப் பீடமாக வேதமே கொலுவீற்றிருக்கின்றது. ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாடு வரைக்குமாக இது ‘வேதங்களின் நாடு’ எனுமாறே காட்சியளிப்பதும் வரலாற்றின் விபரீத முரண்நகை தானே? “வேதமே சுருதி. அறத்துணிபுதான் ஸ்மிருதி. இவற்றை வாதிட்டு சோதித்தறிய முயலக்கூடாது. இந்நூல்களின் விதிப்படி ஒழுகுதலன்றி உயிர்களுக்கு வேறு கடமைகள் எதுவும் இல்லை. இவற்றைக் கல்விநூல் அறிவாலும் தர்க்கவாதத் திறமையாலும் சோதித்து அவமதிப்பவன் எவனா யினும் அவன் நாத்திகன் ஆவான். அவன் சமுதாயத்திலிருந்து விலக்கப்பட வேண்டியவன்” (மநுதர்மம்) “நாத்திகம் என்ற சொல்லுக்குக் கடவுள் இல்லை என்று பொருளில்லை. வடமொழி

ஆதாரங்களில் பார்த்தபடி சொல்கிறேன். நாத்திகன் என்றால் புராண, இதிகாசங்களை, வேதங்களை, சாஸ்திரங்களை, தத்துவங்களைப் பகுத்தறிவினாலே விவகாரம் விவாதம் பண்ணுகிறவன் என்று அர்த்தம். இந்த விவாதம் ஆரிய புராண இதிகாசங்களைப் பெரிதும் பாதிப்பதால் யார் ஒருவர் தங்களுடைய ஆதாரங்களில் கைவைக்கிறார்களோ அவர்களை நாஸ்திகன் எனச் சொல்லிவிட்டார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது.? கடவுள் நம்பிக்கைக்கும் இதற்கும் சம்பந்தமில்லே.ஆரிய கடவுள்களையும், ஆரிய சாஸ்திரங்களையும், மூடநம்பிக்கைகளையும் பகுத்தறிவுடன் எதிர்த்துக் கேட்டால் நீ நாஸ்திகன் அவ்வளவுதான்.அந்தவகையில் என்னை நாஸ்திகன் என்று தைரியமாகச் சொல்லிக்கொள்கிறேன்.'' ஈ.வெ.ராமசாமி.

இதிலவர் விவகாரங்களை விவாதம் பண்ணுகிறவன் என்கின்றாரே அவனையே, 'வேதவிரோத தர்க்க வியவஹாரிண' என்கின்றது வேதாந்தத்தரப்பு.அவனை நோக்கியே, 'சோதிக்க வேண்டா சுடர் விடடுளான் எங்கள் சோதி' என்கின்றது சைவசித்தாந்தத் தரப்பும்.

''சிந்தித்தால், தர்க்கித்தால், சந்தேகித்தால் பாவம் என்று அழுத்திவைக்கப்பட்டிருந்தார்கள். எனவேதான் அறிவு வளரவில்லை. சமுதாயம் மேலோங்கவில்லை.'' ஈ.வெ. ராமசாமி ('விடுதலை'.12/1/1961) இத்தொடர்பில் அம்பேத்கர் பார்வையும் துல்லியமானது. ''அம்பேத்கரியம் என்பது வரலாற்று பூர்வமான,விஞ்ஞான பூர்வமான தன்னிலை உருவாக்கம். ஓர் அறிவுத் தேர்ந்தெடுப்பு. ஓர் அரசியல் நிலைப்பாடு.ஒருவர் அம்பேத்கரிஸ்ட்டாக வாழத் தேர்வது, துறவுநிலையைத் தேர்வதற்கு ஒப்பானது..ஒருவர் அம்பேத்கரிஸ்ட்டாக மாற வேண்டுமெனில்,அவர் இந்திய மதவாத மனநிலையில் இருந்து, வெளியே வரவேண்டும்'' என்னும் ரமேஷ் பிரேதன் காந்தியாரை மகாத்மா என்று சொல்லும் போது அம்பேத்கரை ஏன் மகாத்மா என்று சொல்லக்கூடாதென வினாத்தொடுக்கின்றார்

காந்தி, காந்தியம் இன்றி எனப் பிரேம் சுட்டுவது தொடர்பாக இன்னும் சில தரப்புகளையும் காண்போம்:''அம்பேத்கர் காந்தி சர்ச்சையில் காந்தியார் மண்ணைக் கவ்வுகிறார்.ஜாதியம்,வர்ணாசிரமம் இரண்டையும் பற்றிய விஷயத்தில் காந்தியார் பதில் தவறானது.'' ''இந்திய வைதிக வர்க்கம் தமது ஜீவித நியாயத்துக்காக ஆன்மிகக் கூப்பாட்டை எழுப்பிவரும் இயக்கம் ஆகும். இது விஷயத்தில் காந்தி போன்றவர்கள்,வைதிகமரபும் ஆன்மிகமும் ஒன்றே என்ற பார்வைக்குத் துணை போயிருக்கிறார்கள்.'' ''மனமறிந்தே காந்தி தவறான பார்வையை மேற்கொண்டார். இந்தத் தவறான பார்வையை அவர்துறந்தால் அத்தோடு இந்துக்களிடையே அவர் பெற்றிருந்த

தலைமையைத் துறக்க வேண்டும்.'' பிரமிள் (முற்சுட்டிய நூல்) ''உண்மையாகவே காந்தி இரட்டைவாக்குரிமைக்கு எதிராகச் செய்தது வரலாற்று மோசடி. அதை எந்த அம்பேத்கரிஸ்ட்டும் ஏற்றுக்கொள்ள மாட்டார். 'கக்கத்தில் குறுவாளை வைத்துக் கொண்டு அகிம்சையைப் போதிப்பவரை மகாத்மா என்று ஏற்றுக் கொள்வீர்களா?' என்று அம்பேத்கர் கேக்கிறார்.'' ரமேஷ் பிரேதன் ('விகடன் தடம்': செப்.2019) அதனைக் காந்தியாரின் 'அகிம்சையின் வன்முறை' என்னும் ஓஷோ, அம்பேத்கர் தரப்பே அகிம்சை பேணியது என்பார். காந்தியாரின் அணுகுமுறை பூனா ஒப்பந்தத் தருணத்தில் மட்டுமல்லாது வைக்கம் போராட்டம், சேரன்மாதேவி குருகுலப் போராட்டம் என எதற்கூடாகவுமே இந்துமதச் சட்டகத்துக்குள்ளிருந்தவண்ணமே ஆடிய சதுரங்க ஆட்டமாகவே காணக்கிடக்கின்றது. அத்தகு நிலைப்பாட்டுக்குக் குந்தகம் நேராவாறே, இருப்பினைத் தக்கவைத்துக்கொள்ளும் ஏமக்காப்பரணான 'ஷேப்டி வால்வ் சிஸ்ட்ட'மாகவே கருத்தூன்றிச் செயல் பட்டுக் காய் நகர்த்தியது.

கோயில் நுழைவுப் போராட்டத்தைப் பொறுத்தவரை அம்பேத்கரின் பார்வை வேறுபட்டதே: ''எனது அரசியலின் அடிப்படை எதுவெனில் தீண்டப்படாதோரை இந்துமதத்தின் ஒரு பிரிவோ அல்லது பகுதியோ இல்லை என நிறுவிப் பண்பாட்டின் வேறுபட்ட தனித்துவமானவர்களாக வாழச் செய்வதுதான்.'' ஆலய நுழைவு,குளத்தில் நீரெடுத்தல் முதலிய போராட்டங்களிலிருந்து விலகி இந்து மதத்தை விட்டு வெளியேறுதல் என்கிற நிலைப்பாட்டை அம்பேத்கர் 1920 1935 வாக்கில் வந்தடைந்ததாக அ.மார்க்ஸ் குறித்துள்ளதும் நோக்கத்தக்கது. ('முற்சுட்டிய நூல் ப.22)

ஆலயநுழைவுப் போராட்டத்தைத் தாம் தொடங்கியதற்குக் காரணம் 'தலித்துகளைச் சிலை வணக்கம் செய்பவர்களாக மாற்றுவதற்காக அல்ல, மாறாக இந்துச்சமூகத்தில் அவர்களின் இடம் என்ன என்பதை உணரவைப்பாதற்காகவே என்ற அண்ணல், அந்தக் குறிக்கோள் நிறைவேறிவிட்டதாகவும் இனி ஒடுக்கப்பட்டவர்க்கம் அரசியலிலும் கல்வியிலும் தன் கவனத்தைக் குவிக்க வேண்டும் என வலியுறுத்தியதையும் அ.மார்க்ஸ் (ப.38) தொடர்வார்.

அண்ணல் அம்பேத்கர் குறித்த முகாமையான வெவ்வேறு தரப்புகள் குறித்துக் காண்போம்: •''நமது காலத்தில் அம்பேத்கரின் எழுத்துக்கள்,அடையாள அரசியலுக்கான அனுபவங்களின் இயங்கியல் குறித்த மாபெரும் ஆவணம்'' ந.முத்துமோகன் ('அடையாள உருவாக்கமும் அடையாள வேறுபாடுகளும்' தொகுப்பு நூல் அணிந்துரையில்)

•''ஒவ்வொரு உள்ளுணர்வும் ஒடுக்கப்படாதவரை ஏதோ சில

படைப்பாக்கச் செயல்களாக மாறும் என்று மனிதமனம் அதன் அபூர்வமான மதிப்பு இவற்றைப் புரிந்துகொண்ட நிலையில் அம்பேத்கர் கூறுவது இருபதாம் நூற்றாண்டின் வெளி விளிம்பில் நிற்கும் தத்துவவாதிக்கு மிகவும் வியப்பூட்டுவதாகத் தோன்றும். இதைக்கூற இன்னும் பல தத்துவங்களுக்கு மேலும் ஒரு நூற்றாண்டு தேவைப்படலாம். மார்க்சியத்திற்குப் பின்னான (Post -Marxist) தத்துவவாதியாக வெளிப்பட்ட அம்பேத்கரே இந்தியப் பின்நவீனத்திற்கும்( Post - Modernism) முன்னோடியாக இருப்பதை நாம் வியப்புடன் அறிந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.'' ரமேஷ் பிரேதன் ('பொதிகை 2000 பொதியவெற்பன் பொன்விழா மலர்)

• சட்ட அமைச்சராகவும்,அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழுத் தலைவராகவவும் அண்ணலின் வகிபாகம். இத்தொடர்பில் காந்தியார், காங்கிரஸ் கட்சி செயல்பாடுகள் குறித்துக் காண்போம்: ''மிகக் குறுகிய காலமே சட்ட அமைச்சராகப்பணியாற்றினாலும்,சுதந்தர இந்தியாவின் சட்டப் பாதைக்கு மகத்தான வழிகாட்டியவர் அம்பேத்கர். சுதந்தரத்துக்குப் பிந்தைய முதல் அமைச்சரவைப் பட்டியல் காந்தியின் பார்வைக்குப் போன போது அதில் அம்பேத்கர் பெயர் இல்லை. அப்போது, 'சுதந்தரம் இந்தியாவுக்குக் கிடைத்திருக்கிறது. காங்கிரஸுக்கு அல்ல' என்றார் காந்தி. சட்ட அமைச்சராக அம்பேத்கர் இடம்பெற்றார்.'' 'தமிழ் இந்து' 20/11/2014) ''எப்படியிருந்த போதும் இந்த அரசியல் சட்டம், ஜனநாயக அமைப்பு பாபாசாகேப் உருவாக்கியது. இதன் வழியாக நாம் விடுதலை நோக்கிச் செல்ல முடியும் ' என்ற நம்பிக்கை. இது மக்கள் வழக்காறாக, வாய்மொழி மரபாக மாறியிருப்பது சாதி இந்துக்கள், இந்துச்சாதிகள் எத்தனை பேருக்குத் தெரியும் என்று தெரியவில்லை.'' ''ஒடுக்கப்பட்ட மக்களை உள்ளடக்க, அவர்களுக்கு நம்பிக்கை அழிக்கக் காங்கிரஸ் செய்த உத்திதான்(ராஜ தந்திரம்) அம்பேத்கரை அரசியல் சட்டக்குழுவின் தலைவர் ஆக்கியது.'' பிரேம் ( முற்சுட்டிய நூல் ப.138). தமிழ்நாட்டில் காங்கிரஸை வளர்க்குமுகமாகவேஆச்சாரியார் பெரியாரை அதன் தலைவராக்கிய தந்திரம்போலும் அரசியல் விரகாண்மையே அதுவும் எனலாம்.

தந்தை பெரியார் அரசியமைப்புச் சட்டத்தை 26/11/1957 இல் கொளுத்துகிறார். அம்பேத்கர் அதற்கு முன்னாலேயே இது குறித்துப் பேசுகிறார்:

'இந்திய அரசியல் சாசனத்தை உருவாக்கும் வரைவுக்குத் தலைவராக நான் இருந்ததாக என் நண்பர்கள் கூறினார்கள். யாராவது அரசியலமைப்புச் சட்டத்தை எரிக்க வேண்டுமென்று இன்று துணிந்துவிட்டால் அந்தப் படையில் நான் முதல் ஆளாக



இருப்பேன்’என்றார்’’ (Rajya Sabha Debates 2 /09/1953 ) ‘‘நேருவுக்குக் கோபம்வருகிறது,’சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று சொன்னீர்கள். முடியாது என்றவுடன் கொளுத்த வேண்டும் என்கிறீர்கள்’ என்று கேட்கிறார். அப்போதுதான் அம்பேத்கர் தான் யார் என்பதைக் காட்டுகிறார்:’’ நான் ஒரு வாடகைக்குதிரை போல் பயன்பட்டேன். என்னுடைய நோக்கத்துக்கு மாறாக எதை எல்லாம் எழுதச்சொன்னார்களோ அதையெல்லாம் எழுதவேண்டியதா யிற்று.’’ (Rajya Sabha Defates -12/09/1953)

1955 ஆம் ஆண்டு,பர்மாவில் நடைபெற்ற உலக பௌத்த மாநாட்டில் பெரியாரும் அம்பேத்கரும் சந்தித்துக் கொள்கின்றனர்:

‘‘சூத்திரர்க்கான விஷயத்தைக் கொஞ்சம் ஒழுகவிட்டு விட்டீர்களே பாபா சாகேப்’’ என்று கேட்கும் போதுதான் அம்பேத்கர் வெளிப்படையாகச் சொல்கிறார்: ‘‘சட்டம் எழுதிய பேனாவை நான் பிடித்திருந்தேன் என்பது உண்மைதான். ஆனால் அதை நகர்த்தியது முழுவதும்பார்ப்பனரே என்கிறார்’’

அரசியமைப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட தேதி: 26/11/1949. விவாதங்களை எல்லாம் முடித்து வைத்த பிறகு அம்பேத்கர் பேசுகிறார்: ‘‘இந்த அரசியல் நிர்ணயசபைக்கு நான் உறுப்பினராக வந்ததன் நோக்கம் தாழ்த்தப்பட்ட மக்களின் நலன்களைப் பாதுகாக்கணும்என்பதுதான். இதைத் தவிர வேறு பெரிய நோக்கம் எதுவும் இல்லை. (ஆதாரம் வே.ஆனைமுத்து நூலில்)

ஒரு காலக்கட்டத்தில் டாக்டர் அம்பேத்கர்,தான் அரசமைப்புச்சட்டத்தை உருவாக்க ஒரு கருவியாக மட்டுமே பயன்பட்டதாகவும் அதை மகிழ்வோடு எரிப்பேன் என்று கூறினாலும்,சுதந்தர இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்தின் தலைமை வடிவமைப்பாளராகவே அவர் கருதப்படுகிறார். ஏனெனில் அதன் உருவாக்கக் குழுவில் அவர் தலைவராக அவர் மிக முக்கியமான பங்கை அதீதத்திறனுடன் செயல்படுத்தினார்.இந்திய அரசமைப்புச்சட்டத்தின் தந்தை என்றவரை அழைக்க அம்பேத்கரியர் ஒரு போதும் தயங்கியதில்லை என்னும் எஸ்.கே.பிஸ்வாஸ்

ஜனநாயக பலிபீடத்தில் அவர் காவு வாங்கப்பட்டார் எனவும் காந்தியாருடன் அவர் சமரசப்படுத்திக் கொண்டார் என்பதான தரப்புகளையும் சுட்டிக்காட்டி அவற்றை எதிர்கொள்கின்றார். ('பார்ப்பனிய மண்ணில் மார்க்சியம்' ப. 152) இத்தொடர்பில் இன்னும் சில தரப்புகளைக் காண்போம்:

"அம்பேத்கரை வெள்ளைக்காரர்களின் கைக்கூலி என்றார் நேரு; தொங்குசதை என்றார் தாகூர்; நியமிக்கப்பட்ட வேட்டை நாய் என்றார் பட்டேல். ஆனால் மேற்படி தலைவர்கள் எல்லாம் அம்பேத்கர் மீது அவதூறு பேசியதை உடைதெறியும் வண்ணம் எடுத்துரைத்து வந்தார் பெரியார்" டி.எம்.மணி ('சட்டநாள் மக்கள் மாநாடு மலர்' 2003) 'நம் எதிரிகள் அவரைச் சர்க்கார் தாசர் என்று சொல்லக்கூடும். அதைப்பற்றி அவர் சிறிதும் பயப்படவில்லை. பதவிக்குச் சென்றது முதலே ஒவ்வொரு மூச்சிலும் தன் இனத்தின் பெயரையும் நிலைமையையும் எடுத்துச் சொல்லிச் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தம் இனத்தின் நலனுக்கு ஏதாவது காரியம் செய்துகொண்டு எதிரிகளை வெள்ளையாகக் கண்டித்துப் பேசி நடுங்கச் செய்துவிடுகிறார். " ஈ.வெ.ராமசாமி ('தலித் முரசு' செப்.2004) மட்டுமல்லாமல் இதனை இன்னொரு கோணத்திலும் அணுகலாம். அது வித்தியாசங்களின் அரசியலைப் பேசிநின்ற அம்பேத்கர்,பெரியார் ஒடுக்கப்பட்ட மக்கள் நலனை முதன்மையாக மனங்கொண்டு அரசைச் சார்ந்து நின்றே கையாள நேர்ந்த ஓர் அணுகுமுறை குறித்தது:

"தலித் அரசியல் என்பது ஆரம்பம் முதற்கொண்டே பாராளுமன்ற அரசியலைச் சார்ந்தே இருக்கிறது. அப்படித்தான் இருக்க முடியும். பாராளுமன்றத்தின் ஊழல்களையும், பொய்மைகளையும் கருத்திற்கொண்டு அதைப் புறக்கணித்துவிடும் சாத்தியம் அதற்குக் கிடையாது. தவிரவும் அது குறிப்பிட்ட அளவிற்கு அரசைச் சார்ந்தும் உள்ளது. அரசின் கொடூரங்களைக் காட்டிலும் சமூகத்தின் கொடூரத்தை அது உடனடியாகச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. எனவே சமூகக் கொடுமைகளுக்கு எதிரான ஒரு Arbitrator ஆக அரசை அது அணுகுகிறது.

நடுநிலை என்கிற சொல்லைக் காட்டிலும் Arbitrator என்கிற ஆங்கிலச் சொல்லே பரவாயில்லை என்பதால் அப்படியே பயன்படுத்தியுள்ளேன். (சமனப்படுத்துநர் அல்லது நயன்மைத் தீர்வர் எனலாமோ?' பொதி) எனவே பெரியார், அம்பேத்கர் போன்ற வித்தியாசங்களின் அரசியலைப் பேசியவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு அரசு வலிமையாக இருப்பதையே விரும்பினர்." " பஹிஷ்கரித் ஹிதகரிணிசபா-சுதந்திரத் தொழிலாளர் கட்சி-பட்டியல் சாதியினர் கூட்டமைப்பு-குடியரசுக் கட்சி என்பதாக

அம்பேத்கரது இயக்கம் இருந்தது. அதாவது, தலித்களுக்கான தனி அமைப்பு-கட்சி-தனி அமைப்பு-கட்சி என்பதாக இருந்தது. கட்சி என ஆகும்போது பெயரைக்கூட தலித் என்கிற வட்டத்தைத் தாண்டி அமைக்க வேண்டியிருந்தது. பரந்த அடையாளம் என்கிற போது அம்பேத்கர் ''தொழிலாளர் குடியரசு'' முதலானவற்றை தேர்வு செய்தார். கம்யூனிஸ்டுகள், சோஷலிஸ்டுகள் ஆகியோரை அணுகினார்.'' அ.மார்க்ஸ் ( தலித்தியம் எதிர்கொள்ளும் சமகாலச் சவால்கள் குறித்த அயலக உரையில் 'சஞ்சாரம்':1 மார்ச் 2008 )

மார்க்சிய நோக்கில் அண்ணலின் கருத்தியல் எவ்வாறு பொருத்தப்பாடுடையதாக அமைந்தியல்கின்றதெனப் பிஸ்வாஸ் தெளிவாக எடுத்துரைக்கின்றார்: ''நடைமுறையில் ஜனநாயகமும் அரசமைப்புச் சட்டவியலும் முதல்படியாக, தனியுடைமையை ஒழிப்பதன் மூலமும் உழைக்கும் மக்களின் ஆட்சியை நிறுவுவதன் மூலமும் மனித இனத்தின் இறுதி இலக்கை அடைய வழிவகுக்கும் என மார்க்சும் ஏங்கெல்சுமே விளக்கம் அளித்துள்ளனர்.'' (ப.152)

''இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்தை வடிவமைத்தது அண்ணலின் போராட்டத்துக்கு எவ்வாறானும் சமரசமோ, பின்னடைவோ ஏற்படுத்துவது ஆகமாட்டாது; அரசமைப்புச் சட்டவா யிலாக சோசலிச இலக்கை அடைவதற்கான வழிமுறையாகவே அவர் தம் கருத்தியலைக் கொண்டிருந்ததாகத் தொடர்வாரவர்:

''அம்பேத்கரின் கருத்தியல் என்பது அரசமைப்புச் சட்டவியல் ஆகும். மார்க்சியத்தின் அடிப்படை என்பது மனித சமூகத்தின் வரலாற்றில் மாற்றங்களை ஏற்படுத்தும் வழிமுறை என்பதை மறந்துவிடக் கூடாது.'' ''மார்க்சியம் என்பது நம் கண்முன் நடக்கக் கூடிய சமூக மாற்றங்களின் அடிப்படையில் மனித இனத்தின் வரலாற்றைக் கணித்து அறிவிப்பது என்று புரிந்து கொண்டால், இந்தியாவின் தற்போதைய சமூகக் கூறுகளின் வளர்ச்சியின் அடிப்படையில் ஓர் அரசியல் கருத்தியல் உருவாகாது என எதிர்பார்ப்பது சரியானது ஆகுமா? டாக்டர் அம்பேத்கர் இதனைத் தொடக்கி வைத்தார்.'' எஸ்.கே.பிஸ்வாஸ் (முற்சுட்டிய நூல் ப.168)

''இந்தியாவுக்கு வரும்போது அம்பேத்கரியத்தின் மூலமாகவே செயல்படுத்த முடியும்.இந்தியாவில் சாதி, மதம்,இனம் இவைகளே மொத்தச்சிக்கலுக்கும் அடிப்படைகள் என்று மார்க்ஸ் சமூக அறிஞராக மூன்று பத்திகளில் சொல்லியிருக்கிறார். இதை மறந்து விட்டு மார்க்சியத்தைப் பேசமுடியாது. அம்பேத்கரின் ஆய்வுகள் இந்தச்சிக்கல்களையே அடிப்படையாகக் கொண்டவை.'' பிரேம் (அல் ஷாபாஸ் ஆஷிக் 'உயிர் எழுத்து' மே,2003)

''மார்க்சியம், அம்பேத்கரியம் என்பதெல்லாம் சமூக மாற்றம், விடுதலைக்கான கருத்தியல்கள்.கால,இட,சமூக வடிவங்களுக்கேற்ப

அவற்றின் கண்டறிதல்கள், கோட்பாடுகள், வழிமுறைகள் மாறும். ஆனால் அவை விடுதலைக் கருத்தியல்கள். இந்திய அரசியலில் சாதியே வர்க்கப் போராட்டம் என்று சொன்ன மார்க்சியம் அம்பேத்கரிடமிருந்துதான் கற்க வேண்டும்.''(ப.160)

''விடுதலைக்கான வழி ஒற்றையடிப் பாதையல்ல,அது ஒருவருக்குள் அடங்குவதும் இல்லை.புத்தர் வேண்டும், அம்பேத்கர் வேண்டும், பெரியாரியம் வேண்டும், பெண்ணியம் வேண்டும்,கருப்பினப் போராளிகள் கனவுகள் வேண்டும். அதற்கும் மேலாகப் போராடுவதற்கு மக்கள் வேண்டும்,போராட்டங்களை வழிநடத்தத் தலைமை வேண்டும். அந்தத் தலைமை தலித் தலைமையாக மாறி விடக் கூடாது என்று கவனமாக இருப்பதல்ல மார்க்சியம்.'' பிரேம் ('பின்நவீனத்துவம் பிறகான மார்க்சியம்' பக்.162) இத்தகு பிஸ்வாஸ், பிரேம் தரப்புகள் கவனங்கூரத் தக்கனவே ஆனபோதிலும் மிகுந்த எச்சரிக்கையுடன் அணுகப்பட வேண்டியனவே .தலித் மக்களுக்குத் தலைமைப்பொறுப்பைப் பிரதானமாக வலியுறுத்தும் பாவனையை இந்தப்புள்ளியில் இந்துத்துவ ஆக்டோபஸின் லீலைகளையும் கருத்திலிருத்தியே அதன் 'காயடிக்கும் காய்நகர்த்தல்'களையும் அணுகவேண்டும்.

''பார்ப்பனர்கள் எப்போதும் தமக்குக் கூட்டாளிகளைக் கொண்டிருந்தனர் என்பதையும்,அவர்கள் தமக்குக் கீழ்ப்பட்டு ஒத்துழைப்பதாக. இருந்தால் ஆளும்வர்க்கம் என்ற தகுதியையைத் தரத் தயாராக இருந்தனர் என்பதையும் வரலாறு காட்டுகின்றது.'' பி.ஆர். அம்பேத்கர் ('காங்கிரசும் காந்தியும் தீண்டப்படாதார்க்குச் செய்ததென்ன?') ''பார்ப்பனியம் என்பது எல்லாரையும் சிறுபான்மையாக்கி ஒரு மீச்சிறுபான்மை மட்டும் கொட்டமடிக்க ஏதுவாய் வடிவமைக்கப்பட்ட தத்துவம்! அண்ணல் தனது அணிச்சேர்க்கையைப் பார்ப்பனிய நிறுவனத்துக்கு எதிரானதாகவே எப்போதும் அமைத்துக் கொண்டார். பார்ப்பனர்கள் விரும்புவதையே தனது செயல்பாடாக அமைத்துக் கொண்டால் நல்ல விளம்பரமும் வெளிச்சமும் கிடைக்கும். ஆனால் அந்த பார்ப்பனச் சார்புக்குக் கேடயமாக அண்ணல் அம்பேத்கரை நிறுத்துவது அவரைச் சிறுமைப்படுத்துவதாகும்.'' ம.மதிவண்ணன் இத்தகைய புரிதல்களின் அடிப்படையில்தான் அண்ணல் எந்தச் சித்தாந்தத்தைக் கடுமையாக எதிர்த்தாரோ அந்தச்சித்தாந்த எதிரிகளுடனேயே அதிகாரத்துக்காகக் கூட்டணி கொள்ளும் அரசியல் சந்தர்ப்பவாதச் சமரசம்,சமூகநீதி இயக்கங்களை வீழ்ச்சிக்குத்தான் இட்டுச்செல்லும் எனத் தாம் எப்பதவி வாய்க்கக்கூடுமேனும் கொள்கைப் பகைவர்களுடன் கூட்டணி கூடாது என்பதில் உறுதியாக நிற்பதாகத் திருமா பிரகடனப்படுத்திக் கொள்கின்றார்.

எதிரிகளையும் சனநாயகப்படுத்த விழையும் தொலைநோக்கு; சனநாயகப் பொறுப்புணர்வோடு சமன் குலையாது உரையாடும் பாங்கு; தம் மீதான விமர்சனங்களைச் செவிமடுக்கும் நிதானம்: தன்னாய்வு செய்து கொள்ளும் பரிபக்குவம்; தம் அமைப்பிற்கு அப்பாலும் பலராலும் நம்பகமானவராக ஏற்றுக் கொள்ளப்படும் தலைமைப்பண்பு இன்னபிறவும் தோழர் திருமாவிற்குரிய சிறப்பியல்புகளாகும்.

அண்ணாவின் 'தம்பிக்குக் கடிதங்கள் தொகுதிகளும்,திருமாவின் 'அமைப்பாகத்திரள்வோம்' நூலும் அதிகார நகர்வை நோக்கிய பொதுநீரோட்ட அரசியல் முன்னெடுப்பென்னும் வகையில் இன்றியமையாது வாசிக்கப்படவேண்டிய நூல்களே."தமிழக அரசியலில் தலைமை வகித்துவரும் யாருக்கும் அமையாத நவீன பின் நவீனப் புரிதலும்,புலனறிவும் கொண்ட ஒரு நெறியாளராக,வழிகாட்டியாக, கோட்பாட்டளராகத் தோழர் திருமாவளவன் தம்மை அமைத்துக் கொண்டிருப்பதை 'அமைப்பாய்த் திரள்வோம்' கட்டுரைகள் தெளிவாக்குகின்றன."(119)

"இந்திய மாற்றுக் கருத்தியலின் பன்முக உருவகமாக, விடுதலைக்கான தத்துவ அரசியல் வடிவமாக நிற்கும் பாபாசாகேப் அம்பேத்கர் உருவாக்கிய மரபைத் தொடர்வதற்கு ஒவ்வொரு மொழியிலும் கருத்தியல் தலைமைகள் தேவை. இன்று தமிழகத்தில் தோழர் திருமாவளவன் அதனை அளித்து வருகிறார்.அவருடைய குரல் பிற இந்திய தலித் விடுதலைத் தலைமைகளில் இருந்து பலவகைகளில் வேறுபட்டது. உலக அரசியலையும்,பன்மெய் அரசியலையும் தன் களமாகக் கொண்டது" பிரேம்('அ.தொ.வை. அறப்போராட்டம்' ப.127) இத்தொடர்பில் மேலதிகப் புரிதல்களுக்கு, 'பாசிசத்தால் வீழ்த்தப்படாத ஸ்பார்ட்டகஸ்' எனும் தொகைநூலிற் காண்க.

**ஆதிபத்தியம் எதற்கும் அடிபணி யோமே**
**அம்பேத்கர் பெரியார் அணியிணைந் தோமே**
**சாதிபத்தியம் எமக்குச் சமரசங்கள் விலக்கு**
**மதமான பேய்பிடியா மார்க்கமே இலக்கு**
**மீதிதத்துவம் எல்லாம்ஓதி உணர்ந் தோமே**
**மேதினி மீதினி ஏதினி யேகதி**
**போதிசத்துவன் அவனின் புத்ததம்மம் கச்சாமி**
**பொதுவுடைமை மார்க்சிய லெனினியம் கச்சாமி**

(அண்ணலைப் பற்றிய இக்கட்டுரையில் அவருடைய 'புத்தரா காரல் மார்க்ஸா ' எனும் முகாமையான ஆய்வு குறித்து எதுவும் எழுதவில்லை, ஏனென்றால் அது குறித்து ஏலவே நான் 'மார்க்சியத்திற்கும் அஃதே துணை' எனும் ஐம்பது பக்க அளவிலான என் விரிவான ஆய்வுக்கட்டுரையை 'அகம் புறம்:3' யூலை 2016 இதழில் முன்வைத்துள்ளேன்.)

- **கட்டுரையாளர் - தமிழியல் ஆய்வறிஞர்**

❖❖❖

# ஒடுக்கப்பட்ட மக்களின் ஒப்பற்ற தலைவர் இரட்டைமலை சீனிவாசன்

வாலாசா வல்லவன்

இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் பழைய செங்கல்பட்டு மாவட்டத்தில் மதுராந்தகத்திற்கு அருகில் உள்ள கோழியாளம் என்கிற சிற்றூரில் 7.7.1859இல் பிறந்தார். தெய்வபக்தி மிகுந்த குடும்பத்தில் பிறந்ததால் இவருக்குச் சீனிவாசன் என்று பெயரிட்டனர்.

தொடக்கப்பள்ளியில் தந்தையின் பெயரின் முன் எழுத்திற்குப் பதிலாகத் தந்தையின் முழுப் பெயரையும் சேர்த்து எழுதிவிட்டார்கள். அதனால் இரட்டைமலை சீனிவாசன் ஆனார்.

கோழியாளத்திலிருந்து இவருடைய விவசாயக் குடும்பம் வறுமை காரணமாகவும், சாதியக் கொடுமை காரணமாகவும் தஞ்சை நோக்கி ஓடியது. அங்கு இதைவிடக் கொடிய சாதிய அடக்குமுறைதாண்டவமாடியது. அங்கிருந்து கோயம்புத்தூர் சென்றனர்.

இரட்டைமலை சீனிவாசன் 1939இல் அவருடைய தன் வரலாற்றை அவரே சுருக்கமாக எழுதி “திவான் பகதூர் இரட்டை மலை சீனிவாசன் அவர்கள் ஜீவிய சரித்திர சுருக்கம்” என்ற பெயரில் 30 பக்க நூல் ஒன்றை வெளியிட்டார். இதனால் அவருடைய இளமைக்காலம் குறித்தும் அவருடைய அரசியல் மற்றும் சமூகப் பணிகள் குறித்தும் ஓரளவு அறிந்துகொள்ள முடிகிறது.

கோயம்புத்தூரில் இவர் கல்வி பயின்ற பள்ளியில் சுமார் 400 மாணவர்களில் 10 மாணவர்கள் தவிர மற்ற அனைவருமே பார்ப்பன மாணவர்கள் எனத் தன் வாழ்க்கைச் சுருக்கத்தில் அவரே எழுதி உள்ளார். வறுமை காரணமாகப் பள்ளிக் கல்வியோடு இவர் படிப்பை முடித்துக்கொண்டார். தீண்டாமைக் கொடுமைக்கு எப்படி முற்றுப்புள்ளி வைப்பது என்பதைப் பற்றியே எந்நேரமும் எண்ணிக் கொண்டிருந்தார்.

1887ஆம் ஆண்டில் ரெங்கநாயகி அம்மாளைத் திருமணம் செய்து கொண்டார். இவர்களுக்கு 2 பெண்பிள்ளைகளும், 4 ஆண்பிள்ளைகளும் பிறந்தனர்.

நீலகிரியில் ஓர் ஆங்கிலேயர் கம்பெனியில் எழுத்தராக வேலைக்குச் சேர்ந்தார். பத்து ஆண்டுகள் அங்கு பணியாற்றிய பின் 1890இல் சென்னைக்கு வந்தார்.

1891இல் பறையர் மகாசன சபையைத் தோற்றுவித்தார். 1893

1900 வரை பறையன் என்ற திங்கள் இதழை நடத்தினார். பறையர் சாதி மக்களை ஒன்று திரட்டவும், அவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் இவ்விதழ் பெரிதும் பயன்பட்டது.

இதே காலக்கட்டத்தில்தான் 1.12.1891இல் பண்டித அயோத்தி தாசர் நீலகிரியில் திராவிட மகா சபையின் முதல் மாநாட்டைக் கூட்டினார். அதில் 10 தீர்மானங்கள் நிறைவேற்றி ஆங்கில அரசுக்கும், காங்கிரசுக் கட்சிக்கும் அனுப்பிவைத்தார்.1892இல் அதை ஆதி திராவிட மகாசனசபை எனப் பெயர் மாற்றம் செய்து பதிவும் செய்தார்.

அயோத்திதாசரின் முதல் மனைவி இறந்துவிட்டபிறகு, இரட்டைமலை சீனிவாசனின் தங்கை தனலட்சுமியை இரண்டாவது மனைவியாகத் திருமணம் செய்துகொண்டார். ஆதித் திராவிடப் பெண்கள் படிக்காத அக்காலத்திலேயே இந்த அம்மையார் எட்டாம் வகுப்புவரை படித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னையில் முதன்முதலாக ஒடுக்கப்பட்ட மக்களை ஒருங்கிணைத்தார். 1895 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஏழாம் நாள் சென்னை விக்டோரியா மண்டபத்தில் ஒடுக்கப்பட்ட மக்களை திரட்டி மாபெரும் கூட்டத்தை நடத்தினார். உயர் அலுவலர்கள் மற்றும் உயர்சாதியினரின் எதிர்ப்புகளை மீறிக் கூட்டத்தை நடத்தினார்.

இலண்டன் நகரில் நடைபெற்று வந்த சிவில் சர்வீஸ் தேர்வுகளை இந்தியாவிலும் நடத்த வேண்டும் என்ற காங்கிரசாரின் கோரிக்கையை எதிர்த்தார். அப்படி நடத்தினால் பெரும்பாலும் பார்ப்பனர்கள்தான் அரசின் உயர்பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். அவர்கள் எங்களை மனிதர்களாகவே மதிப்பதில்லை, நடத்துவதில்லை மயிலாப்பூரில் பார்ப்பன நீதிபதி குடியிருந்த ஒரு தெருவின் முனையில் “பறையர்கள் இங்கு பிரவேசிக்கக் கூடாது. மீறினால் தண்டிக்கப்படுவார்கள்” என்று எச்சரிக்கை பலகை எழுதி வைத்திருந்ததை எடுத்துக்காட்டினார். மேலும் வெளிமாவட்டங்களில் மேல் சாதியினரின் பிள்ளைகள் படித்து வரும் கிராமப் பாடசாலைகளில் பறையரின் பிள்ளைகள் படிக்க அனுமதிக்கப்படுவதில்லை. உயர்ந்த சாதியார் குடியிருந்து வரும் கிராமங்களின் வீதிகளில் கிராமக் கால்நடைகள் நடமாடப் பாதை வழி இருந்தும் பறையர் நடமாடப் பாதை வழி கிடையாது. பிற சாதியினர் தண்ணீர் எடுத்துக் கொள்ளும் நீர் நிலைகளில் இவர்கள் தண்ணீர் எடுக்க அனுமதி இல்லை. கிராமக் குடிகள் இவர்களை மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்தி வைத்திருக்கின்றனர். பச்சையப்பன் கல்லுரியில் ஒடுக்கபட்ட மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதில்லை என்பதையும் அம்மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

சிவில் சர்வீஸ் தேர்வு இங்கு நடைபெற்றால், பார்ப்பனர்கள் அதிகாரப்பதிவுகளுக்கு வந்து விட்டால், பறையர்களுக்கு மேலும் தொல்லை கொடுப்பார்கள் என்று அந்த மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

1893 ஆம் ஆண்டு திசம்பர் 20 திசம்பர் திங்கள் 23ஆம் நாள் சென்னை வெஸ்லியன் பிஸின் கல்லூரியில் பறையர் மகாசன சபை சார்பில் ஒரு பெரும் கூட்டத்தைக் கூட்டினார் 112 அடி உயரம் நீளமுள்ள ஒரு மனுவில் 3412 கையொப்பங்களைப் பெற்று ஜெனரல் சார்ஜ் ஜியோ செஸ் மீ என்னும் நாடாளுமன்ற உறுப்பினர் மூலம் இலண்டன் நாடாளுமன்றத்தில் முறையிட்டார். அதன் பிறகு காங்கிரஸ் கட்சியினர் தங்கள் கோரிக்கையைத் திரும்பப் பெற்றனர். ஆங்கிலேயர்களே உயர்பதவிகளில் இருக்க வேண்டும், அப்போதுதான் எங்களுக்கு நீதி கிடைக்கும், சமத்துவம் கிடைக்கும் என்பதே அவர்களின் கோரிக்கையாகும்.

1895 ஆம் ஆண்டு திசம்பர் திங்கள் ஆறாம் நாள் எல்ஜின் பிரபு கவர்னர் ஜெனரல் சென்னைக்கு வந்தபோது சென்னை அண்ணா சாலையில் அப்போது மலைச்சாலை (மவுண்ட் ரோடு) குறுக்கே பறையர் மகாசபை தங்களை இனிதே வரவேற்கிறது என்ற மிகப்பெரிய பந்தல் அமைத்து எல்ஜின் பிரபு பெருமாட்டிக்கு வரவேற்புப் பதாகையை அமைத்திருந்தார்.

பறையர் என்றப் பெயரில் இதழ் நடத்தியதால், அவருடைய இதழில் வேறு ஒருவர் எழுதிய செய்திக்காகச் சிலர் அவர் மீது சென்னை உயர் நீதி மன்றத்தில் அவமதிப்பு வழக்குத் தொடுத்தனர். நீதி மன்றத்தில் தண்டத் தொகையைச் செலுத்தி விட்டு மனம் வருந்தினார். அதன் பிறகு வெளி நாடு செல்லத் திட்டமிட்டார்.

இரட்டைமலை சீனிவாசன் 1900ஆம் ஆண்டில் வேலை தேடித் தென் ஆப்பிரிக்கா சென்றார், அங்கு காந்தியடிகளுடன் பழக்கம் ஏற்பட்டுக் காந்திக்குத் தமிழையும், திருக்குறளையும் கற்றுக் கொடுத்தார். அங்கு நீதிமன்றத்தில் ஆவணங்களை மொழி பெயர்த்துக் கூறும் (Interpreter) வேலை பார்த்தார்.

இவர் தென் ஆப்பிரிக்காவில் இருந்தபோதே இங்கு 1916இல் பார்ப்பனரல்லாதார் இயக்கம் தோன்றியது. அதனையொட்டி 1914 இல் அயோத்திதாசர் மறைவுக்குப்பின் செயல்பாடுகள் இல்லாமல் இருந்த ஆதித் திராவிட மகாசபை எம்.சி.ராசா போன்றவர்களால் 1917இல் புதுப்பிக்கப்பட்டது.

மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தச் சட்டத்தின்படி 1920இல் நடைபெற்ற தேர்தலின்போது நீதிக்கட்சி போட்டியிட்டு வெற்றிபெற்று ஆட்சி அமைத்தது. சென்னை மாகாணச் சட்டசபைக்குத் தாழ்த்தப்பட்டோரில் இருந்து 5 உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர். (1936 வரை ஓர் அவை மட்டுமே இருந்தது. 1935இல் இயற்றப்பட்ட

சட்டத்தின்படி 1937 முதல் இரண்டு அவைகள் செயல்பட்டன.)

இரட்டை மலை சீனிவாசன் 1921இல்தான் தென்னாப்பிரிக்காவில் இருந்து சென்னை திரும்பினார். அடுத்த இரண்டாவது பொதுத் தேர்தலின்போது, நீதிக்கட்சி ஆட்சி வெற்றி பெற்றது. 19.11.1923இல் இரட்டைமலை சீனிவாசன் எல்.சி.குருசாமி உள்ளிட்ட பத்துப் பேர் (தாழ்த்தப்பட்டோர்) சட்டசபையின் உறுப்பினர்களாக நியமனம் செய்யப்பட்டனர்.

1919 நிறைவேற்றப்பட்ட மாண்டேகு செம்ஸ்போர்டு சட்டத்தின்படி இரட்டை ஆட்சி முறையில் 1920 முதல் 1936 வரை தாழ்த்தப்பட்டோர் யாரும் எந்தத் தேர்தலிலும் போட்டியிடவாய்ப்பு அளிக்கப்படவில்லை. எல்லா நிலைகளிலும் நியமனம் மூலமாகவே உறுப்பினராக்கப்பட்டனர். அண்ணல் அம்பேத்கர் அவர்களும் 1927 பம்பாய் மாகணத்தில் சட்ட மன்ற உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டார். 1935இல் இயற்றப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தின்படி 1937முதல் நடைபெற்ற தேர்தல்களில் பட்டியல் வகுப்பினர் தேர்தல்களில் போட்டியிட வாய்ப்பளிக்கப்பட்டது.

22.8.1924இல் சட்டசபையில் இரட்டைமலை சீனிவாசன் ஒரு முக்கியமான தீர்மானத்தை முன்மொழிந்தார். அத்தீர்மானத்தை அரசும் ஏற்றுக்கொண்டது. அத் தீர்மானம் 24.2.1925 கெசட்டில் (G.O. No. 2660 Saint Fort Gazetteer) வெளியிடப்பட்டது.

(அ) எந்த வகுப்பையாவது, சமூகத்தையாவது சேர்ந்த யாதொரு நபராகிலும், நபர்களாகிலும், யாதொரு பட்டணம் அல்லது கிராமத்திலுள்ள எந்தப் பொது வழி (அ) தெரு மார்க்கமாயினும் நடப்பதற்கு ஆட்சேபணை இல்லை என்பதும். (ஆ) இந்த தேசத்திலுள்ள சாதி இந்துக்கள் எம்மாதிரியாகவும். எவ்வளவு மட்டிலும் யாதொரு அரசாங்க அலுவலகத்தின் வளாகத்திற்குள் போகலாமோ, யாதொரு பொதுக்கிணறு, குளம் அல்லது பொதுமக்கள் வழக்கமாய்க்கூடும் இடங்களைப் பயன்படுத்தலாமோ அல்லது பொதுவான வேலை நடத்தப்பட்டு வருகின்ற இடங்கள், கட்டடங்கள் ஆகியன இவைகளுக்குள் போகலாமோ அம்மாதிரியாகவும் அம்மட்டிலும், தாழ்த்தப்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த யாதொரு நபர் போவதற்காவது, உபயோகிப்பதற்காவது ஆட்சேபணை இல்லையென்பதும், அரசின் கொள்கையாகும் என்று அறிவிக்கப்பட்டது. இது அனைத்துத் துறைகளுக்கும், அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டது.'' சி.பி. காட்டோஸ்,அரசுச் செயலாளர்(சட்டசபை விவாதக் குறிப்புகள், தொகுதி 19. பக்கம் 822-830)

மேலும் இது விரிவு படுத்தப்பட்டு, வீரய்யன் கொண்டுவந்த தீர்மானத்தின்படி, ஆதித் திராவிடர்களைப் பொது இடங்களில்,

(பொதுக்கிணறு, பொதுச் சாலை, பொது அங்காடி,) தடுப்பவர்களுக்கு ரூ. 100 அபராதம் விதிக்க வகை செய்யப்பட்டது. அந்த ஆணை 24.12.1925 அரசிதழிலும் வெளியிடப்பட்டது. தண்டோரா மூலம் மாகாணம் முழுவதும் அறிவிக்கப்பட்டது.

இரட்டைமலை சீனிவாசன் சட்டசபையில் 1923 நவம்பர் முதல்1939இல் சட்டசபைக் கலைக்கப்படும்வரை உறுப்பினராகப் பணியாற்றினார். அப்போது ஆதித்திராவிட மக்களின் சிவில் உரிமைகளுக்காக ஓயாது குரல் கொடுத்து வந்தார்.

20.1.1922இல் எம்.சி. இராசா சட்ட சபையில் கொண்டுவந்த தீர்மானத்தின்படி பறையர், பள்ளர் என்ற பெயர் நீக்கப்பட்டு ஆதித்திராவிடர் என்ற பெயர் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை எண் 817, 25.3.1922இல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆதித்திராவிடர் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

பெயர் மாற்றம் செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும் பல பத்திரப் பதிவு அலுவலகங்களில் பறையன், பஞ்சமன் என்றே பதிவு செய்யப்படுகிறது இதை அரசு உடனே தடுத்து நிறுத்த வேண்டும் என இரட்டைமலை சீனிவாசன் 25.8.1924இல் சட்டசபையில் முறையிட்டார். (சட்டசபை விவாதக் குறிப்புகள் தொகுதி 20 பக்கம் 280) உடனடியாக. தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என அன்றைய முதல்அமைச்சர் பனகல் அரசர் பதிலளித்தார்.

பரம்பரை மணியக்காரர்கள் உயர்சாதியினராக உள்ளனர். அவர்கள் சேரிகளுக்கு வருவதில்லை, எனவே பரம்பரை மணியக்காரர் முறையை நீக்கி அனைத்து சாதியினரும் தாழ்த்தப்பட்டவர் உள்பட மணியக்காரராக வர வழிவகை செய்யவேண்டும் எனச் சட்ட சபையில் அரசுக்குக் கோரிக்கை வைத்தார். இதே கோரிக்கையை அருந்ததிய சாதி உறுப்பினரான எல்.சி.குருசாமியும் முன் வைத்தார்.(சட்டசபை விவாதக் குறிப்புகள் தொகுதி 20, பகுதி 2, பக்கம் 896).

இவர்களின் கோரிக்கை 60 ஆண்டுகளுக்குப்பின் எம்.ஜி.ஆர். ஆட்சிக்காலத்தில்தான் நிறைவேறியது.


6.2.1925 அன்று சட்டசபையில் பேசிய இரட்டைமலை சீனிவாசன், தெலுங்கு மொழி தாழ்த்தப்பட்டோரான மாலா, மாதிகாவை ஆதிஆந்திரர் என்று அழைக்கும்போது, தீயர்களை ஏன் மலையாளத் திராவிடர் என அழைக்கக்கூடாது எனக் கேள்வி எழுப்பினார்.

(சட்டசபை விவாதக் குறிப்புகள் தொகுதி 22, பகுதி 1, பக்கம் 351). ஆதித் திராவிடர்களின் மாகாண மாநாடு ஆதித் திராவிடர்களின் முதல் மாகாண மாநாடு 29.1.1928இல் பச்சையப்பன் கல்லூரியில் நடைபெற்றது.இரட்டை மலை சீனிவாசன் அவர்களைத் தலைமை ஏற்கும்படி வி.ஜி.வசுதேவ பிள்ளை முன்மொழிந்து, வி. ஐ.

முனிசாமி பிள்ளை வழிமொழிந்தவுடன் பலத்த கரவொலிக்கிடையே இரட்டைமலை சீனிவாசன் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். எம்.சி.மதுரை பிள்ளை வரவேற்புரையாற்றினார். வரவேற்புக் குழுவின் தலைவர் என்.சிவராஜ் சிறப்புரையாற்றினார்.

இம்மாநாட்டின் முக்கிய நோக்கம் அப்போது இந்தியாவிற்கு வரவிருந்த சைமன் குழுவிற்கு அறிக்கை தயாரித்துக் கொடுப்பதற்கான குழு அமைப்பதும், ஆங்கில அரசிற்கு ஆதித் திராவிடர்களின் தேவைகளை வலியுறுத்துவதும் ஆகும்.

இம் மாநாட்டில் ஆதித் திராவிடர்களுக்குத் தனித் தொகுதி வேண்டும் என்றும், 21 வயது அடைந்த அனைவர்க்கும் வாக்குரிமை அளிக்கப்படவேண்டும் என்றும், கல்வி, வேலை வாய்ப்புகளில் ஆதித் திராவிடர்களுக்கு உரிய பிரதிநி தித்துவம் அளிக்கப்படவேண்டும். உயர் கல்வி உள்பட அனைத்துக் கல்வியும் இலவசமாக வழங்கப்பட வேண்டும் எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (குறிப்பு :1927 வரை பச்சையப்பன் கல்லூரியில் ஆதித் திராவிட மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளவில்லை. 1928இல்தான் முதன்முறையாக ஆதித் திராவிட மாணவர்களுக்குக் கதவு திறக்கப்பட்டது. மதுரை பிள்ளை வரவேற்புரையில் பச்சையப்பன் கல்விக்குழுவிற்கு நன்றி தெரிவித்துக் கொண்டார்.)



இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் ஒவ்வோர் ஆண்டும் தவறாமல் பட்ஜெட் உரையின்மீது உரையாற்றுவது வழக்கம்.அவரது முதல் பட்ஜெட் உரை 6.2.1925 அன்று தொடங்கியது.ஆதித் திராவிட மக்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு, கல்வி வளர்ச்சி, சுகாதார வளர்ச்சி, பஞ்சமி நில ஒதுக்கீடு போன்றவற்றை வற்புறுத்துவார். இவர் பெரும்பாலும் ஆங்கிலத்திலேயே பேசுவார்.எம்.சி.மதுரை பிள்ளை, சாமி சகஜானந்தம் ஆகிய இருவர் மட்டும் சட்ட சபையில் தமிழிலேயே பேசுவார்கள்.

இரட்டைமலை சீனிவாசனின் மற்றுமொரு முக்கிய தீர்மானம் மதுக்கடைகளை மூடவேண்டுமென்பது. கலால் வரி அதிகமாகக் கிடைப்பதால் ஆங்கில அரசு இந்தியா முழுவதும் நிறைய

மதுக்கடைகளைத் திறந்து வைத்திருந்தது.இதில் உழைக்கும் மக்களான அடித்தட்டு மக்களின் பணம் உறிஞ்சப்படுவதைக் கண்டு மனம் வெதும்பினார். அறவே கடையை மூடச் சொன்னால் மூட மாட்டார்கள் என்பதால் குறைந்தபட்சம் விடுமுறை நாள்களிலாவது மதுக்கடைகளை மூடவேண்டும் என்று 24.9.1929இல் சட்ட சபையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அதை அரசு ஏற்றுக்கொண்டது. (சட்டசபை விவாதக் குறிப்புகள், தொகுதி 50, பக்கம் 391-392)

1930-32களில் இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாடுகளில் இவர், அண்ணல் அம்பேத்கருடன் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதி நிதியாகச் சென்று கலந்துகொண்டு சிறப்பாகப் பணியாற்றினார். காந்தியுடன் தென்னாப்பிரிக்காவில் இவருக்கு இருந்த நட்பைக் கொண்டு இலண்டனில் காந்தியுடன் இரண்டுமுறை நேரில் சந்தித்துப் பிரச்சனையைச் சுமூகமாக முடித்துவிட முயன்றார். ஆனால் பலன் இல்லை, அம்பேத்கருடன் இணைந்து காந்தியை எதிர்க்கத் தொடங்கினார். கடைசிவரையில் அண்ணல்அம்பேத்கருடனும், தமிழகத்தில் திராவிட இயக்கத்தினருடனும் நட்புறவுடன் செயல்பட்டுவந்தார்.

இலண்டன் வட்ட மேசை மாநாட்டில் இரட்டை மலை சீனிவாசன் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இரட்டை வாக்காளர் தொகுதி வழங்கப்பட வேண்டும் என்றும், தாழ்த்தப்பட்ட மக்களின் விகிதாச்சார அளவுக்கு ஏற்பக் கல்வியிலும், வேலைவாய்ப்பிலும் உரிய பங்கு அளிக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்திப் பேசினார். (வட்டமேசை மாநாட்டு கூட்ட நடவடிக்கைக் குறிப்பு, தொகுதி 3, பக்கம் 18. 19.)

இதே கோரிக்கையை வலியுறுத்தி அண்ணல் அம்பேத்கரும் மிக விரிவாக வட்டமேசை மாநாட்டில் பேசினார். (வட்டமேசை மாநாட்டுக் கூட்ட நடவடிக்கைக் குறிப்பு, தொகுதி 3, பக்கம் 168 174) இலண்டன் வட்டமேசை மாநாட்டில் இவர்கள் இருவரும் தயாரித்துக் கொடுத்த ஆவணம், தாழ்த்தப்பட்ட மக்களின் முழு உரிமையைப் பெற்றுத் தருவதாக அமைந்திருந்தது.

டாக்டர் சுப்பராயன் 1933 சனவரி 31ஆம் நாள் சென்னை சட்ட சபையில் தாழ்த்தப்பட்டவர்களைக் கோயிலில் நுழைய அனுமதிக்கச் சட்டமியற்றவேண்டும் என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

இத்தீர்மானத்தை ஆதரித்து இரட்டைமலை சீனிவாசன் பேசும்போது, பண்டைக் காலத்தில் இக்கோவில்களைத் தாழ்த்தப் பட்டவர்கள்தான் கட்டினார்கள் என்றார்.திருச்சி சாம்பவ சாம்பவன் கட்டிய கோவிலை இந்துக்கள் பிற்காலத்தில் ஜம்புகேசுவரர் என அழைத்தனர். தஞ்சாவூரில் சோழமன்னர் கட்டிய பிரகதீசுவரர் ஆலயம் என்பது விருவதை சாம்பவனின் உடல் அடக்கம் செய்யப்பட்ட சமாதியின்மீது கட்டப்பட்டது என்றும், ‘சோழ

மதத்தில்’ குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றும் சான்று காட்டினார். அதுபோலவே திருவாரூரில் சோழ அரசரால் கட்டப்பட்ட கோவில் தாயக சாம்பவான் என்பவருடைய சமாதிமீது கட்டப்பட்டது. அக்கோயில் இன்று தியாகராரசப் பெருமாள் கோயில் என்று அழைக்கப்படுகிறது. மராத்தியர்களும்,தென்னிந்தியாவிற்கு வந்த போது.சாம்பவர்களுடைய கோட்டைகளையும். கோவில்களையும் இடித்துவிட்டு அவ்விடங்களில் புதிய கோவில்களைக் கட்டினர். தஞ்சாவூரில் சோழ மன்னர்களால் கட்டப்பட்ட மாரியம்மன் கோவில் திருவள்ளுவரின் சகோதரி மாரியம்மன் நினைவாகக் கட்டப்பட்டது என்று இரட்டைமலை சீனிவாசன் கூறினார். மேலும், இரட்டைமலை சீனிவாசன் பேசும்போது தாம் அக்கோவில்களைச் சாம்பவர்களுக்கு விட்டுக்கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்ளவில்லை என்றும், அக்கோயில்களில் அவர்கள் வழிபாடு செய்வதற்கு மட்டும் அரசாங்கத்தை வேண்டிக் கொள்வதாகவும் கூறினார். அப்போது குறுக்கிட்டுப் பேசிய ஏ.பி.பாத்ரோ தாழ்த்தப்பட்டவர்கள் ‘சுத்தி’’ குறைந்தவர்கள் என்றார். அதை மறுத்த இவர்.சுத்தி குறைவாகக் கருதப்படும் தாழ்த்தப்பட்ட சமூகத்தில் இருந்துதான் திருவள்ளுவரும், அவ்வையும், மாரியம்மனும் தோன்றினர் என்றார்.அரசியல் முன்னேற்றமும், பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும்போது சுத்தம் தானாகவே ஏற்படும் என்றும் அடித்துக் கூறினார்.

பலர் பேசிய பின்பு, இத்தீர்மானம் சட்ட சபையில் வாக் கெடுப்புக்கு விடப்பட்டது. 56 வாக்குகள் தாழ்த்தப்பட்டோர் கோயில் நுழைவுக்கு ஆதரவாகவும் 19 பேர் நடுநிலையாகவும் இருந்தனர். எதிர்ப்பின்றி இத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் பார்ப் பனர்களின் முட்டுக்கட்டை காரணமாக கவர்னர் ஜெனரல் ஒப்புதல் அளிக்காததால் இதைச் சட்டமாக்க முடியாமல் போய்விட்டது.

இரட்டைமலை சீனிவாசன் அவர்களை வட்டமேசை மாநாட்டிற்கு அழைத்துச் சென்று தம்மைப் புறக்கணித்து விட்டாரே என்ற கோபத்தில் இருந்த எம்.சி.இராசா, அண்ணல் அம்பேத்கருக்கு எதிராக பூனா ஒப்பந்தத்தின்போது இந்து மகாசபைத் தலைவருடன் செயல்பட்டுவந்தார். மூஞ்சேவுடன் சேர்ந்துகொண்டும், காந்திக்கு ஆதரவாகவும் அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்கு எதிராகவும் செயல் பட்டு வந்தார்.

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் 1935இல் மதமாற்றம் பற்றி அறிவித்த போதுகூட இரட்டைமலை சீனிவாசன்.அம்பேத்கருடைய மனம் நோகாமல் மெதுவாக “நாம்தான் இந்து மதத்தில் இல்லையே(அவர்ணஸ்தர்); வருணம் அற்றவர்கள் ஆயிற்றே. நாம் இந்துவாக இருந்தால் தானே மதம் மாற வேண்டும்’’ என்று

அம்பேத்கருக்குத் தந்தி மூலமாகத் தன் கருத்தைத் தெரிவித்தார்.

அண்ணல் அம்பேத்கர் 1935இல் மத மாற்றம் பற்றி அறிவித்தபோது "நான் இந்துவாகப் பிறந்துவிட்டேன். சாகும் போது ஓர் இந்துவாகச் சாகமாட்டேன்" என்று அறிவித்தார். எம்.சி.ராசா இதை எதிர்த்துப் பத்திரிகைகளில் அறிக்கை விட்டார். "நான் இந்துவாகப் பிறந்தேன். இந்துவாகத்தான் சாவேன்" இதற்குப் பதிலுரைத்த அம்பேத்கர், "எம்.சி.ராசா தான் பறையனாகப் பிறந்தேன். பறையனாகத்தான் சாவேன் என்று கூறுகிறார் அதற்கு நான் என்ன செய்யமுடியும்?" என்று கூறினார். எம்.சி.ராசா இறுதிவரையில் அம்பேத்கருக்கு எதிராகவே செயல்பட்டு வந்தார். இரட்டைமலை சீனிவாசன், என்.சிவராஜ் போன்றோர்கள் கடைசிவரை அம்பேத்கருக்கு ஆதரவாகச் செயல்பட்டுவந்தனர்.

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகத் தன் வாழ்நாள் முழுவதும் பணியாற்றிவந்த தலைவர் இரட்டை மலை சீனிவாசன் 18.9.1945 அன்று மறைவுற்றார்.

இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் மக்கள் சேவையைப் பாராட்டி ஆங்கில அரசு அவருக்கு 1.1.1926இல் ராவ் சாகிப் பட்டமும், 3.6.1930இல் ராவப் பகதூர் பட்டமும், 1.1.1936இல் திவான் பகதூர் பட்டமும் அளித்துச் சிறப்புச் செய்தது. இவ்வளவு சிறப்புப் பெற்றவரும், தாழ்த்தப்பட்டோரின் நலன்களுக்குப் பாதுகாப்பு அரணாக விளங்கியவரும் ஆகிய இரட்டை மலை சீனிவாசன் அவர்களுக்கு மணி மண்டபம் கட்டவேண்டும். சிலை வைக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாகப் பல்வேறு அமைப்புகளால் கோரிக்கை வைக்கப்பட்டு வந்தது.

அதன் விளைவாக, அவருடைய 150 ஆவது பிறந்தநாளான 7.7.2009 அன்று தமிழக அரசின் சார்பில் ரூ.21 இலட்சம் செலவில் மணி மண்டபமும், சிலையும் அடையாறு காந்தி மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இது சற்றும் பொருத்தமற்றதாகும்.

கோரிக்கை நிறைவேறியது மகிழ்ச்சிதான் என்றாலும், அவர் தம் வாழ்நாளில் 1885இல் காங்கிரசுக் கட்சி தொடங்கும்போதே அதை உன்னிப்பாகக் கவனித்து. காங்கிரசு கட்சியால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்தப் பயனும் ஏற்படாது என்பதைப் புரிந்து பறையர் மகா சன சபையைத் தொடங்கியவர்.

தம் வாழ்நாள் முழுவதும் காந்தியையும், காங்கிரசையும் எதிர்த்தவர். பல ஆண்டுகள் சட்டசபை உறுப்பினராக இருந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் தொண்டாற்றிய அந்த மா மனிதருக்குத் தனியாக ஓர் இடத்தில் மணிமண்டபமும், சிலையும் நிறுவியிருந் தால் சிறப்பாக இருந்திருக்கும்.

• **கட்டுரையாளர் - திராவிடக் கோட்பாட்டு அறிஞர்**

❖❖❖

# ஆவணங்களில் அடித்தளமக்கள்

**முனைவர் செ. இராசு**

சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட அடித்தள மக்கள் வாழ்வியல் தொடர்பான பல ஆவணங்கள் கிடைத்துள்ளன. அவை கல்வெட்டு, செப்பேடு, ஓலைச்சுவடிகளிலும் சில காகிதங்களிலும் எழுதப்பட்டுள்ளன.

வறுமை காரணமாகப் பெற்ற குழந்தைகளை விற்றுள்ளனர். திருமணத்திற்குக் கடன் வாங்கி மணமக்கள் பெற்றோருடன் அடிமையாகி உள்ளனர். பலர் தங்களுக்குச் சொந்தமான அடிமைகளைப் பிறருக்கு விற்றுள்ளனர். அடிமை விற்பனையில் பெண்களும் சிலர் ஈடுபட்டுள்ளனர். ஆண்களும் பெண்களும் குடும்பத்துடன் பொது இடத்துக்கு வந்து ''எங்களை விலை கொள்வார் உண்டோ' என்று விலைகூறி விற்றுக் கொண்டுள்ளனர். கோவில் மடங்கட்குச் சிலர் அடிமைகளைத் தானம் செய்துள்ளனர். விலைக்கு விற்றுள்ளனர். சிலர் வாழ வழியின்றி தாங்களாகவே கோவிலில் அடிமையாகியுள்ளனர். செல்வந்தர்கள் தம் வாரிசுகட்குச் சொத்துகளைக் கொடுக்கும்போது சில அடிமைகளையும் கொடுத்துள்ளனர். இதைவிடக் கொடுமை சிலர் ''தீண்டா அடிமைகள்'' என்று கூறப்படுவதுதான். ஆவணங்களில் பலர் சாட்சிக் கையொப்பம் இட்டுள்ளனர். எழுதியவர் பெயரும் உள்ளது.

வகைக்கு ஓரிரு ஆவணங்கள் காட்டப்பட்டுள்ளது. ஆவணம் மிக நீண்ட வடிவில் இருப்பதால் அவற்றின் மையக்கருத்துள்ள பகுதி மட்டும் தரப்பட்டுள்ளது. டாக்டர் ஆ.சிவசுப்ரமணியம், அ.கா. பெருமாள் போன்றவர்கள் சில ஆவணங்களைத் தொகுத்துள்ளனர். இக்கட்டுரையாளரின் 51 ஆவணத்தொகுப்புடன் "தமிழ் நாட்டில் அடிமை முறையும் ஆள் விற்பனையும்'' என்னும் நூல் விரைவில் வர உள்ளது. (ஆதிவனம் பதிப்பகம் 90806 51304) ஆவணம் எழுதப்படாமல் பல நிகழ்வுகள் நடந்திருக்கலாம்.

தாது வருடப் பஞ்சக் கும்மிகளில் "கணவனைப் பறிக்கொடுத்துக் கை குழந்தை விற்ற பஞ்சம்'' "பெண்டு பிள்ளைகளை விற்பாரும்'' என்ற தொடர்கள் உள்ளன. அவற்றை ஆவணம் மெய்பிக்கிறது.

**5வயது பெண்குழந்தை விலை 2 புதுச்சேரி ரூபாய்**

***1781 ஆம் ஆண்டு நவம்பர் 25க்கு செல்லும் பிலபவ வருஷம் கார்த்திகை 12 புதுவை மாநகரம் ஊர் சவுத்ரி நயினார் அவர்கள் முன்பாக மரியம்மாளுக்கு கூனிமேடு பள்ளி பொன்னன் பெண்ஜாதி தயிலம்மை கிரைய சாதனமுறி குடுத்தபடி என் பெண் பேர் கவுதித்தாள் வயது 5 ஜாதி பள்ளச்சி சேர்ந்தவள் இவளை கொள்வாருளரோ***

*கொள்வாருளரோ வென்று கூறுகையில் மரியம்மாள் நானே கொள்வேன் என்று பின் கூறுகையில் யிம்பி நான் இசைந்து தம்மால் பொருந்தி எதிர் மொழி மொழிந்ததினாலும் மத்திஸ்தர் முன்பாக நிச்ச யித்த றாசி புதுசேரி ரூ. 2 இந்த ரூபாய் இரண்டுக்கு விலையறி வித்துப் பொருள்பத்திக் கொண்டேன்.*

**குழந்தை கேசவன் விலை 4 ரூபாய்**

**பிள்ளை கிரைய சாசனம்**

*செய வருஷம் ஆனி மாதம் 21தேதி 1534 திருமுல்லை வாசலிருக்கும் ஸ்ரீ கிஷ்ணப்பிள்ளை அவர்களுக்கு மேற்படி யூரிலிருக்கும் சென்னப்பட்டணம் பாவாடை முதலி மேற்படி பெண்ஷ்சாதி னாகு னாங்களிருவரும் யெழுதிக் கொடுத்த பிள்ளைக்கிறைய சாதனம் யென்னமென்றால் யெங்களுதாகிய ஆண்பிள்ளை கேசவனை தங்களிடத்தில் யென்னென்னைக்கும் பிள்ளைக்குப் பிள்ளையாய் தாங்கள் வளத்து வச்சுக் கொள்ளும்படியாய் தங்களிடத்தில் யெங்கள் பிள்ளையை கொடுத்துவிட்டு அதுக்காக கிறயம் வாங்கிக் கொண்டது. ரூபா 4 யிந்த ரூபா னாலும் னாங்கள் ஹொக்கமாய் மேற்படி விட்டங்கறனூறு கிஷ்ணபிள்ளை முன்னிலைக்கு வாங்கிக் கொண்ட படியால் மேற்படி கேசவ கிஷ்ணன் யெங்குற பிள்ளையை தாங்கள் யெண்ணெண்ணைக்கும் பிள்ளைக்குப் பிள்ளைய்யா வச்சு ஆண்டனுபவிச்சுக் கொள்வீர்களாகவும்.*

**பெற்ற பிள்ளைகளும் அடிமை**

**வேதாரண்யம் கல்வெட்டு**

*1. இந்த நாயனார் திருமடம் உடைய நாயனார் அடிமை நங்கைச்சி பெற்ற பிள்ளைகளும் உடையாள் பெற்ற பிள்ளைக்கும் தேவாண்டாள் பெற்ற*

*2. பிள்ளைகளும் வம்பாண்டாள் பெற்ற பிள்ளைகளும் பெருமாள் பெற்ற பிள்ளைகளும்*

*3. அடிமை*

**பிறக்கும் குழந்தையும் அடிமை**

*ஐயங்கொண்ட சோழவளநாட்டு திருவழுந்தூர் நாட்டுப் பிரமதேயம் உடையார் திருமடமுடைய*

*நாயனார்க்கு இந்நாயனார் அடியாரில் சிற்றாமருடையான் பொன்னன் நாயகப் பிச்சனேன்*

*என் மகள் இந்நாயனார் அடியாரில் பாம்புரமுடையான் பெரு ஞானமுடையான் பாரியை பொன்னன்*

*உலகுடையாளையும் இவள் மகள் பெருஞானமுடையாளையும் என் மகன் சொக்காண்டாரையும்*

*இவர்கள் வயிற்றில் பிறக்கும் பிள்ளைகளையும் அடிமை*

**கடன் வாங்கிக் கல்யாணம் மனைவி, தாயாருடன் அடிமை**

*விசைய வருஷம் சித்திரை மாதம் 30 (1833) நீலப்பாடியிலிருக்கும் அழகப்ப பிள்ளைக்கு நென்மேனியிலிருந்து நீலப்பாடியில் வந்திருக்கும்*

*னாகன் சாம்பான் ஒத்திச்சீட்டு குடுத்தப்படி யென்னமெண்டால் யிந்த னாள் கையில் யென் கல்லியாணத்துக்கு னான் நீலப்பாடி*

*ஆற்றி மகன் மொட்டையன் பாருவையாக னான் ரொக்கம் பத்திக் கொண்டது ரெண்டு பண வெள்ளி ரூபாய் 12 பணம் யிந்த பணிரெண்டு பொன்னும்*

*ஒரு பணமும் னான் ரொக்கம் பத்திக் கொண்டபடியினாலே மேல் எழுதிய பணத்துக்கு னானும் னான் கலியாணம் பண்ணுகிற பெண்டாட்டி பொட்டா*

*ளும் யென் தாயார் பரிமணத்தியும் யாங்கள் மூணு பேரும் தங்களிடத்தில் நின்னு பண்ணைவேலை செய்து தங்கள் பண்ணை ஆள் ஒப்பந்தம் கட்டு களவடி கூலி*

*ஆள் பணம் வாங்கிக் கொண்டு வேலை செய்து வருவேனாகவும்*

**கடன் வாங்கிக் கல்யாணம், கடனுக்காக அடிமை**

*1. பிங்கல வருடம் ஆவனி மாதம் 6 தேதி மாகரலில் யிருக்கும் சேது முதலியார் குமாரன் முத்தண்ணா முதலியாருக்கு மேற்படி யூரில் யிருக்கும்*

*2. கிஷ்ணாச்சி சீனுவாச முதலியார் குமாரன் யேகாம்பர முதலியார் யெழுதிக் கொடுத்த ஆள் வொத்திச் சீட்டு யென்ன வென்*

*3. றால் யென் அடுமையாகிய பறபொன்னந் மகன் கிஷ்ணன் பரியதுக்காக முன்னாள் வருடம் புரட்டாசி மாதம் முதல் தேதியில்*

*4. வாங்கின றூ-4 நாளது தேதியில் மேற்படியான் கல்யாணத்துக்காக வாங்கின றூ-10 ஆக றூ-14யிந்த றூபாயி பதி*

*5. னாலுக்கும் வட்டி யீடாக மேற்படி கிஷ்ணன் யென்பவனை உங்கள் பயிர் வேலைக்காக வைச்சுக் கொண்டு*

*6. படியும் சிறபணமும் கொடுத்து வேைல வாங்கி கொள்ளுகுறது*

**இறுதி சடங்கிற்காக 5 1/2 ரூபாய் வாங்கி அடிமை**

**ஆள் ஒத்தி உடன்படிக்கை**

*சாதாரண 1790 வருடம் ஆனி மாசம் 22 தேதி கொண்ணூர் சங்கர முதலியார் குமாரன் முனியப்ப முதலிக்கு மேற்படியூர் சேறியிலிருக்கும் மாகாளி யெழுதிக் குடுத்த ஆள் ஒத்தி ஒடன் படிக்கை யென்னவென்றால் னான் உங்களிடத்தில் வேலை செய்துவரும் காலத்தில் யென் அண்ணன் தெருவீதியான் யெரெந்து போனதற்காக ஆகுதற்க்கு முன்னதாகவும் னான் வாங்கிக் கொண்ட 5 1/2 யிந்த*

*ரூபா அஞ்சரையும் னான் உங்களிடத்தில் வேலை செய்யாமல் போய்விட்டால் மேலெழுதிய ரூபா குடுத்துவதில் நஷ்டமும் ஒத்துக் குடுக்கக் கடவேனாகவும் இந்தப் படிக்கு யென் ராஜியில் யெழுதிக் குடுத்த ஆள் ஒத்தி உடன்படிக்கை*

*இக்கீறல் மாகாளி கைனாட்டு*

**கோயில் அடிமைகள்**

**கோயிலில் மூன்று வகையான அடிமைகள்** இருந்தனர்

*1.) தானம் செய்யப்பட்டோர்*

*2.) விலைக்கு வாங்கப்பட்டோர்*

*3.) வறுமைக் காரணமாக தாமே அடிமை ஆனவர்கள்*

*கோயில் பணிகட்குப் பெண்கள் அடிமை தானம்*

*ஸ்வஸ்திஶ்ரீ மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரி பந்மற்கு யாண்டு 41 ஆவது தென்கரை பிரமதேயம் நந்தபன்ம மங்கலத்து மத்தியஸ்தன் நாலாயிரத்து முன்னூற்றுவன் ஆன சந்திரசேகரன் அரமயிந்தனேன் நான் யாண்டு 35ஆவது கூழாள் கொள்ளமா என் அடியாள் ஊரன் சோலையையும் இவள் மகள் வேளான் பிராட்டியையும் இவள் மகள் அரமயிந்தன் கண்டிகையையும் உள்ளிட்டாரை...*

*கூற்றத்து திருக்கற்றளி பரமேஸ்வரருக்கு கவரிப்பிணாவாகவும் திருப்பதியம் பாடவும் நீரோடு அட்டிக் குடுந்தேன் சந்திர சேகர அரமயிந்தனேன்*

**திரிசூலம் சாத்திக் கோயிலுக்கு அடிமை**

*முதல் குலோத்துங்க சோழரின் 49 வது ஆட்சியாண்டில் இருமுடி சோழத் தெரிந்த வில்லிகளில் நிலையுடைய ஆச்சப் பிடாரன் கணபதி நம்பியான் அழகிய பாண்டியப் பல்லவரையன் அவருக்கு உரிமையுடைய (சுவாத்திகமான)*

*ஆற்றி அரவி அவிசாணி*

*அவர் மகள் அரசை*

*இவள் மகள் அவையம்புக்காள்*

*இவள் தங்கை தவம் செய்தாள்*

*அரசை தங்கை ஆளவந்தாள்*

*ஆகியோரை ஆளுடையார் திருவல்லம் உடையார்க்கு திரிச்சூலம் சாத்தி தேவரடியாராகத் தானம் செய்தார்*

**வெள்ளாட்டி கோதை குடும்பம் கோவிலுக்கு விற்பனை**

*1. ஜயங்கொண்ட சோழவள நாட்டு ஆக்கூர்நாட்டுத் தலைச்சங்காட்டுக் கவாகாசி கலையன் குமரன் ஆன தம்பிரான் தோழனேன் இவ்வூர் உடையார் திருவலம்புரமுடையார் கோயிலில்*

*ஆதி சண்டேஸ்வர தேவர்க்கு நான் விற்றுக் கொடுக்கின்ற அடியார் வீரர் வெள்ளாட்டி கோதை அவையம்புக்காள்*

*2. இவள் தங்கை செல்வியும் இவள் சிறியதாய் கோதை திருவெண்காட்டு நங்கையும் இவள் மகன் உடையான் சீராளதேவனும் இவன் தங்கை உய்யவந்தாளும் இவள் தங்கை சொக்கியும் இவள் தம்பி சொக்கனும் ஆக பேர் 8 இப்பேர் எட்டும் சித்தேவர்க்கு விற்றுக் கொடுத்துக் கொள்வதாக எம்மிலிசைந்த விலைப் பொருள்*

**பஞ்சத்தால் குடும்பம் கோயில் அடிமை**

*மிதுன நாயிற்று பூர்வ பட்சத்து துவாதெசி சோமவாரமும் பெற்ற அனுஷத்து நாள் பண்டாரத்தார்*

*எம்பெருமாள் அடியாள் மல்லாயிக்கும் இவள் மகள் உலகுடைய நாச்சி உள்ளிட்டாற்கும் பிரமாணம் பண்ணிக் குடுத்த பரிசாவது. இவர்கள் பரதேசியாக இவ்வூரிலே வந்து இருந்து முன்னாள் நள வருஷம் சஷாமத்திலும் பிறமாதூத பிறசாபதி வருஷம் சஷாமத்திலும் விதனமானது கொண்டு இவர்கள் பொன்னமராபதி ஊரவரையும் எங்களையும் கூட்டி நாங்கள் இவ்வெம்பெருமானுக்கு அடிமை ஆகப் புகுந்தோம் எங்களைக் காப்பாற்றிக் கொள்ளவேணும் என்று சொல்லுகையாலே நாங்களும் ஊரவரும் இம்மரிஆதிக்குப் பொருத்தி இந்த உலகுடைய நாச்சிக்கு ஊரவரும் மலையாயிருக்கும் பொன்னன் உள்ளிட்டாற்கும் சீபண்டாரத்திலும் ஆக மெலிவு குறை உண்டானதும் தீர்த்து இவர்களையும் எம்பெருமான் அடிமையாக முன்பே திரு இலச்சினையும் சாத்திவிடுகையில்*

**பஞ்சத்தால் கோயிலுக்கு விற்றுக் கொண்ட குடும்பம்**

*1. ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுயையும் ஈழமும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு 23வது உடையார் திருப்பாம்புரமுடையார்க்கு இவ்வூர் இருக்கும்*

*2. வெள்ளாளன் காட்டுடையான் இருக்க அவன்... காலம் பொல்லாக் காலமாய் காசுக்கு முன்னாழி நெல்லு விற்று நானும் என் மக்களும் சோறு பெறாமல் சவாப்புக்கு*

*3. வாரேயும் இவனை முதுகண்ணாக இன்னாயனார்க்கு நானும் என் மகள் அரியாளும் இவள் தங்கை நம்பாண்டியும் மட அடிமை ஆக ஆதி சண்டேசுவர தேவர் ஸ்ரீபாதத்து நீர் வார்த்துபசரித்து ஸ்ரீபண்டாரத்துக் கொண்ட காசு நூற்றொருபது*

**தந்தை மகனுக்குக் கொடுத்த காணியாட்சி அடிமைகள்**

*ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடையபன்மரான திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீ பராக்கிரமபாண்டிய தேவற்கு ஆண்டு 5 ஆ*

*வதின் எதிர் 7 ஆவது கும்ப நாயற்று அபரபக்ஷத்து துவாதெசியும்*

*நாயிற்றுக் கிழமையும் பெற்ற உத்திராடத்*

*து நாள் கானனாடான விருதராச பயங்கர வளநாட்டு மேலூர் சீராளதேவன் முனையதரையன் மக்கணாயநே*

*ன் என்மகன் சீராள தேவர்க்கு நான் குடுத்த காணியாட்சி மனையும் அடிமையும்*

*இவைபடி இம்மரியாதி அனுபவித்து நாம் எழுதிக்குடுத்த அடிமையரான தேவியும், இவள் மகள் சீராளும், இவள் தம்பி மக்கணாயனு*

*ம் இவளுடைய சிறிய தாய் ஆவுடையாளும், இவள் தம்பி சீராள தேவனும், இவன் மருமகள் சீராளும், பெரியனாச்சி மகன் திருமெய்யம*

*வையாளனும் சிவத்த மக்கணாயனும் ஆகப் பேர் எட்டும் பள்ளடியாரில் வளத்தி மகள் மன்றியும், இவள் மகள் பொன்னியும், கொள்*

*ளி மகள் தொழுதியும் உடப்பி மகன் பொன்னனும் விளத்தி மகன் வில்லியும் ஆக இவ்வகைப்படி உள்ள அடிமையும் காணியாட்சி*

*யும் மனையும் மற்றும் எப்பேர்ப்பட்ட சமுத்தப்ராத்விகளும் தான*

*விக்கிரங்களுக்குரித்தாவதாக சந்திராதித்தவற் செல்ல அனுபவிக்கு*

*ம் படி கல்லிலும் செம்பிலும் வெட்டிக் குடுத்தேன் சீராள தேவர்க்கு முனையதனரயன் மக்கணயாகரேன்.*

**சீதனப் பிரமாணம் கொடுத்த தந்தை**

*கொல்லம் 606 வைகாசி மீ 1 அமர பக்கத்து ஏகாதசியும் வெள்ளிக்கிழமையும் பெற்ற உத்திரத்து நாள் எழுதின சீதனப்பிரமாண மாவது புறத்தாநாட்டு அன்னநல்லூர் வளத்து வாழ்வித்தான் கேசவப் பெருமாளான கலிங்கத்தரயநேன் நாஞ்சி நாட்டு அதியரான அழகிய பாண்டியபுரத்து குருந்திடங்கொண்டான் கேசவப் பெருமாளான குலோத்துங்க சோழ செட்டி... என் பிதா... குடுத்த சீதனமாவது பசு 20ம் அன்னநல்லூர் பெரிய குளத்தில் நடுவில் மனைடயில் நீர் பாய்ந்து நெல் விளையும் நிலத்தில் காலிருணையும் செம்பு தரா வெண்கலம் 2 படியும் வெள்ளாளண் பிள்ளைகளில் வளத்தி மகன் அலைவாச்சியும்... நாயினானும் நல்லிமகன்... மகன் இனக்கியும் நாச்சி மகன் நாகனும் வெள்ளாட்டிகளில் நாச்சி மகன் பிறவியும், இவள் தங்கை பெருமியும், ஆயி மகள் நல்லியும், தேவி மகள் கற்பகமும், பறைச்சிகளில் நல்லி மகள் பொதுவியும், இவள்மகள் நல்லியும், பொதுவி மகள் அவச்சியும், இவள் தங்கை பொதுவியும், அவைக்கி மகள் நல்லியும், பறையரில் பொதுவி மகன் பிறவியும், அவன் தம்பி நாகனும், இவன் தம்பி சிறு நாகனும், நல்லிமகள் பிறவியும், இவன் தம்பி பெற்றானும் இவ்வனைவரையும் சீதனமாக*

*எழுதிக் குடுத்தேன்.*

### மகனை முப்பது பணத்திற்கு விற்ற தீண்டா அடிமை

*பிரபவ வருசத்துக்கு செல்லாநின்ற ஶ்ரீமுக வருசம் ஆவணி மாதம் 23ந் தேதி அதளையூரிலிருக்கும் காவல்காற மணியன் சேருவைக்காறன் மகன் குமாரயிருளப்ப சேறுவைக்காரன் மேற்படி குமாரன் முத்திருளாண்டி சேருவைகாறன் மேற்படி குமாரன் சோணை சேருவைகாரன்*

*மேற்படி குமாரன் வீரணன் சேருவைகாரன் மகன் சுப்பிரமணியன் சேருவைகாறனுக்கு ஷயூரிலிருக்கும் தீண்டாதாரில் பறைவயிரன் மகன் வியறன் மேற்படி மகன் கட்டையனேன் அடிமை விலைக் கிரைய சாதனமெழுதிக் குடுத்தபடி அடிமை சிறைக் கிரைய சாதனமாவது சாம்பான் வலைவீசி அடைச்சான் வியான்முன்பாக கரைஏற்றி நிற்செயித்து அன்னாடகம் விளங்கும் கலியுக ராமன் புதுமின்னல் பணம் 30 ஊசி கிரந்தம் பணம் ஒண்ணு ஆக பணம் முப்பத்தொரு பணமும் காட்டி ஏற்றி கயிலறப் பற்றிக் கொண்ட படியினாலே விலை தீர்த்து விலை பிரமாணம் செய்து கொடுத்தேன். கட்டையன் மகன் பெரியகறுப்பனை*

### தீண்டா அடிமையுடன் கோயிலுக்கு ஊர் கொடை

1. *சகாப்தம் 1355ன் மேல் ஶ்ரீகோ மாறபன்மரான திரிபு*
2. *வனச் சக்கரவர்த்திகள் ஶ்ரீவீரபாண்டிய தேவற்கு யாண்டு 2 வது எதிர் 12வது*
3. *மீனநாயற்று பூர்வபட்சத்து சப்தமியும் புதன் கிழமையும் பெற்ற அத்தத்து நாள் முத்தூற்*
4. *கூற்றத்து பிரமதேயம் மருங்கூரான பண்டித சோழச் சதுர்வேத மங்கலத்து*
5. *கோதரத்து ஆஸ்வலாயன சூத்திரத்து நாராயண பட்டன் வீரபாண்டிய*
6. *தேவனுக்கும் தனக்கும் (நன்றாக) நம்முடைய பேர்க்கூலி செம்பு*
7. *நாட்டில் நம்முடைய உழவுப் பற்றான பற்குளம் உட்பட்ட*
8. *பற்றும் இவ்வூரில் புறஞ்சேரியில் தீண்டாஅடிமை உள்ளதும்*
9. *உதகபூர்வ தானமாக நாம் தருகையில்*
10. *மனைத்திடல் ஊருணி உடைப்புகுளம் குளப்பரப்பு நன்செய்*
11. *மேனோக்கிய மரம் கீணோக்கிய கிணறு தீண்டா அடிமை*
12. *மற்றும் எப்பேர்பட்ட சமஸ்த பிதாப்பதிகளும் குடுத்தோம்.*

தீண்டா அடிமை ஆபரணம் எதுவும் அணியக்கூடாது, செருப்பு அணியக்கூடாது, வீட்டில் உலோகப் பாத்திரம் இருக்கக் கூடாது, வீட்டுக்குக் காறை பூச்சுகூடாது, மண் பாத்திரம் மட்டும் இருக்க

வேண்டும். நன்மை தீமைக்கு வாத்தியம் வாசிக்க்கூடாது, பெண்கள் மார்பை மறைக்க தாவணி ரவிக்கை போடக்கூடாது, ஆண்கள் இடுப்பிற்கு மேலும் முழங்காலுக்குக் கீழும் ஆடை அணியக்கூடாது. குடை பிடிக்கக் கூடாது.

**பறையர் குடும்ப விலை 80 பொன்**

*1. நள வருடம் தை மாதம் 24 தேதி குருவாரமும் பூறுவது பஷ்சமும் ரேபதி நஷ்செத்திரமும் சஷ்ட்டியும் கூடின சுபதினத்தில் சீகாழிச் சீமை குண்ணமருதூர் மாகாணம் கஞ்சா நகரம்*

*2. வடபாதியிலிருக்கும் அப்பாச்சி முதலியார் அவர்களுக்கு தீவிச் சீமை அட்டாங்கிசத்திலிருக்கும் சுப்பா படையாட்சி பறையன் பேரில் அடுமை சாதனம் பண்ணிக் குடுத்தபடி*

*3. யென்னுதான் பறையன் மகன் ராமன் அவன் பெண்டாட்டி முக்கட்டை அவன் பிள்ளை இவாளை அடங்கலும் கொள்வார் உளரோ கொள்வார் உளரோ என்று நான் முற்கூற*

*4. கொள்வோம் கொள்வோம் யென்று பிற்கூறி மத்திஷத்தாள் கூடி நிஷ்சயம் பண்ணினது கோபால சக்கிரம் சுழி பொன் 80 இந்த யென்பது பொன்னும் அங்கடிப் பார்வையாக*

*5. ஒரு கிழிப்பிட வடபாதி உதையப் பையன் ரெங்கய்யனவர்கள் முகாந்திரம் னான் பத்திக்கொண்ட படியினாலே புத்திர பவுத்திர பாரம்பர்யம் சந்திராதித்தாள் உள்ளவரை*

*6. கல்லும் காவேரியும் பில்லும் பூமியும் உள்ள வரைக்கும் ஆண்டு அனுபவிச்சுக் கொண்டு யெப்பேற்ப்பட்ட தொழிலும் செய்விச்சுக் கொண்டு சுகத்திலே ஆண்டு அனுபவிச்சுக் கொ(ள்)*

*7. வீராகவும்*

**கிரயம் செய்யப்பட்ட பள்ளர் குடும்பம்**

*பள்ளுப் புரியல் சீட்டு (30.4.1852)*

*ஸ்ரீராமஜயம்*

*பரிதாபி வருஷம் சித்திரை மாதம் 20 தேதி கொண்டயம் பேட்டையில் இறுக்கும் பாபுராயர் பேறன் இராமசந்திர ராயறுக்கு ஆங்கரையில் இறுக்கும் கோதண்டறாம புத்ரன் யெக்கறாமயன் பள்ளு சுத்த கிரய சாசனம் மண்ணிக் குடுத்ததர்க்கு பள்ளு புரியல் சீட்டு மாந்துறை (வுள்ளன்) பனையடியான் பள்ளு, சன்னாசி பள்ளு, மறுதாயி பள்ளு, பஞ்சன்பள்ளு, அநந்தன் பள்ளு, ஆக பள்ளு 5 யிந்த யிந்தபள்ளு அஞ்சும் அதை சேர்ந்த ஆண் அடுமை பெண் அடுமை குடும்ப சகிதம் (நமக்கு) சுத்த கிரய சாசனம் பண்ணிக்குடுத்தபடியினாலே மேற்படி பள்ளுக்கு புரியல் சீட்டு எழுதிக் குடுத்தோம் யெக்கறாமயன் சம்மதி சாட்சியள் அய்யாவய்யன் அறிவேன் ஆங்கரை முத்துறாமய்யன்*

*குமாறன் றாமயன் அறிவேன்*

**4 பறை அடிமைகள் விலை 14 பொன்**

*1. விளம்பி வருடம் ஆனி மாதம் 27 தேதி சனிக்கிழமை கொள்ளடத்துக்குத் தெற்குக் காவேரிக்கு வடக்கு உபைய காவேரி மத்தியில் திருப்பனைந்தாள்ச் சீமை சோழும் பேட்டை மாகாணம் ரெட்டி கடலங்ககுடியிலிருக்கும் காவெட்டி வெங்குள*

*2. சீமை குண்ணமருதூர் மாகாணம் மங்கைநல்லூரிலிருக்கும் சுப்ரமணிய முதலியார் அவர்களுக்கு அடுமை சாதன முறி கொடுத்தபடி யென்னுதான பறையன். சாம்பான் வெளிச்சான்*

*3. முத்தான் யிந்த மூணு ஆணும் வெளிச்சான் பெண்சாதி பார்வதியும் யிந்த னாலு செனத்தையும் மங்கை நல்லூரில் ஆவணக் களரி யேத்தி கொள்வாருளரோ கொள்வாருளரோ (வென்று)...*

*4. பிற்கூறி கொள்வோ மென்று யெம்மிலுமிசைந்து யெதிர் மொழி மொழிந்து னாலு மத்திஸ்தாள் முன்பாக விலை நிற்ணயம் பண்ணினது கோபால சக்கரம் குளிகை 14*

மேல்காட்டப்பட்ட ஆவணங்கள் மூலம் தமிழ்நாட்டில் அடிமை முறை இருந்தது தெரிகிறது. எல்லாச் சமூகத்திலும் அடிமை முறை இருந்தாலும் பறையர் பள்ளர் சமூகத்தினரே அதிகம் அடிமை ஆகியுள்ளனர். அடிமைத் தனத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்படுவதில்லை. ஆயுள் பரியந்தம் அடிமைகளே.

மேல் ஆதிக்கம் கொண்டோர் அடிமைகளை வைத்திருந்தனர். கோயில்களில் அடிமை ஏன் என்ற கேள்வி எழலாம் நெல்லைக் குத்திப் புடைத்து அரிசியாக்க, தண்ணீர், எரி கரும்பு (விறகு) கொண்டுவர, அலகிட்டு மெழுக, அடியார், பார்ப்பனர் உண்ணும் இடத்தைத் தூய்மை செய்ய, பிரகாரத் தூய்மை பேண, அமுதுபடி அரிசி போன்றவற்றை தூய்மையாக்க, நீர் தெளிக்க, பூப்பறிக்க, மாலை தொடுக்கக் கோயில் அடிமைகள் பணி செய்தனர். கொறுக்கை வீரட்டானேசுவரர் கோயிலில் 100 அடிமைகள் இருந்தனர்.

கோயில் அடிமைக்கு அடையாளமாக இலச்சினை பொறிக்கப்பட்டது. சிவன் கோயிலில் திரிசூலமும் விண்ணகரங்களில் சங்கு சக்கரமும் பொறிக்கப்பட்டுள்ளது. புதுகோட்டை மாவட்டம் ராங்கியம் கோயில் பெண் அடிமைக்கட்கு முலையில் இலச்சினை பொறிக்கப்பட்டது.

பொது அடிமை விற்பனையில் விலை பஞ்சாயத்தால் நிர்ணயிக்கப்பட்டது. சிலர் முன்னிலை வகித்தனர். விற்பவர் ‘‘ஒப்பு’’ அல்லது ‘‘சம்மதி’’ என்று எழுதினார். ‘‘அறிவேன்’’ என்று எழுதிச் சாட்சிக் கையொப்பமிட்டார். கையொழுத்துப் போடத் தெரியாதவர் ஒலையில் எழுத்தாணியால் கீறினர். ‘‘இந்தக் கீறல்

நாகு கையொழுத்து'' என்று எழுதப்பட்டது.

ஓலையில் எழுத உரிய கூலி தரவேண்டும் (ஊசிக் கரணம்) ஆவணத்தில் ஓலைக் குற்றம், எழுத்துக் குற்றம், எழுத்தாணிக் குற்றம், கவில் குற்றும், வாசகப்பிழை, வரி மாறாட்டம், பொருள் குற்றம், வரி நுழைந்து எழுதுதல், புழுக்கடி, உளிதாக்கு, நெரிவுமுறிவு, போன்றவை எக்குற்றமும் அல்லவாகவும்.

ஆட்சியில் பாலாறும், தேனாறும் ஓடியதாகப் புகழப்படும் பிற்காலச் சோழர் ஆட்சியில்தான் அடிமை வணிகம் கொடிகட்டிப் பறந்தது. 19-ஆம் நூற்றாண்டு இறுதிவரை நீடித்தது.

தமிழ்நாட்டு வரலாற்று நூல்களில் அடிமை முறை அதிகம் பேசப்படுவதில்லை. சிலர் நாட்டு வரலாற்றில் நல்லதுதான் எழுதப்படவேண்டும் என்றனர். கே.கே.பிள்ளை போன்ற சிலர் தமிழ்நாட்டில் அடிமைமுறை இல்லை என்றனர்.

வரலாற்றில் அடிமைமுறை அவசியம் இடம்பெற வேண்டும். அப்பொழுதுதான் வரலாறு முழுமைபெறும். அடிமை வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். இது தொடர்பான ஆய்வு பெருக வேண்டும்.

**கொங்கு ஆவணங்களில்**

❑ கொங்கு குடிகளில் ''குறவர், கூத்தாடி, சக்கிலியர் (:ஒட்டியச் சக்கிலியர், மதுரைச் சக்கிலியர் அனுப்பச் சக்கிலியர் கானக் காட்டுச் சக்கிலியர்) தொட்டியர், தொம்பர், பறையர், புலவர், மறவர், மாணிக்கி, வலையர் வேட்கோவர், ஆண்டிகளில் குறுப்பாண்டி'' ஆகியோருக்கு வரி இல்லை. ஆனால் இவர்கள் ஏவின ஊழியம் செய்ய வேண்டும்.

❑ தலைய நாட்டில் கொங்கு வேளாளர் கண்ணகுலத்தார் பள்ளி இடையே ஏற்பட்ட பூசலில் கன்னிவாடியைவிட்டு கண்ணகுலத்தார் அனைவரும் வெளியேறுகின்றனர். மணப்பெண்ணுக்குப் பதிலாக கருநாய் காட்டப்படுகிறது. வேளாளரின் எல்லா முயற்சிகட்கும் மூவர் துணையாக உள்ளனர். நல்லராண்டி, நாவித நல்லான், பறைக்காளி ஆகிய மூவரும் பல சிறப்புப் பெறுகின்றனர்.

❑ தென்னிலையில் சக்கிலியத் திம்மன் பாப்பான் நீலனுக்கு 500 பொன் கொடுக்க ஏற்பாடானது. பாப்பான் நீலன் மீது நம்பிக்கை இல்லை என்று சக்கிலியத் திம்மன் கூறவே திம்மனுக்கு தனங்காடு எழுதிக் கொடுக்கப்படுகிறது.

❑ கொங்கு நாட்டில் இடங்கைக்குழுவினர் செங்குந்தர், படையாச்சி, பஞ்ச சம்மாளத்தார், பள்ளர், மாதாரிகள் ஆகியோர்

❑ வராக்க நாட்டு ஆவுலப்பம்மப்பட்டி கரிய காளி அம்மன் தேர் ஓட்ட வேண்டும் என்றால் ஒரு நரபலி கொடுக்க வேண்டும் என்ற நிலை

ஏற்பட்டது. கவுண்டர்கள் ஆடு, மாடு, கோழி, பலி கொடுக்கலாம் மனிதப் பலி எப்படிக் கொடுப்பது, தேரை நிறுத்தலாமா என்று ஊரில் உள்ள இரண்டு பறையர் குடும்பத்தில் யோசனை கேட்டனர் பறையர் குடும்பத்தில் ஒருவர் வேளாண்மைக்காக நரபலி கொடுக்க என்று முடிவு செய்யப்படுகிறது. பறைக் குடும்பத்தினர் இருவரில் சின்னான், குடும்பத்தினருடன் ஊரை விட்டு ஓடிவிட்டான்.

உறுமப்பறையன் மனைவி தேரோட்ட நரபலி கொடுக்கப்படுகிறாள்.

- **கட்டுரையாளர் - கல்வெட்டு ஆய்வறிஞர்**

❖❖❖

# புதிய வரலாற்றைப் படைக்கச் சாதி என்னும் பழைய கழிவுகளை அழிப்போம்!

பொழிலன்

எவர் ஒருவரையும் சாதியால் அடையாளப்படுத்திப் பார்க்கிற பார்வை மிகவும் இழிவானது. வருண ஆசாரப்படி பாகுபடுத்துகிற ஆரிய வைதீக முறையைக் கண்டிக்கிற பலரும்கூடச் சாதியாய்ப் பாகுபடுத்தி அடையாளப்படுத்துகிற இழிவான பார்வையைக் கண்டிப்பதில்லை.

நிகழ்காலத்தவர்களை மட்டுமின்றி பழந்தமிழ் அறிஞர்களையும் ஆளுமையர்களையும் நிகழ்கால வாழ் முறையில் இருந்து விளங்கிக் கொண்டு அவர்கள் எல்லாம் இன்னயின்ன சாதியினர் என்பதாக அடையாளப்படுத்துவது மிகவும் இழிவான நடைமுறையுடையது..

பழந்தமிழ் நாட்டில் தொழில்வழி வேறுபாடுகளைக் கொண்டிருந்த குமுக வாழ்நிலையினர், வந்தேறிய ஆரியப் பார்ப்பனிய வைதீக முறையால் வருணங்களாக அடையாளப்படுத்தப்பட்டதையும். பின்னர் பல்லவர் காலம் தொடங்கிப் பிற்காலச் சோழர்கள், விசயநகர ஆட்சி, நாயக்கர் ஆட்சி, மராட்டியர் ஆட்சி எனத் தொடர்ந்த ஆட்சிக் காலங்களைத் தன்வயப்படுத்திக் கொண்ட ஆரியப் பார்ப்பனியம் குமுகத்திற்குள் ஊடுருவித் தொழில்வழிக் குல வேறுபாடுகளையெல்லாம் வருண சாதி அமைப்புகளாக மாற்றி இறுக்கப்படுத்தி வந்ததை வரலாறு நெடுகபார்க்கலாம். தமிழ் மொழி, பிராகிருத சமசுக்கிருத மொழிக் கலப்புகளால் சிதைக்கப்பட்டு மணிப்பிரவாள நடை உருவாக்கப்பட்டதையும் அறியலாம்.

சாதி சமயப் பிளவுகளை மறுத்துப் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பதான கருத்துகளும், பிறமொழிக் கலப்பு மறுப்புகளும் அப்போதிருந்தே திருவள்ளுவர் தொடங்கி சித்தர்கள் எனப் பலரின் செயற்பாடுகள் வழி நடந்து கொண்டே இருந்தன.

இடையில் நடந்த இசுலாமியர் படையெடுப்பு, தொடக்கத்தில் மிகப்பெரும் அழிவை ஏற்படுத்தியிருந்தது. சில பகுதிகளில் வலிய மதமாற்றங்களையும் செய்தது. வணிகத்திற்காக நுழைந்த ஆங்கிலேயர் ஊடுருவல் படிப்படியாக அதிகாரங்களைத் தங்களுக்காக ஆக்கிக் கொண்டது. அதேபோது இங்கு நிலவிய சாதிய வருண கொடுமைகளால் புறந்தள்ளப்பட்டு உரிமைகள் மறுக்கப்பட்டிருந்த மக்களுக்குப் பல சலுகைகள் செய்ததோடு

மத மாற்றங்களையும் அவை பரவலாகச் செய்யத் தொடங்கின.

இதைக் கண்டு ஆரியப் பார்ப்பனியம் அலறத் தொடங்கியது.. எனவே ஆரிய வைதீக முறையைக் காப்பாற்றிக்கொள்வதற்காக அதை உள்ளீடாகக் கொண்ட சமயச் சீர்திருத்தக் கருத்தாடல்கள் கொண்ட இயக்கங்கள் வழி பரப்பத் தொடங்கின.

பிரம்ம சமாஜம், பிரார்த்தன சமாஜம், ஆரிய சமாஜம் என்றெல்லாம் பல வடிவங்களில் சீர்திருத்தங்கள் என்கிற பெயரில் ஆரியக் கருத்தாடல்கள் ஒருங்கிணைக்கப்பட்டன..

ஆனால் அப்போதும் அதற்கு முன்பும் தமிழ்நாட்டில் தாயுமானவர், வள்ளலார், வைகுந்தர் உள்ளிட்டவர்கள் ஆரிய வருண சாதிக் கருத்தாடல்களை எதிர்த்த வகையிலேயே ஆங்கிலேய எதிர்ப்பை இயக்க வழி நடைமுறைப்படுத்தினர்.

ஆங்கிலேய ஆட்சியின்போது உரிமைக் கோரிக்கைகளின்வழி கிடைத்த இட ஒதுக்கீடு, குடி மதிப்பீட்டுக் கணக்குத் திட்டங்களால் தங்கள் சாதிகளை அடையாளப்படுத்திக் கொள்ளவும் நிலைப்படுத்திக் கொள்ளவும் சாதிகளின் அணி சேர்க்கைகள் விரிவாக நடந்தன.

பல சாதிகள் சங்கங்களைத் தோற்றுவித்துக் கொண்டன. ஆரியச்சமசுக்கிருதச் சார்புபடுத்தியே சில சாதியினர் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர். சத்திரியர்கள் என்றும், பரத்வாஜர் என்றும், பர்வதராஜர் என்றும், விஷ்வ பிராமணர்கள் என்றும், தேவேந்திரர்கள் என்றும் பல சாதிகளின் அடையாளங்களை மாற்றுவதற்கான முயற்சிகள் நடந்தன.

அந்த இடைக்காலங்களில், அது காலம் வரை தமிழ்நாட்டில் இருந்த பல தமிழ்க் குலங்கள் தங்களின் பெயர்களையும் அடையாளங்களையும் ஆரிய வயப்படுத்திக் கொள்ளத் தொடங்கினர். குல வழிபாட்டினர் பலரின் அடையாளப் பெயர்கள் ஆரிய வயப்படுத்தப்பட்டுச் சந்திரகுலம், சூரிய குலம், லக்ஷ்மண குலம், இராமர் குலம், பஞ்சபாண்டவர் குலம் என்பதாகத் தமிழ்க் குமுகக் குல வழி அடையாளங்களும் திரிக்கப்பட்டன.

மொழி வழியாகவும் குல வழியாகவும் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டிருந்த மக்கள் சாதி வழியும் ஆரியச் சார்பு சமய வழியும் அடையாளப்படுத்திக் கொள்கிற அடிமைப் போக்குகள் நடக்கத் தொடங்கின.

இந்நிலையில் அக்காலத்தும், அதற்கு முன்பும் தீண்டப்படாத மக்கள் பாதகர், புலையர், சண்டாளர், பனையேறி என்று பல வகைகளில் இழிவாகப் பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டனர்.

அந்த நிலையில் தீண்டப்படாத சாதியர்களாக

ஒதுக்கப்பட்டிருந்தவர்கள் தாங்கள் சார்ந்த சாதிகளின் பெயர்களை வெளிச்சொல்வதற்கும் தங்கள் பாதுகாப்புக்காகத் தங்களை அணி சேர்த்துக் கொள்ளவும் நெருக்கடிகள் இருந்தன. அதன் காரணமாகச் சிலர் தங்களின் பெயர்களிலேயே பிள்ளை என்றும், பிற இடைநிலைச் சாதிப் பெயர்களை இணைத்தும் சூட்டிக்கொண்டனர்.

தங்களின் சாதிப் பெயர்களை வெளிச்சொல்வதில் இருந்த நெருக்கடியின் காரணமான அச்சத்தைப் போக்கும் வகையிலும் இந்த மண்ணின் தொல் குடி மக்களாகத் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் நிலையிலும் தமிழன் என்றும், தொல் தமிழன் என்றும், திராவிடன் என்றும், அசல் திராவிடன் என்றும், ஆதி திராவிடன் என்றும் அடையாளப்படுத்திக் கொள்ளவேண்டும் என்றதோடு அரசியல் பதிவிலும் அவ்வாறு இருக்க அயோத்திதாசப் பண்டிதர் தொடங்கி எம் சி இராசா வரை மிகப் பெரும் அளவில் போராடினர்.

அதையே அன்றைக்குத் தலைவர்கள் அறிஞர்கள் பலர் முன்மொழிந்து இயக்கப்படுத்தி இயங்கினர்.

அறிஞர் அயோத்திதாசப் பண்டிதர் அவர்கள் 1800-களின் கடைசிப் பத்தாண்டுகளில் குடி மதிப்பீட்டுக் கணக்கில் தமிழன் என்று பதிவு செய்ய வலியுறுத்தியதும், தமிழன் என்றும், ஒரு பைசா தமிழன் என்றும் இதழ்கள் நடத்தியதும், அசல் திராவிட மகா சபை என்றும் பின்னர் திராவிட மகாசன சபை என்றும் உருவாக்கி நடத்தியதும்,



சான் இரத்தினம் அவர்கள் திராவிடப் பாண்டியன் என இதழ் ஒன்றை நடத்தியதும், திராவிடர் கழகம் என 1890-களிலேயே இயக்கம் நடத்தியதும்.


திராவிட மித்திரன் என்றும், ஆன்றோர் மித்திரன் என்று முனிசாமிப் பண்டிதரும், பூலோக வியாசன் என்று முத்துவீர நாவலரும், இராசகோபால் அவர்கள் ஆதிதிராவிட மித்திரன் என்றெல்லாமும் இதழ்களை நடத்தியதோடு அதையே இலங்கை, மலையகம் தென் ஆப்பிரிக்கா உள்ளிட்ட பல இடங்களிலும் விரிவுபடுத்தி இயக்கப்படுத்தியதும். கவனிக்கத்தக்க விரிவான

செய்திகள்.

திராவிடம் என்பதையும், திராவிடர் என்பதையும், ஆதிதிராவிடர் என்பதையும் நீதிக்கட்சியும் பெரியார் அவர்களுமே வலிய மாற்றினார்கள் என்பதாக அண்மைக் காலங்களில் தங்கள் அரசியல் நலனுக்காகப் பேசி வருகிறவர்கள் மேற்படி அடித்தட்டு மக்களின் வாழ்வுரிமைகளுக்காக நடந்த முயற்சிகளில் திராவிடர் என முன்னெடுக்கப்பட்ட அரசியல் அழுத்தங்களை உணர வேண்டும்.

இதற்கிடையில் நேரடியாகத் தங்களின் சாதிப் பெயரான பறையர் என்பதையே அடையாளப்படுத்த வேண்டும் என வலியுறுத்திப் பறையன் என்கிற பெயரிலேயே இதழை நடத்தியதோடு, இயக்கப்படுத்திச் செயல்பட்ட இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் முயற்சிகள் மிக விரிவானவை. அடித்தட்டு மக்களுக்குக் கல்வியில் வேலை வாய்ப்புகளில் இட ஒதுக்கீடு பெறுவதற்காக அவர் போராடியதுடன், வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டு வலியுறுத்தியதும், காந்திக்குத் தமிழ் படிப்பித்ததும், தென் ஆப்பிரிக்காவிற்குக் கொத்தடிமைகளாக அழைத்துச் செல்லப்பட்டிருந்த எளிய தமிழ் மக்களுக்கு ஆதரவாக நின்று இயங்கியதும் அறியப்பட வேண்டிய செய்திகள்.

1886 -இலேயே தமிழ்ப் பழங்குடி மக்கள் இந்துக்கள் அல்லர் என அறிக்கை விட்டுப் பரப்பல் செய்தார் அயோத்திதாசப் பண்டிதர். அது தொடர்பாக அறிஞர்கள் பலருடன் தருக்கமிட்டார்.



பழந்தமிழர் நாடகக் கழகம் அமைத்துப் பெரியசாமிப் புலவர் அவர்கள் எளிய மக்களை அணி சேர்த்தார்.

எளிய மக்களை ஈடேற்றுவதற்காக எண்ணற்ற வகையில் துணை நின்றவரான அன்றைய நயனகரும் (நீதிபதி) சட்ட மன்ற மேலவை உறுப்பினருமான மதுரை பிள்ளையும், பின்னர் அவர்களின் மகன் ம. பழனிச்சாமி அவர்கள் திராவிட வாலிபர் சங்கம் எனத் தொடங்கி மிகப் பெரும் அளவில் இளைஞர்களை ஒருங்கிணைத்துச் செயல்பட்டார்.. இவ்வகையில் சென்னை தர்மலிங்கம், சிதம்பரம் சகசானந்தர், வாசுதேவர், எம் சி மதுரை பிள்ளை, முனிசாமி, வேலாயுதபாணி, பரமேசுவரன் எனப்பலர் சட்ட மன்ற உறுப்பினராக, சட்ட மன்ற மேலவை உறுப்பினராக இருந்து அடித்தட்டு மக்களின் முன்னேற்றத்திற்கு எண்ணற்ற வகையில் பாடாற்றவும், தேசிகஆனந்தா, கொங்கு

பகுதியினரான வீரையன், எல் சி குருசாமி போன்ற பலரும் பெருமளவில் தொண்டாற்றவும் செய்தனர். அவ்வகையில் வரலாற்றின் நிகழ்வுகளில் அறியத்தக்க செய்திகள் பல உள்ளன.

தாழ்த்தப்பட்டவர்களை அரிசன் எனப் பதிய வேண்டும் எனக் காந்தி குறிப்பிடுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே ஆதிதிராவிடன் எனப் பதிய வேண்டிப் போராடிப் பதிவதற்கான ஏற்பாடுகளை பி. வி. சுப்பிரமணியம், ஓங்காரம், முக்குந்து, சண்முகம் திருப்புகழ் அம்மாள், முனிசாமி , வாசுதேவர், இராசரத்தினம், வேணுகோபால் எனச் செயற்பாட்டாளர்கள் பலரும் பெரும் முயற்சி எடுத்து ஆங்கிலேய ஆட்சியரிடம் வலியுறுத்தி எம் சி ராசா அவர்களை முன்னிறுத்தி 1922 சனவரி 22 ஆம் நாள் சென்னைச் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது என்பதும்,

திராவிட மகாசன சபையை வலுப்படுத்தி இயக்கப்படுத்தியவர்களுள் எம் சி ராசாவின் தந்தை எம். சின்னத் தம்பிக்கும் பெரும்பங்கு உண்டென்பதும், கோலார் தங்க வயலில் கோ. அப்பாத்துரை அவர்கள் அடித்தட்டு மக்களைப் பெருமளவில் திரட்டித் தமிழ் உணர்வையும் சாதி ஒழிப்பு உணர்வையும் ஊட்டி வளர்த்து இயக்கப்படுத்தியதும், அவரும் தமிழன் என இதழ் நடத்தியதும் அறியத் தக்க செய்திகளாக உள்ளன.

1916 இல் தொடங்கப்பட்ட தென்னிந்திய நல உரிமைச் சங்கம் நீதிக் கட்சி என இயங்கியதன் பின்பும் தந்தை பெரியார் அவர்களாலும்தாம் திராவிடர் எனும் கருத்துப் பரப்பப்பட்டதாக அண்மைக் காலங்களில் பேசப்பட்டு வரும் செய்திகளுக்கு அயோத்திதாசர் தொடங்கி எண்ணற்ற அடித்தட்டு மக்கள் தலைவர்கள் முன்மொழிந்து இயங்கிய திராவிடர் ஆதிதிராவிடர் எனும் சொற்களின் அரசியல் ஆழங்கள் விளங்கிக் கொள்ளப்பட வேண்டும்.

தங்களை அடையாளப்படுத்திக் கொள்வதில் கூட அடித்தட்டு மக்களுக்கான செயல்பாட்டுக்குரிய தலைவர்கள் அறிஞர்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள் சொல்லி மாளாதவை.

அவ்வகையில் நூற்றுக்கும் மேற்பட்ட அக்காலத்தின் இளைஞர்களும் செயல்பாட்டாளர்களும் அறியத்தக்கவர்கள்.. அவர்களின் செயல்பாடுகளின் ஆழங்கள் குமுகத்தின் விடுதலை அரசியலோடு தொடர்புடையவை.

தமிழர்கள் என்று பதிந்து கொள்ள வேண்டும் என அயோத்திதாசப் பண்டிதர் அறிவுறுத்தியதும், அசல் திராவிடர், ஆதிதிராவிடர் என்றெல்லாம் அடையாளப்படுத்துகிற ஒரு பெரும் முயற்சி எம் சி ராசா காலம் வரை தொடர்ந்து நடைபெற்று வந்ததுமான அக்காலத்தில்தான் சென்னைப் பல்கலைக்கழகத்தின் முயற்சியில்

தொகுக்கப்பட்டிருந்த பேரகராதியில் தமிழர்கள் என்போர் பறையன் ஒழிந்த சாதியினர் என்பதான பொருள் எழுதப்பட்டிருந்ததும் அதைக் கண்டிக்கவோ, திருத்தம் செய்வதற்கோ வேறு எவரும் முன்வராத ஓர் அவலச்சூழல் அக்காலத்தில் இருந்ததும் அறியப்பட வேண்டும்.

அதை முதன் முதலில் முழுமையாக மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களே சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதியின் சீர்கேடுகள் எனும் தலைப்பில் நூலாக எழுதி 1961 இல் வெளியிட்டார் என்பதும், 1934 இலிலேயே அந்த அகராதித் துறையில் இணைந்து பணியாற்றுவதற்கு முயன்றிருந்த போதும் அவரைப் புறக்கணித்த நிலையையும், அதன் பிறகு அந்தப் பேரகராதி வெளிவந்ததன் பின் 1955 இல் அந்தப் பேரகராதியில் உள்ள பிழைகளையும் குறைபாடுகளையும் விரிவாகத் தொகுத்து எழுதி அனுப்பி இருந்த போதும் அவையெல்லாம் பொருட்படுத்தப்படாதிருந்த நிலையையும் பாவாணர் அவர்களே விரிவாகத் தம் நூலில் பதிவு செய்திருக்கிறார்.

திருப்பனந்தாள் மடத்தின் தலைவராகத் தவத்திரு சுவாமிநாதத் தம்பிரான் இருந்த காலத்தில் பாவாணர் அவர்கள் நூல்கள் வெளி யிடுவதற்கான துணை வேண்டிச் சென்றபோது பாவாணர் அவர்கள் அங்கு புறக்கணிப்பாக நடத்தப்பட்ட முறையையும், உ வே சாமிநாதய்யர் அவர்கள் பாவாணரை ஏற்கனவே தெரிந்திருந்தும் அவரின் சொல்லாய்வுகள் குறித்தெல்லாம் அறிந்திருந்தபோதும் தம்பிரான் துணை செய்துவிடக் கூடாது என்பதற்காகத் தனக்குப் பாவாணரைத் தெரியாது எனப் பாவாணர் முன்னிற்கவே மறுத்துவிட்ட நிகழ்வைப் பாவாணரே அவரின் தமிழர் மதம் நூலில் பதிவு செய்திருக்கிறார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் அவர் சமசுக்கிருத 'ஆதிக்க'த்திற்கு எதிராகப் போராடியதும் அதனால் அவருடைய கருத்துகள் புறக்கணிக்கப்பட்டதும் அதை ஏற்க இயலாது அப் பணியைத் துறந்து அவர் வெளியேறியதும் வரலாற்று நிகழ்வுகள்.

அவரை முழுக்க முழுக்கப் புரந்ததும், அவர் கருத்துகளை, ஆய்வுகளை வெளிக் கொண்டு வந்து இயக்கப்படுத்திப் பரப்புவதற்கு அடித்தளமாக இருந்தது தென்மொழி வழியான பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பேருழைப்பே ஆகும். அவர்களுக்கிடை யிலான கெழுதகைமையைக் கெடுத்து முரண்பட வைக்க நடந்த முயற்சிகள் பல. அவற்றுக்குப் பின்புலமாக பல நோக்கங்கள் இருந்தன என்பதும் அறியப்பட வேண்டிய செய்திகள்.

1967 திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகும் கூட அதன் தொடக்கத்தில் பாவாணருக்கு விடிவு ஏதும் கிடைத்துவிடவில்லை..

இன்னும் சொன்னால் 1968-இல் சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டிற்குக்கூடப் பாவாணர் அழைக்கப்படவில்லை என்பதோடு அவரின் அடிப்படை கருத்துகளான. உலகின் மூத்த மொழி தமிழ்தான் என்பதும், தமிழே திராவிடத்திற்குத் தாய் ஆரியத்திற்கு மூலம் என்பதும், தமிழன் பிறந்தகம் குமரிக்கண்டமே என்பதும் ஏற்கப்படாமல் புறக்கணிக்கப்படவே செய்யப்பட்டன. என்ற நிலைகளோடு அவற்றுக்கு நேர் எதிரான கருத்துடைய வையாபுரியார் கருத்துடையோரும் தமிழ் ஆய்வறிவற்ற ஆரவாரக்காரர்களுமே சிறப்போடு அழைக்கப்பட்டிருந்தனர் என்பனவும் கவனிக்கப்பட வேண்டிய செய்திகள்.

அதன் காரணத்தால் தான் பாவாணர் அவர்களைத் தலைவராகவும் பெருஞ்சித்திரனார் அவர்களைப் பொதுச் செயலாளராகவும் கொண்டு தொடங்கப்பட்டது உலகத் தமிழ் கழகம்.

அது தொடங்கப்பட்ட ஓராண்டுக்குள்ளாகவே 300 கிளைகளுக்கு மேல் அமைக்கப்பட்டு விரிவுபடச் செயல்படத் தொடங்கிய பின்னரே பாவாணர் அரசின் கவனத்திற்கு உள்ளானதும், அவருக்கு ஏதும் துணை செய்தாக வேண்டும் எனும் நெருக்கடி அரசினரிடையே உருவானதும் அறியப்பட வேண்டிய செய்திகள்.

அவ்வகையில் பாவாணருக்கு ஏற்பட்ட இடையூறுகள் புறக்கணிப்புகள் எண்ணற்றவைப் போலவே பாவலரேறு பெருஞ் சித்திரனாருக்கு ஏற்பட்டவையும் எண்ணற்றவையாக இருந்தன என்பதும் அறியப்பட வேண்டிய செய்திகள்.

சாதியக் கொடுமைகளுக்கு எதிராக.. ஒடுக்கப்பட்ட மக்களின் மீதான பார்ப்பனிய வன்மங்களுக்கு எதிராகத் தந்தை பெரியாரின் கருத்துகளும் களச் செயல்பாடுகளும் மிக விரிவான நிலையில் அறியப்பட வேண்டுவன. தொடர்ந்து பெரியாரிய நெறியில் செயல்பட்ட ஐயா ஆனைமுத்து, வழக்கறிஞர் இராமதாசு, ஆசிரியர் கி. வீரமணி, கோவை கு. இராமகிருட்டிணன், கொளத்தூர் மணி உள்ளிட்ட எண்ணற்றோரின் தலைமைக்குரிய பணிகள் முகாமையாக அறியப்பட வேண்டியவை.



இவர்களன்றி தமிழ் மொழி இனம் சார்ந்த குமுகத்துறைகளில் மட்டும் அல்லாது சிவராசு, மீனாம்பாள் சிவராசு, பெரியவர் சுந்தரராசன், ஆர்

கே சுவாமிநாதன், பாடாலூர் சொற்கோ, அன்பு பொன்னோவியம், இளையபெருமாள், டி எம் மணி, தேவாசீர்வாதம், மருத்துவர் சேப்பன், பேராசிரியர் தங்கராசு, சமத்துவ சங்கு ஆசிரியர் கிருட்டிணசாமி, இரும்பொறை குணசேகரன், ஜான் தேவாரம், நயனகர் (நீதிபதி) இராமகிருட்டிணன், சக்திதாசன், பொன் நாகப்பன், காட்டூர் சிவலிங்கம், கோ. தங்கவேலன், எர்ணாவூர் தமிழ்ச்செல்வம், தீனன், சேத்துப்பட்டு எத்திராசு, ஆசிரியர் பிரபாகரன் போன்று பிற அறிவியல் மருத்துவ இயல் உள்ளிட்ட அறிவு சார்ந்த துறைகளிலும், குமுகத்துறைகளிலும் ஈடுபட்ட பன்னூற்றுக்கணக்கான அடித்தட்டு மக்கள் தலைவர்கள் முன்னெடுத்து நடத்திச் செயற்பட்ட நிகழ்வுகள் மிக மிக அதிகமானவை.. அவையெல்லாம் அறியப்பட வேண்டியவை.



Com. P Sreenivasa Rao
10 April 1906 - 29 Sept 1961

அவ்வகையில் அடித்தட்டுச் சாதிகளின் மீதான அவல நிலைகளை மட்டுமன்றி சாதி அமைப்புகளையே ஒழித்திட வேண்டும் எனும் நோக்கில் பார்ப்பனியத்தைக் கடுமையாக எதிர்த்ததோடு அடித்தட்டு மக்களுக்காக முழுமையாக நின்ற இந்தியப் பொதுவுடைமைக் கட்சியினர், மா இலெ கட்சியினர் எனப் பலரும் அவ்வகையில் எதிர்கொண்ட நெருக்கடிகளும் செல்பாடுகளும் பல.

சீனிவாச(ராவ்) தொடங்கி களப்பால் குப்பு, இரணியன் என எண்ணற்ற பலரின் செயற்பாடுகளும், பின்னர் தீவிரச் செயல்பாடுகளில் செயல்பட்ட அப்பு, பாலன், கண்ணாமணி தொடங்கி எண்ணற்றோரின் செயல்பாடுகளும் அறியப்பட வேண்டும்.. மார்க்சிய அறிஞர்கள் கோ. கேசவன், அ. மார்க்சு, ப. கல்யாணி, கோச்சடை, இரவிக்குமார் எனத் தொடங்கி தோழர்கள் தியாகு, பெ. மணியரசன், இராசேந்திர சோழன், மீ. த. பாண்டியன், துரைசிங்கவேலு, பாலன் உள்ளிட்டோரும், சந்துரு, புனித பாண்டியன், கண. குறிஞ்சி உள்ளிட்ட பலரும் சாதி ஒழிப்புக்கு எதிராகத் தீண்டாமை ஒழிப்புக்கு எதிராக ஆற்றிய, ஆற்றிவரும் வினைகள் அறியப்படவேண்டுவன.

தமிழ்த் தேசிய அரசியலோடு சாதி ஒழிப்பை இணைத்து எடுக்க வலியுறுத்திய வகையில் வெங்காலூர் குணா, எசு என் நாகராசன், கருணா மனோகரன், குமரிமைந்தன், பேராசிரியர் நெடுஞ்செழியன் உள்ளிட்டோரின் சாதி ஒழிப்புக்கான கருத்துகளும் அறியப்பட வேண்டுவன.

தமிழ்த் தேசிய அரசியலோடு சாதி ஒழிப்பு திட்டத்தைத் தென்மொழி இயக்க வழிப் பாவலரேறு பெருஞ்சித்திரனார் முன்னெடுத்த நிகழ்வுகளும், புலவர் கலியபெருமாள் தோழர் தமிழரசன் உள்ளிட்டோரின் தமிழ்நாடு பொதுவுடைமைக் கட்சியின் வழி சாதி ஒழிப்பும் தமிழ்த் தேசியம் எனும் அரசியல் அறிக்கையாக முன்மொழியப்பட்டதோடு,

சாதிய ஆணவப் போக்குகளை எதிர்த்த களச் செயற்பாடுகளில் தன்னையே ஈகம் செய்த தோழர்களுடன் இணைந்து செயல்பட்ட நாற்றம்பள்ளி வேலு, அன்பழகன், பழனிவேலு, தருமலிங்கம், செகநாதன், தமிழ்ச்செல்வன், அன்பு, புதுவண்ணை தமிழரசன், மகிழரசன், வழக்கறிஞர் செம்மணி என எண்ணற்ற தோழர்களின் செயற்பாடுகளும் அறியப்பட வேண்டுவன.

அரியலூர் வை.பொன்னம்பலனார் மிகப்பெரும் நெருக்கடிகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் ஆளாக்கப்பட்டதும், சிங்காரவேலர், திரு வி க ஆகியோரின் அருஞ்செயல்களும் வரலாற்றுப் பதிவுக்குரியன. 1921 இல் நடைபெற்ற பி அண்ட் சி கலவரத்தில் தூண்டப்பட்டிருந்த சாதி மோதல் துப்பாக்கிச் சூடு வரை சென்று கடைசியாகச் சுடப்பட்டு இறந்த எட்டு அடித்தட்டு மக்களின் இழப்பைப் பொறுப்பெடுத்துத் தாங்களே அடக்கம் செய்ததோடு தொழிலாளர் வகுப்பிற்கே பெரும் தூணாய் நின்ற அவர்களின் செயற்பாடுகள் வரலாற்றுப் புகழுடையவை.. அதேபோல் குத்தூசி குருசாமியார், நெ. து. சுந்தரவடிவேலு, அறிவு வழி பஞ்சாட்சரம், எக்சரே கருணாகரன் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான அறிவர்களின் செயற்பாட்டாளர்களின் முனைப்புகளும் வாழ்க்கையில் ஏற்பட்ட நெருக்கடிகளும் அறியப்பட வேண்டியவை.

அம்பேத்கரின் நூற்றாண்டுக் காலத்தை ஒட்டித் தமிழ்நாட்டளவில் ஏற்பட்ட விழிப்புணர்வும் எழுச்சியும் எண்ணற்றோரை இயக்கவழிப்படுத்திப் பார்ப்பனியத்திற்கு எதிராக சாதியத்திற்கு எதிராக மிக கடுமையான வகையில் செயல்பட வைத்தன.

பொதுவுடைமைக் கட்சிகளில் இருந்தும்.. திமுக உள்ளிட்ட தேர்தல் கட்சிகளில் இருந்தும் பலர் வெளியேறி சாதி ஒழிப்புக்காகத் தாழ்த்தப்பட்டோர் உரிமைகளுக்காக மிக விரிவாகப் போராடினர். நூற்றுக்கணக்கான இயக்கங்கள் தோன்றின.. தமிழகத் தாழ்த்தப்பட்டோர் விடுதலை முன்னணி, சாதி ஒழிப்பு ஐக்கிய முன்னணி போன்ற பல முன்னணிகள் கட்டப்பட்டன.

அதற்கு முன் இருந்த காலங்களை விட இக்காலம் மிக எழுச்சியான விழிப்புணர்வுள்ள காலமாகும். அக்காலங்களில் அடித்தட்டு மக்களின் விடுதலைக்காகச் செயற்பட்டுக் கொண்டிருந்த தோழர்கள். அரங்க குணசேகரன், சந்திரபோசு,

திருமாவளவன், பொழிலன், செல்வமணியன், பூவை மூர்த்தி, தலித் எழில்மலை, அம்பேத்கர் பிரியன், அதியமான், வினோத், எசு டி கல்யாணசுந்தரம், திருவள்ளுவன், உஞ்சை அரசன், இலெனின் சுப்பையா, வழக்கறிஞர் ப.பா.மோகன், வழக்கறிஞர் பொ.இரத்தினம், வழக்கறிஞர் இராசேந்திரன், தெய்வமணி, வழக்கறிஞர் பாவேந்தன், நிலவன், நிலவழகன், கோ. சுகுமாரன் , காஞ்சி அமுதன் எனத் தொடங்கி அண்மை காலங்களில் குடந்தை அரசன், நாகை திருவள்ளுவன், புரட்சிமணி, திருமுருகன் காந்தி என நூற்றுக்கணக்கான தோழர்கள் தலைமை எடுத்து அமைப்புகளைக் கட்டி, கூட்டமைப்புகளாக நின்று மிக விரிவாக செயல்பட்ட செயல்பாடுகள் வரலாற்றுப் பதிவுக்குரியவை.. அவ்வியக்கங்களுள் பல அண்மைப் பத்தாண்டுகளில் தேர்தல் பாதைகளுக்குள் நுழைந்து ஆளுங்கட்சிக்கோ எதிர்க்கட்சிக்கோ ஆதரவாக இருந்திடும் வகையில் சாதி ஒழிப்பு அரசியல் செயல்பாடுகளையும் வலியுறுத்திச் செயல்பட்டு வருகின்றன.

மேற்குறிப்பிட்ட பெயர் பட்டியல்களுள் மேலும் இடம்பெற வேண்டியவர்கள் பன்னூற்றுக் கணக்கினர் உண்டு. அவர்களின் பெயர்கள் செயல்பாடுகள் விரிவாக அறியப்பட வேண்டியவையே.

இவ்வகையில் மேலே குறிக்கப்பட்டுள்ளவர்களோடு சாதி ஒழிப்புக்கான போராட்டக் களத்தில் செயல்பட்ட, செயல்பட்டு வருகிற அனைவரும் ஒவ்வொரு வகையில் ஒவ்வொரு கோணங்களில் ஒவ்வொரு வகை அரசியல் நிலைப்பாட்டில் செயல்பட்டவர்கள், செயல்பட்டு வருகிறவர்கள், அச் செயல்பாடுகளில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கலாம்.. உடன்பாடும் முரண்பாடும் இருக்கலாம்.. ஆனால் சாதி அமைப்பு அப்படியே இருக்க வேண்டும் என்கிற நோக்கமுடையவையாக அவர்களின் செயல்பாடுகள் இருந்திடவில்லை. சாதியை ஒழிப்பதற்கான ஆழ்ந்த விரிந்த குமுக பகுப்பாய்வு தேவை. அதை நோக்கிய நிலைகளில் ஒட்டு மொத்த குமுக மாற்றத்தை, அரசியல் பொருளியல் மாற்றத்தை இலக்காகக் கொண்டு அறிவியல் கண்ணோட்டமுடைய இயங்கியல் தன்மையில் அனைவரின் செயற்பாடுகளையும் மதிப்பிட்டு ஏற்பதை ஏற்றுத் தள்ளுவன தள்ளி சாதியற்ற, குமுக, பொருளியல் மற்றும் பாலின ஏற்றத்தாழ்வற்ற ஒரு பொதுமைக் குமுகத்தை நோக்கிச் செயல்பட வேண்டி இருக்கிறது.

அதற்கான அரசியல் கோட்பாடுகளில் தெளிவு பெறவும் நடைமுறைத் திட்டங்கள் வகுத்துக் கொள்ளவும் மேற்படிச் செயல்பாட்டாளர்களின் வழித்தடங்களை அறிந்து கொள்வது கட்டாயத் தேவை உடையது என்கிற அளவில் வரலாற்றுச் சுவடுகளைப் படிப்போம். புதிய வரலாற்றைப் படைப்போம்!

**பொழிலன்,**

ஒருங்கிணைப்பாளர், தமிழக மக்கள் முன்னணி

## கவிதைகள்

# சுகங்கொல் சாதி?

நிதி வங்கியின் கத்தைகளில்
புரளும்பொழுதும்

வரைவின் மகளிரை மெத்தைகளில்
புரட்டும்பொழுதும்;

குருதி வங்கியில் செந்திரவத்தைத்
தருவித்த வேளையிலும்;

அடவியிருளில் திசைகாட்டிய அரிய
கரிய மானுடத்தினிடத்திலும்;

பாலையில் தாகத்தைப் பஞ்சமர்
சோலைநீர் தணித்த வேளையும்;

காணாத சாதிபேதம்
கடவுளாய்த் தெரிந்திட்ட கணங்கள்
தேவையின் பசியாற்றியதால்
காணாத சாதிபேதம்?

அன்புசால் மானுட இனத்தில் –
குருதி ஓர் செங்குணமே எனினும்

வெம்பசி வேறுபாடில்லை எனினும்
நிலையிலா வுயிர் பொதுவே எனினும்

பிறப்பினிலே பேதமென்று
கற்பித்த கயமை சரியோ?

மனுநீதியிதுவெனப் பிதற்றிச்
சமனற்ற சாதிப் படிநிலை திணித்துச்
சுகங்காணுங் கருத்த மனக்கூட்டத்தின்
தீராப் பசியை
சுகங்கொள்ளாது சுகிக்கவொரு
சுவாமியோ சூரனோ
வரும் காலம் எதிர்ப்படுமோ?

எக்காலம் ஓயுமிவர்
எக்காளம்?
எக்கோளம் ஆளவரும்
இப் பூக்கோளம்
உயிர்ப்பெறும்?

சுகங்கொல் சாதி கொல்
சுகங்கொள் அன்புகொண்டு!

*– அழகன் கருப்பண்ணன்*

## அறிவிப்பு

தோளில் துண்டணிந்து
உங்களது வீதிகளில் நடப்பதற்கு
அனுமதிக்க மறுத்தீர்கள்.

கொல்லைப் புறவழியாக
வரச்சொல்லி
தேங்காய்ச் சிரட்டைகளில்
தேநீரை ஊற்றினீர்கள்.

இரட்டைக் குவளைகளைக்
காகிதக் கோப்பைகளாக மாற்றி
நவீனப்படுத்திக் கொண்டீர்கள்.

பண்ணைகளில் விளைவித்த பயிருக்கு
கூலிதனைக் கொஞ்சம் கேட்டதற்கு
குடிசையையே எரித்தீர்கள்.

காதல்தனை நாடகம் என்று பகர்ந்து
இயல்பாய் மலர்ந்த காதல் மலர்கள்மீது
அரிவாளால் குருதிமழை பொழிந்தீர்கள்.

சேரிக்காரர்கள் என இகழ்ந்து
ஆலயத்துக்கு உள்ளே
வழிபட அனுமதி மறுத்தீர்கள்.

இயல்பாகப் படித்து முன்னேறினாலும்
இடஒதுக்கீட்டு பயல்கள் என
சொற்களால் சுட்டீர்கள்.

காலத்தின் நதி கரைபுரண்டு ஓடும்
ஒரு காலம் விரைவில் வரும்போது
நீங்கள் கரைந்து போவீர்கள்.

உரிமைகளின் குரல்வளையைப்
பூட்டுகள் போட்டு பூட்டினீர்கள்.
ஆனால்
நாளை எழுதப்படும் வரலாற்றில்
உங்கள் பூட்டுகள்
சுக்கல் சுக்கலாக
உடைத்தெறியப்படும்
விரைவாக
உணர்ந்து கொள்வீர்கள்.

*– ரவி குமாரசாமி*

## என் தொழில்

போலிகளின் நரிமுகத்தைப்
பொய்மைகளின் அறிமுகத்தைத்
தோலுரித்துக் காட்டவந்தேன் மெய்யா அத்
தொழிலில்நான் சக்கிலியே அய்யா!

ஒப்புரவு ஓங்கிடவே
உள்மலங்கள் நீங்கிடவே
துப்புரவுப் பாங்குறவே மெய்யா நான்
தூத்துக்கூட்டுந் தோட்டிதான் அய்யா!

நடமாட்டப் பிணங்களுக்கும்
நாள்போட்டுக் கணக்குமிட்டே
சுடுகாட்டில் எரித்திடுவேன் மெய்யா அச்
சுடலையாண்டி வெட்டியான் அய்யா!

கலப்படத்துக் கைவரிசை
இலக்கியத்துச் சந்தையிலே
புலப்படவே பிடிக்கவந்தேன் மெய்யா நான்
புலனாயும் உளவாளி அய்யா!

கமுக்கமெலாம் வெளிச்சமிடக்
கலைவடிவிற் பளிச்சிடவே
தமுக்கடித்தே பாடவந்தேன் மெய்யா நான்
தப்பறையும் பறையந்தான் அய்யா!

*– பொதிகைச்சித்தர்*

❖❖❖

# பொதியவெற்பனின் மெய்யியல் சார்ந்த உரையாடல்கள்

**ஜமாலன்**

தமிழில் தத்துவம் சார்ந்த உரையாடல்களில் ஒரு முகாமையான சிக்கல் உள்ளது. அது மேலைத்தேய ''தத்துவம்'' சார்ந்த கருத்தாக்கத்துடன் இந்திய மெய்யியல் சார்ந்த சிந்தனைகளை குழப்பிக் கொள்ளுவதால் வருவது. மேலைத்தேயச் சிந்தனைமுறையில் தத்துவம், இறையியல் இரண்டும் தனித்தனியான துறைகளாக வளர்ந்து வந்தவை. ஆனால், கீழைத்தேயச் சமூகங்களில் தத்துவம் இறையியலாகவே வெளிப்பட்டது. குறிப்பாக, இந்திய ஒன்றியத் தத்துவ மரபை எடுத்துக் கொண்டால், அது இறையியலுடன் இணைந்தே வெளிப்பட்டது. இறையியலிலிருந்து தத்துவத்தைப் பிரித்தறியும் ஒரு பார்வை அடிப்படையானது. அந்த அடிப்படையில் தனது மெய்காண் முறையை அமைத்துக் கொண்டவர் பொதியவெற்பன்.

தத்துவம் என்ற சொல் வடமொழியில் `பற்றிப் பிடித்தல்' என்ற பொருளைக் கொண்டது. இது அடிப்படையில் மேற்கத்திய சிந்தனையில் உள்ள தத்துவம் குறித்த பொருளைச் சரியாகக் குறிப்பதில்லை. கிரேக்க வேர்ச்சொல்லான Philo என்பதிலிருந்தே Philosophy என்ற சொல் வந்தது. அதாவது 'love of wisdom' என்பதே அதன் பொருள். ஆனால், இந்தியாவில் பெரும்பாலான தத்துவ மரபு என்பது ஆன்மா குறித்த வாத விவாதங்களைக் கொண்டது. ஆன்மா உண்டா இல்லையா? ஆன்மாவிற்கும் உடலுக்கும், உயிருக்கும், உணர்வுக்கும், எண்ணத்திற்குமான உறவு குறித்தே அதிகம் கவலை கொண்டவை. “உண்மையை அறிதல்'' என்பதைவிட “உன்னை அறிதல்'' என்பதிலேயே அதிகம் கவனம் செலுத்தியவை. அத்துடன் அது கீழைத்தேயச் சிந்தனைப் படிமமாக உருவான ‘இறை’ மற்றும் அதற்கான ஒரு நிறுவனமான மதம் சார்ந்து அமைந்தது. ஆனால், சங்கத் தமிழில் இறை என்பது இறைச்சி, வேட்டைக்கான உணவு என்பதானப் பொருளைக் கொண்டது. அதனால், இந்திய ஒன்றியத் தத்துவமரபில் உள்ள இறையியல் சார்ந்த சிந்தனைகளைக் களைந்து, மேற்கத்திய அறிவுவாத மரபில் தத்துவத்தைப் புத்தாக்கம் செய்வதற்கான, புரிந்துகொள்வதற்கான முயற்சி முக்கியமானது. அம்முயற்சிக்கான தேவையை இன்று வலியுறுத்த வேண்டியது அவசியம். அவ்வலியுறுத்தலுக்கான ஒரு முயற்சியைப் பொதியின் உரையாடல்களில் வாசிக்க முடியும்.

தவிரவும், பொதி இந்த அடிப்படை வேறுபாடுகள் குறித்து ஆழ்ந்த புரிதலும், ஓர்மையும் கொண்டவராக இருப்பதை, இக்கலைச்சொற்களை அவர் பாவிக்கும் முறையிலும், அவற்றை அவர் வரையறுக்க முயலுவதிலும் அறியமுடியும். சான்றாக, சித்தாந்தம், வேதாந்தம் குறித்து அவரது உரையாடலில் பாவிக்கும் நுட்பம் முக்கியமானது. இவற்றின் வேறுபாடுகளை அறுதியிட்டுப் பேசும் ஒரு நீண்ட உரையாடலைக்கூட அவர் நிகழ்த்தியுள்ளார். பொதுவாகத் தத்துவம் என்ற சொல்லிற்குச் சித்தாந்தம் என்ற சொல்லையே பாவிப்பது இங்கு வழக்கமாக உள்ளது. அதன்பின் தமிழும் சைவமும் ஒன்றுதான் என்ற மனப்பிம்பமும், சித்தாந்தம் என்பதே தத்துவம் அல்லது புரியாமல் பேசுவது அல்லது இறை யியல் குறித்துப் பேசுவது அல்லது பொதுப்புத்தி சாராத பேச்சுகள் என அனைத்தும் ஒற்றைச் சொல்லுக்குள் அடக்கப்பட்டுவிடும் மொழி அரசியலும் காரணம். சைவமே தமிழ், தமிழே சைவம் என்பதும், சிவனின் உடுக்கை ஒலியில் பிறந்த மொழி தமிழ் என்பதெல்லாம் பக்தி இயக்கம் உருவாக்கிய ஒரு கருத்துநிலை என்பது மிகைக் கூற்றாகாது.

தத்துவம் என்ற வடமொழி சொல்லைத் தவிர்த்து தமிழில் ‘‘மெய்யியல்’’ என்ற சொல்லைப் பயன்படுத்துவதே சரியானது. இது வெறும் மொழி அரசியல் சார்ந்த ஒன்றல்ல. காரணம், வடமொழியில் தத்துவம் நம்பிக்கை சார்ந்த ஒன்றாக இருப்பதும், தமிழில் மெய்யியல் என்ற சொல் நேரடியாக உண்மையை அறிதல், மெய்பொருள் காணுதல் என்பதுடன், மெய் என்கிற உடல், புறம் என்ற பொருளையும் கொண்டிருப்பது முக்கியம். ஆக, மெய்யியல் என்ற சொல் தமிழியம் சார்ந்த சிந்தனையை வெளிப்படுத்தக் கூடியதாக உள்ளது. அவ்வகையில் தமிழருக்கான மெய்யியல் அடிப்படையில் அறிவார்ந்த தளத்தில் அமைந்த மெய்காண்முறையைக் கொண்டிருப்பது முக்கியம். அதோடுகூட அது பொருள்முதல்வாதச் சிந்தனைக்கு நெருக்கமானதாக, அணுக்கமானதாக உள்ளது. இதன் ஒரு நீட்சியாக அண்மைக்காலத்தில் உரையாடலுக்கு முன்வந்துள்ள ‘‘ஆசீவகம்’’ குறித்த சிந்தனை முக்கியமானது. அது தமிழரின் தத்துவம் என்ற வாதம் ஒருபுறம் இருந்தாலும், அது குறித்து ஏ. எல். பாஷம் தொடங்கி தமிழில் ர. விஜயலெட்சுமி மற்றும் க. நெடுஞ்செழியன் ஆகியோர் எழுதியதை ஒட்டிப் பொதியும் அது குறித்த உரையாடலை நிகழ்த்துபவராகத் தன்னை முன்னிறுத்திக் கொண்டுள்ளார்.

தமிழியம் என்று தமிழின் மெய்யான சிந்தனைகளை, கோட்பாடுகளை, கருத்தியலை, மெய்யியலை, இலக்கியத்தை,

பண்பாட்டைக் குறிக்கப் பயன்படுத்தினால், பொதியை ஒரு தமிழியம் சார்ந்த மெய்யியலை முன்வைப்பராகக் கொள்ளலாம். அதன் ஒரு தொடர்ச்சியே அவரது வள்ளுவர், வள்ளலார், சித்தர், மார்க்ஸ், அம்பேத்கர், பெரியார் மற்றும் பின்நவீனம் குறித்த உரையாடல்களின் தொகுப்பாக அறியமுடியும். இவற்றை அவர் ஒரு கதம்பக் கூட்டாகவோ, மேற்கோள் தொகுப்பாகவோ பயன்படுத்தாமல் ஓர் அளவையியல் முறையில் (தர்க்க முறையில்) முன்வைக்கிறார். அதற்குள் ஒரு மெய்யியல் உரையாடலை வளர்த்தெடுக்கிறார் என்பதே கவனப்படுத்த வேண்டிய ஒன்று.

இவற்றைத் தொகுப்பாக்கி இற்றைப்படுத்தி முன்வைக்கும் ஓர் உரையாடல் வெளியே பொதியுனுடைய மெய்யியல் சார்ந்த உரையாடலாக அமைந்துள்ளது. இதனை அவர் சித்தரியம் என்பதாகக் குறிப்பிட முயல்கிறார். நாம் இதனை "நவீன சித்தரியல்" என்பதாக வகைப்படுத்திக் கொள்ளலாம். என்றாலும், சித்தர்களின் ஆன்மீக, இறையியல் சார்ந்த நிலையைக் குறித்து அவர் ஒரு கட்டுரையில் விரிவாக விமர்சித்து மறுத்துவிட்டு, சித்தர்களின் கலகத்தன்மை, எதிர்க்குரல்கள், அதிகாரத்தை எதிர்த்தல் உள்ளிட்ட ஒரு பரவெளி என்கிற வெட்டவெளி சார்ந்த சிந்தனையாக தனது மெய்யியல் சார்பை முன்வைக்கிறார். இப்பார்வை குறித்து முரண்கள், வாத விவாதங்கள் இருக்கலாம், என்றாலும், பொதியின் மெய்யியலை வடிவமைப்பதில் இச்சித்தரியம் முக்கியப் பங்கை வகிக்கிறது.

அடுத்து, சைவம் குறித்தும் அவர் அதன் நேர்மறையான அம்சங்களை ஏற்பதும், அதன் இறையியல் சார்ந்த நெறி குறித்து மறுப்பதும் என்ற ஓர் இயங்கியல் சார்ந்த பார்வையை முன்வைக்கிறார். இவை அனைத்திற்கும் அடிப்படையாக அமைவது அவரது உரையாடல்கள். இந்த உரையாடல் என்ற முறைமை மேற்கத்திய சிந்தனையில் ஹெகலின் இயங்கியலில் இருந்து பெறப்பட்டது. அதன் கருத்துமுதல்வாத அடிப்படைகளை நீக்கி, சமூக ஆய்விற்குப் பொருத்தி மார்க்ஸ் பொருள்முதுல்வாதச் சிந்தனையில் 'இயங்கியல் பொருள்முதல்வாதம்' என்பதாகப் புத்தாக்கம் செய்தார். பொதி மார்க்சியத்தின் இவ்வியங்கியல் முறைமையைப் பயன்படுத்தி கருத்து-எதிர்க்கருத்து-இணைவுக் கருத்து (thesis-antithesis-synthesis) என்ற பாணியில் தனது உரையாடல் முழுமையையும் அமைத்துக் கொண்டுள்ளார். அது அவரது இயல்பாகவே மாறிவிட்டது என்று சொல்வது மிகையாகாது. ஒருவரது கூற்றில் முரணை வாசித்தல், அவரது மற்றையக் கூற்றில் உள்ள இணைவையும், முரணையும் முன்வைத்தல் என அவரது உரையாடல் முறை அமைந்துள்ளது.

இம்மார்க்சிய இயங்கியல் பொருள்முதல்வாதச் சிந்தனை அடிப்படையில் அவரது பெரும்பாலான உரையாடல்கள் அமைந்துள்ளன. அதிலிருந்து அவர் அதன் தமிழியம் சார்ந்த சிந்தனை முறைக்கு செல்வதன் வழியாக வந்தடைந்த புள்ளிகளே வடலூர் வள்ளலார் மற்றும் ஈரோட்டுப் பெரியார். இதன் உள்ளார்ந்த மெய்யியல் பார்வை சித்தரியத்திலிருந்து பெறப்பட்டதால் தன்னைப் பொதிகைச் சித்தர் என்று முன்வைத்துக் கொள்பவராக உள்ளார்.

தொகுப்புரையாக, அவரது மெய்யியல் சார்ந்த உரையாடல்களைக் கூறினால்...

(1.) **அதிகாரத்தை எதிர்த்தல்**. இது மாற்றுச் சிந்தனை மரபான லோகாயுதம், பௌத்தம், சமணம், ஆசீவகம் தொடங்கி தமிழில் சித்தர் மரபுவரை உருவான ஒன்று.

(2.) **அதிகார மையங்களை உடைத்தல்**. இது இலக்கிய, தத்துவ, அரசியல் பீடங்களாக உருவாகும் மையங்களை கட்டுடைத்தல் என்பதாக முன் பின்னாக அம்மையங்கள் பேசியவற்றை உரையாடலாக முன்வைத்துத் தகர்த்தல். இதனை தகர்ப்பமைப்பு முறையியலாக அவர் முன்வைக்கிறார்.

(3.) **கலகக்குரலாக ஒலித்தல்**. இதுவும் சித்தர்கள் மற்றும் மாற்று மரபுகள் வழி பெற்ற மெய்யியல் சார்ந்த ஓர் உரையாடலாக வெளிப்படுவது. அத்துடன் எந்தவோர் இடத்திலும் தன்னை ஒரு கலகக்காரராக முன்வைப்பவராக இருக்கிறார்.

(4.) **நிறுவனமய எதிர்ப்பு**. அவரது மெய்யியல் பார்வையின் அரசியல் வெளிப்பாடாக, மையம் சார்ந்த நிறுவனங்களை எதிர்ப்பது. அவற்றின் மையத்தைக் கட்டவிழ்த்து. அவற்றைத் தகர்ப்பதற்கான உரையாடல் வெளிகளை, கருத்துக்களை ஒழுங்கமைப்பது.

(5.) **கட்டுடைப்பு முறையியல்**. கறாரான தெரிதியக் கட்டுடைப்பு (முரணை தலைகீழாக்கல், ஒடுக்கப்பட்ட கருத்தை மேலே கொண்டுவருதல்) முறையாக இல்லாமல், மார்க்சிய இயங்கியல் (முரண்களின் மோதலில் புதிய கருத்தை அடைதல்) சார்ந்த முரண்களை முன்வைத்து அம்பலப்படுத்துதல். தொடர்ந்து ஜெயமோகன் போன்ற இலக்கிய பீடங்களை, அதன் சனாதன வர்ண அதிகாரத்தை எதிர்த்து பொதியின் உரையாடல்களை வாசிப்பவர்கள் அறியமுடியும்.

(6.) **வேதாந்த மறுப்பு**. தொடர்ந்து வேதாந்த, பிராமணிய, சனாதன எதிர்ப்பு என்பது பொதியின் அடிப்படையான மெய் யியல் சார்ந்த பார்வையாகும். ஆனால், வேதாந்த எதிர்ப்பு என்பதில் சித்தாந்தச் சார்புநிலை எடுப்பதில் மறுப்பும், ஏற்பும் கொண்டிருக்கிறது எனலாம். சித்தாந்தம் குறிப்பாகப் பக்தி இயக்க நெறி என்பது, வேதாந்தை வேதாந்திகளிடமிருந்து வென்றெடுத்து

அதனைத் தமிழில் தன்வயப்படுத்தும் முயற்சி என்று பார்க்க முடியும். அவ்வகையில் வேத முதன்மை என்பது சித்தாந்திகளின் ஒரு நிலைப்பாடும்கூட. பொதியின் சித்தாந்தத்திலிருந்து ஓர் இயங்கியல் பார்வையை கைக்கொள்கிறார் என்பது அவரை அதில் வேறுபடுத்தி பார்க்கக் கூடியதாக உள்ளது.

(7.) இறுதியாக, அவர் **ஆசீவகச் சார்பிலிருந்து** சில உரையாடல்களை முன்வைக்கிறார். இன்று இத்தகைய உரையாடல்கள் தமிழ் மெய்யியல் சார்ந்த உரையாடலில் முக்கியமானது.

பொதியின் மெய்யியல் சார்ந்த உரையாடல்கள் பல ஆதாரங்களை, புலப்படாத பலக் கருத்துக்களை முன் கொண்டுவந்து ஒரு விரிவான தளத்தில் பன்முகப்பார்வையுடன் முன்வைப்பதாக உள்ளது. அவரது நினைவாற்றலின் அபார சக்தியால் மொத்தத் தமிழ் வரலாற்றின் பல காலங்களுக்குள் முன்பின்னாக பயணிப்பதும், பலரது கருத்துக்களை ஒன்றாகத் தொகுத்து ஓர் உரையாடல் வெளியை கட்டமைப்பதும் முக்கியமானது. இன்னும் குறிப்பாகப் பல தமிழ் மெய்யியல் சார்ந்த உரையாடல்களை அவரது நூல்களில், தொகுப்புகளில் வாசிப்பது எதிர்காலத்திற்கான ஒரு முக்கிய ஆவணப் பதிவாக அமைந்துள்ளது. தனது மேற்கண்ட சித்தரியக் கலகப் பண்பால், இந்த 75 ஆண்டுகளில் பொதுவாழ்வில் அவர் பல இன்னல்களைச் சந்தித்துள்ளார். பல கடினமான காலங்களை கடந்து வந்துள்ளார். பல பொருளாதாரச் சங்கடங்களை கடந்து, பல ஊர்களுக்கான பயணங்களை நிகழ்த்தி, ஓர் அலைகுடி வாழ்தலைப்போல அமைந்தது அவரது வாழ்வு. வாழ்தல் இனிது, பொருள் நிரம்பியதாக வாழ்தல் அதனிலும் இனிது, என்று தனது வாழ்வை அமைத்துக் கொண்ட தோழர் பொதியை வாழ்த்துவோம். இன்னும் பல நூல்களை, தமிழில் புலப்படாத பல பகுதிகளை, புலப்படாத பலரையும் முன்வைத்து அவரது உரையாடல்கள் பல்கிப் பெருகட்டும்.

(குறிப்பு: தோழர் பொதியவெற்பன் அவர்களின் 75வது ஆண்டு பவள விழாவை ஒட்டி அவரது கலை, இலக்கிய, எழுத்துப் பணிகள் குறித்துச் சென்னைப் பல்கலைக்கழகம் நிகழ்த்திய இணைய காணொலி நிகழ்வில் நிகழ்த்திய பேச்சின் விரிவாக்கப்பட்ட உரைவடிவம்.)

ஜமாலன்

jamalan.tamil@gmail.com

• **கட்டுரையாளர் - எழுத்தாளர்/திறனாய்வாளர்**

❖❖❖

# ஆர் எஸ் எஸ் அமைப்பின் ஒருங்கிணைந்த மனிதநேயப் பொய்ப்பரப்புரை

**காஞ்சா ஐலாயா செப்பர்டு**


**தமிழில்: கலைவேலு**

சூத்திரர்கள், தலித்துகள், ஆதிவாசிகள் ஆகியோர் பற்றிய நிலவுகின்ற நிலைப்பாடு புதிய கோட்பாட்டில் மாறாது என்கின்றபோது அக்கோட்பாட்டினால் என்ன பயன்?

இராட்டிரிய சுயம் சேவக் சங் (ஆர் எஸ் எஸ்), பாரதிய சனதாக் கட்சி ஆகியவற்றின் அறிவாளிகள் ஒருங்கிணைந்ந மனிதநேயம் என்ற கோட்பாட்டை முன்வைக்கிறார்கள். அது தீனதயாள் உபாத்யாயா (1916-1968)வால் முன்மொழியப்பட்டது என்கிறார்கள்.

ஆர் எஸ் எஸின் தலைவர் மோகன் பகவத், பொதுச்செயலாளர் தத்தாத்ரேயா கோசபாலே, செயலாளர் இராம் மாதவ், ஆகியோர் உபாத்யாயாவின் ஒருங்கிணைந்த மனிதநேயம் பற்றித் திரும்பத் திரும்பப் பேசி வருகிறார்கள், எதிர்கால அதிகாரத்தில் தங்களுக்கு வழிகாட்டும் அடிப்படை மெய்யியல் அதுவே என வரையறுக்கிறார்கள்.

தலைமையமைச்சர் நரேந்திர மோடியும் தம் அரசாங்கத்திற்கு வழிகாட்டும் கலங்கரைவிளக்கு இம்மெய்யியலே என அவ்வப்போது பேசுகிறார். அண்மையில் இக்கோட்பாடு பற்றிப் பேசியது, இராம் மாதவுடைய "இந்துத்துவாச் சட்டகம் .. ; ஒருங்கிணைந்த மனித நேயமும் மேற்கத்தியம் தவிர்த்த உலகப்பார்வைக்கான தேடலும்" என்ற புத்தக வெளியீட்டின் போதுதான். அங்கு பேசிய கோசபாலே, "இந்துத்துவம் என்பது இடதும் அல்ல, வலதும் அல்ல; ஒருங்கிணைந்த மனிதநேயமே அதன் சாரமாகும்." என்றார்.



எது எப்படியிருப்பினும், ஒருங்கிணைந்த மனிதநேயம் என்கின்ற இந்த மெய்யியல், ஆர் எஸ் எஸையும் அதன் கோட்பாட்டாளர்களையும் எந்த வகையில் வி.டி. சவர்க்கர், கே.பி. ஹெட்கேவர், எம்.எஸ். கோல்வால்கர் போன்றோர்களைப் பின்பற்றுவர்கள் என்கின்ற அவர்களது முந்திய நிலையை மாற்றியுள்ளது என்பதே கேள்வி.

காலங்காலமாக ஆர் எஸ் எஸால் தூற்றப்பட்ட இந்தியாவின் சிறுபான்மையர் நலனுக்காக மட்டுமின்றி குறிப்பாகச் சூத்திரர்கள், தலித்துகள், ஆதிவாசிகள் ஆகியோர் நலனுக்காகவும் இந்த மெய் யியலை ஆய்வது முக்கியமாகிறது. இவர்களுக்கு, பார்ப்பனிய இந்துத்துவ மெய்யியலாளர்கள் இதுவரை பின்பற்றி வருகின்ற சாதியை அடிப்படையாகக் கொண்ட மதத்தில் சமமான எந்தத் தகுதியும் தரவில்லை. ஆனால் அவர்களை இசுலாமியர்களுக்கும் கிறித்துவர்களுக்கும் எதிரான வன்முறைக்கு மட்டும் பயன்படுத்துகிறார்கள்.

தீனதயாள் உபாத்யாயா ஒர் ஆர் எஸ் எஸ். தொண்டர். அவர் பின்னர் ஆர். எஸ். எஸின் அரசியல் பிரிவான பாரதிய சனசங்கின் இரண்டாவது தலைவர் ஆனார். அவர் உத்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த பார்ப்பனர். பகவத், கோசபாலே, இராம் மாதவ் ஆகியோரின் குழந்தைப் பருவச் சூழ்நிலையை ஒத்த சூழ்நிலை யிலேயே வளர்ந்தவர். வேறு வேறு பகுதிகளில் பிறந்தவர்களாயினும் இவர்கள் அனைவரும் ஒரே சாதிப் பின்புலத்தைக் கொண்டவர்கள் ஆவர்.

குழந்தைப் பருவத்திலேயே இந்தியப் பண்புநலனில் இடம்பெற்று வளர்கின்ற சாதியப் பண்பாடு பின்னர் அவர் அவள் வாழ்நாள் முழுவதும் தொடர்கிறது.

மனிதச் சமத்துவத்திற்கு எதிரான பார்ப்பனியப் பண்புக்கூறுகள் பல உள்ளன. இந்துத்துவத்திற்குள்ளும் அவை சமத்துவமற்ற நிலையைப் பேணுகின்றன. அவை பார்ப்பனிய மரபு வர்ண தர்ம சாதியத்தின் பக்கவிளைவுகள் ஆகும். ஆர். எஸ். எஸின் தொடக்கக்காலக் கோட்பாட்டு எழுத்துகளில், குறிப்பாக கோல்வால்கர் எழுத்துகளில் இந்துத்துவ மரபின் முழுவடிவமும் விரிவாக விளக்கப் பெற்றுள்ளது. கோல்வால்கர், கெட்கேவர் ஆகிய இருவரும் பார்ப்பனியப் பின்புலத்தைக் கொண்டவர்கள். சங் அணிவரிசையில் இதுவரை தலித் அல்லது ஆதிவாசியைச் சேர்ந்த எந்தவொரு கோட்பாட்டாளரும் இடம்பெறவில்லை.

சாதியப் பண்பாட்டிற்குள் வளர்வது மற்ற சாதியினருடன் ஒருங்கிணைந்து வாழ்வதைப் பறித்துவிடுகிறது. வேறுவேறு மதங்களில் பிறந்து அம்மதப்பண்பாடுகளில் வளர்ந்துவருவோர் மீது திணிக்கப்படும் மதப்பண்பாடுகளைக் காட்டிலும் வேறுவேறு சாதிகளில் பிறப்போர்மீது சாதிப்பிரிவினைகள் கடுமையாகத் திணிக்கப்படுகின்றன. இந்தியாவைச் சமவுரிமை கொண்டோர் நாடாக மாற்ற ஒருங்கிணைந்த மனிதநேயத்தைப் பயன்படுத்த முடியுமா? இந்துவியத்தை சனநாயக மதமாக மாற்றுவதைக் குறிக்கோளாகக் கொள்ளும்போது அது சாத்தியப்படும்.

தேவைப்படும் அவ்வப்போது மேற்கத்திய அறிவியலை உபாத்யாயா ஆதரித்தாலும், மேற்கத்திய முதலாளித்துவத் தனிமனிதவுரிமைக் கோட்பாடு, மார்க்சியச் சோசலிசம் ஆகிய இரண்டையும் எதிர்த்தார்.

மேற்கத்திய அறிவியலோ கிழக்கத்திய அறிவியலோ எந்தவோர் அறிவியலும் உழைப்பின் கண்ணியத்திலும் பொருள்கள். சரக்குகள் உற்பத்தியிலும் வேர் கொண்டுள்ளது. அது உழவு, கைத்தொழில் ஆகியவற்றை உள்ளடக்கிய மனித உற்பத்தியின் மீது தூய்மை, தீட்டுக் கோட்பாடுகளைச் சுமத்துவது இல்லை.

பார்ப்பனியத்தில் ஆழமாக வேரூன்றிய ஓர் அமைப்பு என்ற முறையில் ஆர்.எஸ்.எஸின் இந்திய மரபு பற்றிய கருத்தாக்கம் தீண்டாமையை உள்ளடக்கிய தூய்மை. தீட்டு, சமமற்ற முறையில் மேல்கீழாக வரிசைப்படுத்தப்பட்ட சாதி, பாலினம் ஆகிய பார்ப்பனிய மதிப்பீடுகளைச் சுற்றியே அமைந்துள்ளது.

பார்ப்பனியப் பின்புலத்திலிருந்து வந்த மார்க்சியவாதிகள், பரந்த கொள்கையினர் (liberals) போன்று உபாத்யாயா சாதி பற்றிய கேள்வியைச் சிக்கலுக்குரிய ஒன்றாகப் பார்க்கவில்லை. அதேபோன்று இன்றைய ஆர்.எஸ்.எஸ் அல்லது பாசகவின் அறிவாளிகளும் மகாத்மா பூலே, டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் ஆகியோரின் கருத்துகளை உள்வாங்கிச் சாதியைக் கேள்விக்கு உட்படுத்தவில்லை. அவர்கள் இருவர் கொள்கையிலும் மனித வாழ்க்கையின் எல்லாப் பக்கங்களிலிருந்தும் சாதியையும் மனிதத் தீண்டாமையையும் அகற்றுவதே அடிநாதமாக இருந்தது.

உபாத்யாயா செய்தது மகாத்மா காந்தியின் “சர்வோதயத்தையும்”, “கிராம சுயராச்சியத்தை”யும் ஒன்றிணைக்க முயற்சித்ததுதான். ஏன் அவர் பூலேயையும் அம்பேத்கரையும் தேர்ந்தெடுக்கவில்லை.? ஏனென்றால் மனிதத் தீண்டாமையை ஆதரிக்காவிட்டாலும் இந்து வர்ணாசிரமத்தைக் காந்தியும் ஆதரித்தவர்தாம்.

உபாத்யாயாவின் ஒருங்கிணைந்த மனிதநேயம் என்பது ஆதிசங்கரரால் வளர்த்தெடுக்கப்பட்ட அத்வைதத்தைப் பின்பற்றுகிறது என்கிறது ஒரு திறனாய்வு. புனித சாரத்தின் (divine essence) பிரிக்கவொண்ணாமை பற்றி அத்வைதம் பேசினாலும் புராண, இராமயணத் தொன்மங்கள் வழிவந்த சத்ரியர் கடவுள்களையும் (விஷ்ணு, சிறீராமர் முதலிய) பார்ப்பனர் கடவுளையும் (பரசுராமன்) வணங்குவதை அது எதிர்க்கவில்லை. “ஜெய் சிறீராம்” என்ற முழக்கமும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இயல்பான ஒன்று என்றான சிறுபான்மையினருக்கெதிரான வன்முறையும் இணைந்த இராமர் கோயில் இயக்கம் ஆர். எஸ்.எஸின் சொந்த உருவாக்கமே. இராமர் சத்திரிய அரசகுடி வழித்தோன்றல் என்பது

ஆர்.எஸ்.எஸின் அறிவாளிகளுக்கு நன்கு தெரியும். சத்திரிய அரசகுடி சாதிவொழிப்பில் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை, சாதி நிலைபேற்றிலேயே நம்பிக்கை கொண்டிருந்தது.

அவர்கள் போற்றுகின்றதும் நிறுவனமாக்கப்பட்டதுமான புனிதத் தெய்வங்கள், சாதி ஆன்மீகத்தில் தங்கள் வேர்களைக் கொண்டிருக்கையில் ஒருங்கிணைந்த மனிதநேயம் என்பது எப்படிச் சாத்தியமாகும்? இருப்பது ஒரே ஒரு கடவுள், அவர் ஆண்,பெண் ஆகிய அனைவரையும் சமமாகப் படைத்தார் என்பதையாவது அத்வைதம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்துத்துவச் சிந்தனைப்பள்ளியில் பணிபுரிகின்ற சூத்திரர், தலித் ஆதிவாசிகள் ஆகிய அனைவருக்கும் ஆர்.எஸ்.எஸ்ஸின் ஆன்மீக, பண்பாட்டுத் தேசியத்தில் தங்கள் இடத்தைத் தேர்வு செய்வதற்குப் பெரும் அறைகூவலாகவே இருக்கும். இப்பொழுது புதிதாக வலியுறுத்தப்படுகின்ற ஒருங்கிணைந்த மனிதநேயத்திலும் அவர்கள் நிலைமை அதேதான்.

ஆர்.எஸ்.எஸ். பாசக அறிவாளிகள் பரப்புரை செய்கின்ற ஒருங்கிணைந்த மனிதநேய மெய்யியத்தில் சாதி, பாலினச் சமத்துவமின்மை, தீண்டாமை ஆகியவற்றை ஒழிப்பது என்கின்ற வேலைத்திட்டம் அடிப்படையான ஒரு பகுதியாக அமையவில்லை என்கின்றபோது சூத்திரர்கள், தலித்துகள், ஆதிவாசிகள் ஆகியோரின் சபத்துவமற்ற நிலை இந்திய அமைப்பில் என்னவாகும்? மேலும் இந்துத்துவ அமைப்புகள் உள்ளேயும் அவர்கள் நிலைமை என்னவாக இருக்கும்?

ஆர்.எஸ்.எஸ். பாசக கட்டமைப்புகளுக்குள், சூத்திரர் தலித் அல்லது ஆதிவாசி அறிவாளிகள் உருவாவதற்கும் அவர்கள் தங்கள் சொந்தத் தகுநிலையை வெளிப்படுத்துவதற்கும் அனுமதிப்பது இல்லை என்பது எதேச்சையான ஒன்று அன்று.

ஆர்.எஸ்.எஸூம் பாசகவும் உழைப்பின் கண்ணியத்தை அவர்கள் கருத்தியல் வேலைத்திட்டத்தின் ஒருபகுதியாக இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்து ஆன்மீகத்தளத்திலும்கூட அவர்கள் அப்படி ஏற்றக்கொள்ளவில்லை. சாதி மொழியை நீங்கள் புறந்தள்ளினாலும், இந்து செருப்புத் தைப்பவரோ, குடம் செய்பவரோ, தெருக் கூட்டுபவரோ, தூய்மைப் பணியாளரோ, ஆடு மேய்ப்பவரோ இந்துக் கோயில்களில் பூசாரிகளாக முடியாது, அவர்கள் அதற்கான தகுதி பெற்றிருந்தாலும் அது நடைபெறாது. இந்த வரலாற்றுச் சிக்கலை ஒருங்கிணைந்த மனிதநேயம் எப்படி வெற்றிகொள்ளும்? மனிதச் சமத்துவம் என்றவொரு கோட்பாடு இல்லாமல் ஒருங்கிணைந்த மனிதநேயம் என்பதின் பொருள்தான் என்ன?

உபாத்யாயாவின் ஒருங்கிணைந்த மனிதநேயம் கொள்கையளவில் உடல், மனம், அறிவு, ஆன்மா ஆகியவற்றின் ஒன்றிணைந்த பங்களிப்புகள் பற்றிப் பேசுகிறது.. இந்துத்துவ அமைப்புகளில் ஒன்றிணைக்கப்பட்ட சூத்திரர்கள், தலித்துகள், ஆதிவாசிகள் ஆகியோரின் மனமும் அறிவும், ஆன்மாவும் அதில் உள்ளடங்கி உள்ளனவா? இப்பொழுதுவரை இந்துயிசத்தில் அவர்கள் சமமான ஆன்மீக உரிமையைப் பெற்றிருக்கவில்லை. இந்தக் கொள்கைகளைப் பேசுகின்ற பார்ப்பனர்களுக்கு நிகரான அறிவுத் தகுநிலையையும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

மேலும் இந்திய மக்கள் அனைவரின் உணவுப் பண்பாட்டை ஒருங்கிணைந்த மனிதநேயம் எப்படி அணுகுகிறது?

நவீனப் பார்ப்பனியம், இந்துத்துவ அமைப்புகள் ஆகிய இரண்டும் சைவத்தையே ஏற்றுக் கொள்கிறது.

குடிமைச் சமூகமாக இருந்தாலும் சரி ஆன்மீகச் சமூகமாக இருந்தாலும் சரி எல்லோராலும் அறியப்பட்ட உலகளாவிய மனிதநேய மெய்யியல் உணவுப் பண்பாட்டு அடிப்படையில் மனிதர்களுக்கிடையே வேறுபாடு காட்டுவது இல்லை. ஆர். எஸ். எஸ்ஸின் ஒருங்கிணைந்த மனிதநேயம் உலகளாவிய மனிதநேயத்தைப் போன்றதுதான் என்றால் சைவத்தை வலியுறுத்தும் அதன் நீண்டகால வரலாற்றை (இன்றைய வடிவத்தில் ஏறத்தாழத் தொண்ணூறு ஆண்டுகள்) அது என்ன செய்யும்?

உபாத்யாயாவின் ஒருங்கிணைந்த மனிதநேயம் தனிமனித உரிமையை எதிர்க்கிறது, அது மேற்கிலிருந்து தோன்றியது எனக் கருதுகிறது. அதன் தனிமனித உரிமை எதிர்ப்பு சாதியம் அல்லது வகுப்புவாதத்தின் மீதான அதன் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டது எனத் தோன்றுகிறது. ஆனால் இந்திய அரசமைப்பே தனிமனித உரிமைகள் அடிப்படையில்தான் செயல்படுகிறது. அதன்படி ஒவ்வொரு தனிமனிதனும் ஒரு வாக்கும் சமமான மதிப்பும் கொண்ட குடிமகனாகத் திகழ்கிறான். அப்படியானால் ஆர்.எஸ்.எஸ்ஸின் ஒருங்கிணைந்த மனிதநேயம் என்பது இன்றைய அரசமைப்பிற்கு எதிரானது அல்லவா?

இங்குதான் சிறுபான்மையினர் உரிமைகள் மட்டுமின்றி சூத்திரர்கள், தலித்துகள், ஆதிவாசிகள் ஆகியோர் உரிமைகளும் இந்த மெய்யியலில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகின்றன.

இந்துச் சமூகத்தின் முரண்பாட்டைக் கவனியுங்கள். கொள்கையளவிலும், நடைமுறையிலும் பார்ப்பனர்கள் இருபிறப்பாளர்கள் ஆகிய இருவரையும் தவிர சூத்திரர்கள், தலித்துகள் ஆதிவாசிகள் ஆகிய அனைவரும் உடலளவில்தான் மனிதர்கள், மனம் அறிவு ஆன்மா ஆகியவற்றைக் கொண்டவர்கள்

அல்லர் அவர்கள்.

சூத்திரர், வைசியர், சத்திரியர், பார்ப்பனர் என்கின்ற ரிக்வேதக் கோட்பாட்டின்படியான நான்கு வர்ணங்களில், சூத்திரர்களுக்கு அடிமைப் பாத்திரம் வழங்கப்பட்டுள்ளது. அது மற்ற மூன்று வர்ணங்களுக்குப் பணிவிடை செய்தல் என அழைக்கப்படுகிறது. மனதையோ அறிவையோ பயன்படுத்துவது அவர்களுக்கு மறுக்கப்படுகிறது. ஆன்மீக ஆன்மாவும் அவர்களுக்கு மறுக்கப்படுகிறது. ஆன்மா என்பது மனிதனுக்குள் அமைந்திருக்கும் தனி அலகு எனச் சொல்லப்படுகிறது, உடலைச் சார்ந்திராமல் இயங்கும் ஒன்றாக அது கருதப்படுகிறது.

இறுக்கமான மதக்கோட்பாட்டில் நம்பிக்கைக் கொண்டுள்ள இந்துத்துவச் சிந்தனைப்பள்ளி அதை அரசியலிலும் பயன்படுத்த விரும்புகிறது. இருந்தும் சூத்திரர், தலித், ஆதிவாசி ஆகியோரைப் பூசாரிகளாக அமர்த்த அது விரும்பவில்லை. இவ்வாறு அவர்கள் இதுநாள்வரை ஆன்மா அற்றவர்களாகவே நடத்தப்படுகிறார்கள்.

அப்படியிருக்க, ஒருங்கிணைந்த மனிதநேயம் உணவு உற்பத்திசெய்யும் உழவர்களான விளைவிப்பு மக்களிடையே ஆன்மாவை எப்படி உண்டாக்க முடியும்? அவர்கள்தாம் பெரும்பான்மை மக்களாக உள்ளனர். ஆர்.எஸ்.எஸ்ஸின் பார்ப்பனிய ஒருங்கிணைந்த மனிதநேயம் அவர்களுக்குப் புதிய விடுதலைப்பாதை எதையும் காட்டவில்லை.

கவுடில்யர் அர்த்தசாஸ்திரம், மனுவின் தர்மசாஸ்திரம், இராமாயணம், மகாபாரதம் ஆகியன சாதிகளை உறுதிப்படுத்துகின்றன. இன்றைய ஆட்சியாளர்கள் இப்புத்தகங்களைப் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் கற்றுத்தர ஊக்குவிக்கின்றார்கள்.

சாதியின்மை, உழைப்பின் கண்ணியம் ஆகியவற்றைக் கற்றுத்தர எந்தப் பாடத்திட்டமும் இல்லாத நம் கல்வி நிறுவனங்களில் எந்த வகையான ஒருங்கிணைந்த மனிதநேயம் கற்றுத் தரப்படும்? முறையாக நிறுவனமயமாக்கப்பட்டுள்ள சாதி, ஆழமாகப் பதிந்துள்ள உழைப்பின்மீதான இழிந்த பார்வை, அது ஊக்கப்படுத்தும் மனிதத் தீண்டாமை ஆகியவை பற்றிய மவுனம் எந்த மாற்றத்திற்கும் உதவாது.

ஆர். எஸ். எஸ்ஸும் பாசகவும் மாற்றத்திற்கு எதிரான அமைப்புகள் என்பதில் உறுதியான கருத்துடையவன் நான். அவ்வமைப்புகளுக்குள்ளே சூத்திரர்கள், தலித்துகள், ஆதிவாசிகள் ஆகியோரின் இன்றைய நிலைமைகளில் எந்த மாற்றமும் ஏற்படாது என்கின்றபோது ஒருங்கிணைந்த மனிதநேயம் அவற்றை மாற்றத்திற்குரிய அமைப்புகளாக எங்ஙனம் மாற்றும்?

புதிதாகப் பரப்புரை செய்யப்படுகின்ற ஒருங்கிணைந்த மனிதநேயக் கோட்பாடு இந்துத்துவப் பார்ப்பனியத்திலிருந்து எப்படி மாறுபட்டது என்பதையும், இங்கே எழுப்பப்பட்டுள்ள சில முதன்மையான சிக்கல்களுக்கு அது எப்படித் தீர்வு காணும் என்பதையும் மோகன் பகவத்தும் தாத்தரேயா கோசபல்லாவும் ,இராம் மாதவ்வும் நாட்டு மக்களுக்கு விளக்குவார்களேயானால் அவர்களுக்கு நாடு உண்மையாகவே நன்றியுடையதாக இருக்கும்.

நன்றி: தி வயர், நவம்பர் 16, 2021.

- **கட்டுரையாளர் - எழுத்தாளர்/மொழிபெயர்ப்பாளர்**

❖❖❖

# புதுமலர் பதிப்பகம் சார்பாக நூல் வெளியீட்டு விழா

தமிழியல் ஆய்வறிஞர் பொதியவெற்பன் அவர்களின் பவளவிழா மற்றும் புதுமலர் பதிப்பகம் நூல் வெளியீட்டு விழா என இரு நிகழ்வுகள் ( 2023 ) மே ஏழாம் நாள் கோவை அண்ணாமலை அரங்கில் சிறப்புற நடைபெற்றன. விழாவைப் பவள விழாக்குழு மற்றும் புதுமலர் பதிப்பகம் ஆகியவை ஒருங்கிணைத்தன.

சூலூர் பாவேந்தர் பேரவையைச் சார்ந்த செந்தலை ந. கவுதமன் அவர்கள் விழாத்தலைமை ஏற்க, ஓவியர் ஜீவா, ஓவியர் சுந்தரன், எழுத்தாளர் அவைநாயகம், தமிழ்நாடு இலக்கியப் பேரவை பொன்முடி, சுப்பையன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதியவெற்பன் அவர்களின் அரசியல் மற்றும் பண்பாட்டுப் பின்னணி மற்றும் அவரது பங்களிப்புக் குறித்துப் புதுமலர் இதழாசிரியர் கண. குறிஞ்சி அவர்கள் தொடக்க உரை நிகழ்த்தினார். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்தைச் சார்ந்த தமிழ்ச்செல்வன், எழுத்தாளர்கள் பாமரன், ச.பாலமுருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

"தமிழ் அச்சுப்பண்பாட்டில் பொதிய வெற்பன் பங்களிப்பு" எனும் பொருளில் சென்னைப் பல்கலைக்கழக மேனாள் தமிழ்ப் பேராசிரியர் வீ. அரசு அவர்களும், " பொதியவெற்பன் திறனாய்வு நெறியியல் " எனும் பொருளில் சென்னை திருத்தங்கல் நாடார் கல்லூரிப் பேராசிரியர் இரா. கந்தசாமி அவர்களும் சிறப்புரையாற்றினர்.

திராவிட இயக்க ஒவ்வாமை நோயிலிருத்தல்/ தமிழின் நிறமும் ஆரிய வர்ணமும் / கண்டறியாதன கண்டேன் / சமயச்சார்பின்மை / வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்/ வியூகத்தில் சிக்கிக்கொண்ட வீர அபிமன்யுவின் கதை / பெரியாரும் தமிழியல் அறிஞர்களும் புதுமைப்பித்தன் கதைகள் அகலமும் ஆழமும் / கருமை, செம்மை, வெண்மையைக் கடந்து ஆகிய பொதிய வெற்பனின் ஒன்பது நூல்கள் குறித்துக் கரு. ஆறுமுகத்தமிழன், வீ. அரசு, செந்தலை ந.கௌதமன், இரா. கந்தசாமி, ஜமாலன், கண. குறிஞ்சி, பா. மதிவாணன், பொன்.குமார், சண்முக. விமல்குமார் ஆகிய ஒன்பது பேர் எழுதிய கட்டுரைகள் **" பொதியவெற்பன் நூல்கள்: ஆற்றுப்படை மதிப்பீடுகள்"** எனும் பெயரில் கண. குறிஞ்சி அவர்களால் புதுமலர் பதிப்பகத்தின் 41-வது நூலாகத் வெளியிடப் பட்டுள்ளது. அந்நூலைக் கோவை விஜயா பதிப்பக நிறுவனர் மு. வேலாயுதம் அவர்கள் வெளியிட, சரோஜினி பதிப்பக நிறுவனர்

வழக்கறிஞர் கே சுப்பிரமணியம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

பொதிய வெற்பன் எழுதிய "பெரியாரும் தமிழியல் ஆய்வறிஞர்களும்" எனும் கருப்புப் பிரதிகள் பதிப்பகத்தின் நூலைத் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநிலப் பொருளாளர் ப. பா. ரமணி அவர்கள் வெளியிட, களம் இலக்கிய அமைப்பைச் சார்ந்த முனைவர் செ. துரைமுருகன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தியாக வேங்கை வ.உ.சி. அவர்கள் குறித்துத் தொடர்ந்து இணைய வழியில் எழுதிவந்த பொதியவெற்பன் அவர்களின் அரும்பணியைப் பாராட்டி வ.உ.சி. ஆய்வு வட்டம் சார்பாகக் கண. குறிஞ்சி அவர்களால் வ.உ.சி. அவர்களின் சிலை பொதிய வெற்பன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

எழுத்தாளர் புதுமைப்பித்தன் அவர்களுக்குப் பொதிய வெற்பன் ஆற்றிய பணிகளைப் பாராட்டிப் பேராசிரியர் மங்கை மற்றும் நன்செய் பதிப்பகம் தம்பி ஆகியோர் புதுமைப் பித்தனின் சிலையைப்பொதியவெற்பன் அவர்களுக்கு வழங்கினர்.

விழாவில் பங்கேற்ற ஆளுமைகளுக்குப் புதுமலர் பதிப்பகம் சார்பாகவும், பொதிய வெற்பன் அவர்கள் சார்பாகவும் நூல்கள் வழங்கப் பட்டன. பொதிய வெற்பன் அவர்களின் குடும்பத்தினருக்கு புதுமலர் பதிப்பகம் சரார்பாகவும், அருணமுறுவல் குடும்பத்தினர் சார்பாகவும் சிறப்புச் செய்யப்பட்டது.

இறுதியில் பொதிய வெற்பன் அவர்கள் நிறைவுரையும், நன்றியுரையும் ஆற்ற, விழா இனிதே நிறைவுற்றது.

இறுதிவரை அரங்கு நிறைந்த இவ்விழாவில் கௌரா பதிப்பக நிறுவனர் இராஜசேகர், கனடா செல்வக்குமார், எழுத்தாளர் சுப்ரபாரதிமணியன், கவிஞர் மீனாட்சிசுந்தரம் உள்ளிட்ட படைப்பாளிகளும், இலக்கிய ஆர்வலர்களும் பெருவாரியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இவ்விழா முழுவதையும் மார்னிங் ஸ்டார் காணொலி அமைப்பு நிறுவனர் ஜெயபால் ராமய்யா அவர்கள் படம் பிடித்து வெளி யிட்டது, விழாவில் பங்கேற்காத பலருக்கும் மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. அவருக்குச் சிறப்பு நன்றி.



செந்தலை கவுதமன்



பேராசிரியர் மங்கை, கவிஞர் தம்பி ஆகியோர் பொதியவெற்பன் அவர்களுக்குப் புதுமைப்பித்தன் சிலை வழங்கல். அருகில் எழுத்தாளர் தமிழ்ச் செல்வன் மற்றும் விஜயா பதிப்பகம் வேலாயுதம் ஆகியோர்



வ உ சி ஆய்வு வட்டம் சார்பாகப் பொதிய வெற்பன் அவர்களுக்குக் கண. குறிஞ்சி அவர்கள் வ. உ. சி. சிலை வழங்குதல். அருகில் பேராசிரியர் வீ. அரசு மற்றும் விஜயா பதிப்பகம் வேலாயுதம் ஆகியோர்




பேராசிரியர் வீ.அரசு



முதல் நூல் வெளியீட்டு நிகழ்வு.



இரண்டாம் நூல் வெளியீட்டு நிகழ்வு.



எழுத்தாளர் ச. தமிழ்செல்வன்



எழுத்தாளர் பாமரன்



பேராசிரியர் இரா. கந்தசாமி




எழுத்தாளர் பாலமுருகன்



புதுமலர் இதழாசிரியர் கண. குறிஞ்சி




தமிழியல் ஆய்வறிஞர் பொதியவெற்பன்





குடும்பப் படம்




பொதியவெற்பன் துணைவியாருடன்



பார்வையாளர் பகுதி



பொதியவெற்பன்

# உங்கள் மனஓசை

"புது மலர்" சமூக கலை இலக்கியக் காலாண்டிதழ் (ஏப்ரல் ஜூன் 2023 ) படித்து மகிழ்ந்தேன்.

மொழி உரிமைப் போராளி, பஞ்சாப் மாநிலத்தின் பேராசிரியர் ஜோகா சிங் அவர்களின் விரிவான பேட்டி மிகவும் சிறப்பு.

தாய்மொழியின் முக்கியத்துவம் மற்றும் அவசியத்தை மிகவும் செறிவான முறையில் எடுத்தியம்புகிறது.

தாய் மொழி மூலமாகக் கற்றுக் கொள்வதை வெறும் உணர்ச்சிப் பூர்வமாகவோ, அடையாளச் சிக்கலாகவோ கருதாமல், தாய் மொழியை இறுக்கமாக இணைக்கும்போதுதான், அனைத்துத் தேசியத் துறைகளிலும் வளர்ச்சி ஏற்படும் என்பதை, பேராசிரியர் ஜோகா சிங் காத்திரமாக எடுத்துரைக்கிறார்.

அந்தந்தத் தேசிய இனங்களின் தாய் மொழி மூலமாகவே சிந்திப்பதும், கற்பதும் சிறந்த பலனைத் தரும் என்பதைப் பன்னெடுங்காலமாகச் சான்றோர் பெருமக்கள் தொடர்ந்து வற்புறுத்தி வருவதை, ஜோகா சிங்கின் கருத்துக்களோடு பொருத்திப் பார்க்கத் தோன்றுகிறது.

'கிளியர்' இயக்கம், தமிழ்நாட்டில் நடைபெற்ற இந்தித் திணிப்புப் போராட்டம் பிற மொழிகளை அழிப்பதில் இந்தி மொழி செலுத்தும் ஆதிக்கம், சமசுகிருதமயமாக்கல் மட்டுமின்றி, சிறிய மொழியான சமசுகிருதத்துக்கு ஒதுக்கப்படும் மிகையான நிதி குறித்தும் பேராசிரியர் ஜோகா சிங் பரந்துபட்ட தமது பார்வையினை புதுமலர் வாசகர்களுக்கு வழங்கியுள்ளார்.

தாய்மொழியைப் பரப்புவதற்கும் போராட்டங்களில் பங்களிப்புச் செய்வதற்கும், தமிழ்நாட்டு மொழிப் போராளிகளும், தமிழ்நாட்டு மக்களும் சிறப்புப் பாராட்டுக்குத் தகுதியுடையவர்கள் எனப் பேரா. ஜோகா சிங் தெரிவித்திருப்பது, நம்முடைய முன்னோடி மொழிப் போர் ஈகியரைப் பெருமைப் படுத்துவதாகும்.

'தாய்மொழியே திறவுகோல் "எனும் பேரா. ஜோகாசிங்கின் நூல் 11 மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளதும், அதன் தமிழ் மொழிபெயர்ப்பு, நான்கு பதிப்புகள் கண்டிருப்பதும், பேரா. ஜோகா சிங்கின் தாய் மொழி குறித்த கருத்துக்களுக்குக் கிட்டியுள்ள பெரிய அங்கீகாரமாகும்.

சமசுகிருதம் மற்றும் இந்தி மொழிகளுக்குக் கிட்டியுள்ள

பெரும் சலுகைகளும், நிதியும் பிற இந்திய மொழிகளுக்கு இழைக்கப்படுகின்ற பாரபட்சமாகும்.

ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே கடவுள் எனும் ஒற்றைத் தன்மையின் அரசியலை நாம் சரி வர புரிந்து கொள்ள வேண்டும். எட்டாவது அட்டவணையிலுள்ள, தமிழ் உள்ளிட்ட 22 மொழிகளும், ஒன்றியத்தின் சமமான அலுவல் மொழிகளாக அங்கிகரிக்கப்பட வேண்டும் என, "புதுமலர்" எழுப்புகின்ற குரல், இன்றையச் சூழலில் மிகவும் முக்கியமானதாகும்.

இந்தி மொழித் திணிப்புக்கு எதிரான போரில், தமிழர்கள் செய்துள்ள உயிரீகம், வேறெங்கும் நிகழ்ந்திராத ஈக வரலாறாகும் அது இன்றும் ஆறாத் தணலாகவே உள்ளது என்பதே உண்மையாகும். எனவே, தாய் மொழி உரிமை காத்திட, ஒத்த கருத்துக்கள் கொண்டோர் அணியமாக வேண்டியது அவசியமாகும்.

சமஸ்கிருதம், பொதுப் புத்தியில், வடமொழி என அழைக்கப்பட்டாலும், வடமொழி என்பது சமஸ்கிருதம் அல்ல என்பதும் அது பிராகிருத மொழியை மட்டுமே குறித்தது என்பதை, திரு. கணியன் பாலன் அவர்களது கட்டுரை நிறுவுகின்றது.

இதே கருத்தைப் புலவர் இராசு அவர்களது கட்டுரை யில்(தொல்லியல் நோக்கில் தமிழ்ச் சங்கம், இருப்பும் சிறப்பும் பக்கம் 88 மற்றும் 89, புதுமலர் இதழ் ஏப்ரல் சூன் 2023) "இங்கே வட மொழி என்று கூறுவது வட திசை மொழியாகிய, பாகதம் எனும் பிராகிருத மொழியை, சங்ககாலத்தில் சமஸ்கிருதம் எழுத்து வடிவம் பெறவில்லை. மகாபாரதமும், பிராகிருத நூலே எனக் குறிப்பிடுவதை, இத்துடன் பொருத்திப் பார்க்க வேண்டும்.

கலை, அறிவியல், தொழில் நுட்ப நூல்கள் பல களப்பிரர் படையெடுப்பால் அழிந்து போனது மட்டுமின்றி, அவற்றின் ஒரு பகுதி சமஸ்கிருத மயமாக்கப்பட்டுள்ளதை தமது கட்டுரையில் திரு. கணியன் பாலன் முன்வைக்கிறார்.


நமது தமிழ் மொழி சமஸ்கிருத்தை விட 1500 ஆண்டுகள் முன்பே எழுத்தை கொண்ட மொழியாகவும், 1000 வருடங்களுக்கு முன்பே இலக்கியத்தைக் கொண்ட மொழியாகவும், இருந்துள்ளதை பல்வேறு எடுத்துக்காட்டுகளுடனும், சான்றுகளுடனும் சுட்டிக் காட்டுகிறார். தமிழ் மொழியொன்றே இலக்கண மொழியென்று ஆணித்தரமாக நிறுவுகின்ற கணியன் பாலன் அவர்களது ஆய்வுக் கண்ணோட்டம் பாராட்டத்தக்கதாகும். மேலும் புதுமலர் இதழ் ஆசிரியர், தோழர் கண. குறிஞ்சி அவர்களது, எழுத்து மற்றும் இதழியல் பணியை மனமாரப் பாராட்டுகிறேன்.

**இரவிச்சந்திரன்**


ஈரோடு




**பஞ்சாப் பேராசிரியர் ஜோகாசிங் புதுமலர் இரண்டாம் இதழுடன்..**



# புத்தகப் பேழை





---

**பழந்தமிழ்ச் சமுதாயமும் வரலாறும்**


புத்தகம் 1
பக்கங்கள்-556
புத்தகம் 2
பக்கங்கள்-572
நூலாசியர்-கணியன் பாலன்
விலை-ரூ.2650
( இரண்டு பாகங்களும் சேர்த்து )
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,
சென்னை.
044 2625 1968, 2625 8410, 4860 1884.




**இந்திய இலக்கியச் சிற்பிகள்**
**கோ. கேசவன்**
வீ அரசு
பக்கங்கள்-128
விலை-ரூ.50
சாகித்திய அகாதெமி
சென்னை
044 2431 1741, 2435 4815

---

**திருவள்ளுவரும் பிராமணியமும்**
ஆங்கிலத்தில்-காட்டுமன்னார்கோயில்
மா.சோமசுந்தரம் பிள்ளை ( 1946 )
தமிழில் பேராசிரியர் நா.பெரியசாமி
பதிப்பாசிரியர்-முனைவர் கு.திருமாறன்.
பக்கங்கள்-88
விலை-ரூ.120.
பாவாணர் தமிழியக்கம்
திருச்சி.
94439 95657






**பொதிய வெற்பன் நூல்கள் : ஆற்றுப்படை மதிப்பீடுகள்.**

கண. குறிஞ்சி

பக்கங்கள்-128

விலை-ரூ.120.

புதுமலர் பதிப்பகம்

ஈரோடு.

94433 07681

---

**கப்பலோட்டிய தமிழனின் பன்முக ஆளுமை**

கண. குறிஞ்சி

பக்கங்கள்-92

விலை-ரூ.100.

சரோஜினி பதிப்பகம்

கோவை.

94862 80307, 63748 32622



## இதழுக்கு ஆதரவு நல்கியோருக்கு நன்றி

| திருவாளர்கள் | உரூபா |
| --- | --- |
| ஜெயபால் ராமையா, கோவை | 1000 |
| பாரதி கண்ணம்மா சித்தோடு | 1000 |
| வேலிறையன் முத்தூர் | 1000 |
| ரமேஷ் பெங்களூரு | 1000 |

## புதுமலர் இதழ் கிடைக்கும் இடங்கள்

| | |
| --- | --- |
| **பாரதி புத்தகாலயம், சென்னை.** | **72995 79627** |
| **ஈரோடு.** | **92454 48353** |
| **டிஸ்கவரி புக் பேலஸ் சென்னை.** | **87545 07070** |
| **பனுவல் புத்தக நிலையம் சென்னை.** | **97890 09666** |
| **பரிசல் புத்தக நிலையம் சென்னை.** | **93828 53646** |
| **விஜயா பதிப்பகம் கோவை.** | **90470 87058** |
| **என் சி பி ஹெச் மதுரை.** | **94430 44106** |
| **திருச்சி** | **94425 88495** |
| **கோவை.** | **94427 64286** |
| **ஈரோடு.** | **90475 71857** |
| **எதிர் வெளியீடு பொள்ளாச்சி** | **98650 05084** |
| **பாலம் புத்தக நிலையம் சேலம்** | **94432 22007** |
| **நூல் அங்காடி மதுரை** | **74021 09000** |

❖❖❖